ஆன்டன் செக்காவ்

ஆகச் சிறந்த கதைகள்

தமிழில் சு.ஆ. வெங்கட சுப்புராய நாயகர்

ஆன்டன் செக்காவ் – ஆகச் சிறந்த கதைகள்

தமிழில் சு.ஆ.வெங்கட சுப்புராய நாயகர்



மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

சு. ஆ. வெங்கட சுப்புராய நாயகர்.

பிரஞ்சு, தமிழ், ஆங்கில மொழிகளுக்கிடையே மொழிப்பாலம் அமைத்து வரும் முனைவர் சு.ஆ. வெங்கட சுப்புராய நாயகர் (1963), கடந்த 30 ஆண்டுகளாகப் புதுச்சேரியில் பிரஞ்சுப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ஆரவாரமின்றி இலக்கியப் பணியாற்றிவரும் நாயகர், இதுவரை நான்கு புதினங்களைப் பிரஞ்சிலிருந்து நேரடியாகத் தமிழாக்கம் செய்துள்ளார். மேலும், பிரஞ்சுச் சிறுகதைகளின் மொழியாக்கத் தொகுப்புகள் இரண்டினையும் வெளியிட்டுள்ளார். தமிழிலிருந்து கதைகள், கவிதைகள் ஆகியவற்றையும்ப் பிரஞ்சில் மொழியாக்கம் செய்துள்ளார்.

நம் சங்க இலக்கியச் செல்வங்களான குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகியவற்றை முழுமையாக வெங்கட சுப்புராய நாயகர் பிரஞ்சு மொழியாக்கம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். நம் மொழியின் தொன்மை, செம்மை ஆகியவற்றைப் பிரஞ்சு மக்கள் அறிய இது வாய்ப்பாக அமையும்.

பல பல்கலைக்கழகங்களின் தேர்வராகவும், பல இலக்கிய, சமூக அமைப்புகளின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார். 1994, 2008 ஆகிய ஆண்டுகளில் பிரான்ஸ் சென்று, அரசின் உதவியுடன் பிரான்ஸில் சில மாதங்கள் பயிற்சியும், நூலகங்களில் ஆய்வும் மேற்கொண்டவர். இவரது பிரஞ்சு - தமிழ் மொழிபெயர்ப்புத்திட்டம் ஒன்றினை, 2018 ஆம் ஆண்டு மார்ச் முதல் மூன்று மாதங்கள் பிரான்ஸில் தங்கி முடிக்க பிரஞ்சு அரசு உதவிசெய்தது.

தொடர்ந்து மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுவரும் இவ ருடைய மொழியாக்க நடையின் எளிமை கிரா, பிரபஞ்சன் உள்ளிட்ட இலக்கிய ஆளுமைகளைக் கவர்ந்து பாராட்டைப் பெற்றதாகும்.

******

ஆன்டன் செக்காவைக் கொண்டாடுவோம்

(மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை)

புத்தக ஆர்வலரான நண்பருக்குப் பரிசளிக்கச் சிறுகதைத் தொகுப்பினைத் தேடுபவரா நீங்கள் ? எவ்விதத் தயக்கமுமின்றிச் செக்காவின் கதைகளை நான் பரிந்துரைப்பேன். சிறுகதை எழுதும் ஆர்வமுடைய இளம் எழுத்தாளரா நீங்கள் ? அப்பொழுதும் ஆன்டன் செக்காவின் கதைகள் உங்களுக்குச் சில ஆலோசனைகளைக் கூறக்கூடும். மன இறுக்கத்தைக் குறைக்கவும், சக மனிதர்களுடன் உரையாடும்போது குதூகலத்தை அதிகரிக்கவும் செக்காவின் கதைகள் உங்களுக்குத் துணை நிற்கும். இத்தகைய ஆற்றல் படைத்த ஆன்டன் செக்காவ், ரஷ்ய இலக்கியம் மட்டுமின்றி உலக இலக்கிய வரலாற்றில் தனி முத்திரை பதித்த வராவார். பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பலதரப்பட்ட வாசகர்களைக் கவர்ந்த அவருடைய சிறுகதைகள், பல இளம் எழுத்தாளர்கள் உருவாகக் காரணமாகவும் அமைந்துள்ளன. தமிழ் எழுத்தாளர்களில் பலர், செக்காவின் எழுத்தால் ஈர்க்கப்பட்டவர்களாகவும் செக்காவின் படைப்புகளை ஆராதிப் பவர்களாகவும் இருந்தனர்/இருக்கின்றனர் என்பதே இதற்குச் சான்றாகும்.

உப்புச்சப்பற்ற, சலிப்புமிக்க, அர்த்தம் புரியாத, துயரம் நிறைந்த இந்த வாழ்க்கையின் நிதர்சனத்தை இவ்வளவு சுவாரசியமாக எந்த எழுத்தாளராலும் வர்ணிக்க இயலாது. வாழ்வின் அத்தனை அம்சங்களையும் செக்காவ் தனக்கேயுரிய மாறுபட்டக் கோணத்தில் அணுகியிருப்பதை அவருடைய

கதைகளில் அறியலாம். செக்காவின் கதையுலகில் உள்ள மனிதர்கள், நம்மைப் போல் சராசரியானவர் களாகத் தோன்றலாம். ஆனால், வெளியில் புலப் படாத மனித மனத்தின் நற்குணங்கள், பலவீனங் கள், கசடுகள், வன்மங்கள், ஏக்கங்கள், துயரங்கள், எதிர்பார்ப்புகள் எனப் பல்வேறு அம்சங்களைச் செக்காவ் விவரிப்பதுடன் மனிதனின் கீழ்மைப் பண்புகளுக்குக் காரணமான சமூகத்தை விமர்சிக் கவும் தயங்குவதில்லை. செக்காவின் கதைகளை வாசிப்பவர், ஏதாவது ஒரு கட்டத்தில் தனக்குள் ளாகவோ, தன்னை மீறி வாய்விட்டோ சிரித்து விடுவர். ஏனெனில், செக்காவின் எள்ளல் நடை யில், நகைச்சுவை இயல்பாகக் கலந்திருக்கும். தன் கருத்துக்களைத் தயக்கமின்றித் தெரிவிக்க அவ ருக்கு இந்த நகைச்சுவை உதவுகிறது.

இப்படி நகைச்சுவைமிக்கப் படைப்புக ளைத் தந்த செக்காவ் கடந்து வந்த வாழ்க்கைப் பாதை மிகவும் கரடுமுரடானதாகவே இருந்திருக் கிறது. செக்காவின் குடும்பம் அளவில் மிகவும் பெரியது. ஆனால், வசதியோ குறைவு. அவருடைய தந்தை பவேல் யெகோரோவிச், மளிகைக் கடை யினை நடத்தி வந்தார். அவருக்கு ஐந்து பிள் ளைகள். ஒரு பெண். அலக்ஸாண்டர், நிக்கோலே, ஆன்டன் (செக்காவ்), மேரி, இவான், மைக்கேல். ரஷ்யாவின் நகரான தேகன்ராகில் 1860 ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் நாள் ஆன்டன் பிறந் தார். இதில் இவான் இரண்டு வயதிலேயே இறந்து போக, மேரி 1957 ஆம் ஆண்டில் தன் 94 ஆவது வயதில் மறைந்தார்.

அவருடைய ஞானஸ்நானம் 1860, ஜனவரி 27இல் நடைபெற்று, ஆன்டோனியங் எனப் பெயர்

சூட்டப்பட்டார். ஆன்டனின் 7ஆவது வயதில், கிரேக்கத் தேவாலயப் பள்ளிக்குக் கல்வி கற்கச் சென்றார். அப்பாவின் கடைக்கு உதவும் அதேவேளையில், தேவாலயத்தில் நடக்கும் இசைப்பயிற்சிக்கும் அவர் சென்றுவருவார்.

1869இல் தேகன்ராக் நகரின் உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார். தந்தையின் வியாபாரம் நொடிந்துபோகவே, செக்காவின் 16வது வயதில், அவருடைய குடும்பம் தேகன்ராக் கைவிட்டு வெளியேறி மாஸ்கோ செல்ல வேண்டிய கட்டாயத்துக்குள்ளானது. அங்கு மிகவும் வறுமையான சூழலில், வாழ்க்கையை நகர்த்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு அவருடைய தந்தை தள்ளப்பட்டார். ஆனால், செக்காவ் மட்டும் தன் பள்ளிப்படிப்பை முடிக்க வேண்டி தேகன்ராக்கிலேயே தங்கியிருந்தார். அங்கு இருந்த மூன்று ஆண்டுகளும், தன் பணத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார்.

1879இல் மெட்ரிக் தேர்வு முடிந்ததும், ஆன்டன் மாஸ்கோவில் உள்ள தன் குடும்பத்தினருடன் போய்ச் சேர்ந்துகொண்டார். உடனே, மாஸ்கோ பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அதே ஆண்டில், மருத்துவப் படிப்பிற்காகும் செலவைச் சமாளிக்க நகைச்சுவை பத்திரிக்கைகளுக்குச் சில படைப்புகளை எழுதி அனுப்பத் தொடங்கினார். அவரது முதல் கதை ஸ்த்ரேஸோக்கா என்னும் நகைச்சுவை இதழில் 1880இல் வெளியானது. அவர் எழுதத் தொடங்கிய முதல் ஏழு ஆண்டுகளில் மட்டும் ஏறக்குறைய 400க்கும் மேற்பட்ட கதைகள், புதினங்கள்,

வர்ணனைகள், தொடர்கள் எனப் பல்வேறு படைப் புகளை வெளியிட்டார். பல புனைபெயர்களைத் தாங்கி இப்படைப்புகள் வெளியாகின. அவற்றுள், 'என் சகோதரனின் சகோதரன்', 'வாடிக்கையாளர் இல்லாத மருத்துவர்', குடலற்ற மனிதன்', 'அவசரக் குடுக்கை' எனச் சில வித்தியாசமான புனைப்பெ யர்களும் அடங்கும்.

1884ஆம் ஆண்டு மருத்துவப்படிப்பை முடித்துப் பட்டம் பெற்றபின், வோஸ்கிரேசன்ஸி கில் உள்ள ஸெம்ஸ்டோவோ மருத்துவமனையில் பணிக்குச் சேர்ந்தார். அவர் மருத்துவரான அதே ஆண்டில் உடல் உபாதைகளும் அவரைச் சோதிக் கத் தொடங்கின. ஆனால், அவரது இலக்கியப் படைப்புகள் தடையின்றி வந்துக்கொண்டிருந்தன. அடுத்த ஆண்டில் (1885), அவருடைய கதைகள் அடங்கிய தொகுப்பான 'மோட்லி கதைகள்', 'ஆன் டோஷா' செக்கோன்டே' என்னும் ஆசிரியர் பெய ருடன் வெளிவந்தது. 1886இல் இரண்டாம் முறை யாக அவருடைய உடல்நிலை பாதிக்கப்பட்டது.

1888இல் பீட்டர்ஸ்பர்கில் உள்ள நிறுவனம் ஒன்று புஷ்கின் விருதும் 500 ரூபிள்களும் வழங்கி அவரைப் பாராட்டியது. 1889இல் ரஷ்ய இலக்கிய அன்பர்களின் அமைப்பின் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். 1890இல் சைபீரியா வழியாகச் சகாலியன் தீவிற்குப் பயணம் மேற்கொண்டார். சிங் கப்பூர், இந்தியா, இலங்கை, சூயஸ் கால்வாய் வழி யாக 1890இல் மீண்டும் மாஸ்கோவுக்குத் திரும்பி னார்.

அந்த ஆண்டின் டிசம்பர் மாதம் 23ஆம் நாள் அவரது உடல்நிலை மேலும் நலிவடைந்

தது. அவரது நாட்குறிப்பில், 'எனக்கு இருமல் வருகிறது. இதயத்துடிப்பு அதிகமாகிறது. இவையெல்லாம் எதற்கான அறிகுறி என்று எனக்குத் தெரியவில்லை' என்கிறார். உடல்நிலையை பொருட்படுத்தாமல், மேற்கு ஐரோப்பாவின் வியன்னா, வெனீஸ், ரோம், நேப்பிள்ஸ், பாரீஸ் எனப் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டார் செக்காவ்.

1892ஆம் ஆண்டில், செக்காவ் நோவ்கோர்ட் பகுதிக்குச் சென்றார். பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு துன்பப்படும் அங்குள்ள மக்களின் துயரினைப் போக்க அமைப்பு ஒன்றை உண்டாக்கி அதன்மூலம் ஏழை விவசாயிகளுக்குக் குதிரைகளும் மாடுகளும் வழங்க ஏற்பாடு செய்தார். **13,000** ரூபிள்களுக்குச் செர்புய்க்கோவ் வட்டாரத்தில் உள்ள மெலிக்கோவோ என்னும் கிராமத்தில் ஒரு பண்ணையை வாங்கிக் குடும்பத்தோடு அந்த இடத்தில் குடியேறினார். அங்குப் பரவியுள்ள காலராவைச் சமாளிக்க, செக்காவ் அவ்வட்டாரத்தின் சிறப்பு மருத்துவக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த செக்காவ், தன்னைப் பாதித்துள்ள நோயினால் தொடர்ந்து அவதிப்பட்டார். **1893**இல் அவருடைய உடல்நிலை மேலும் மோசமாகியது. 'இருமல் அதிகமாக ஏற்படுகிறது. இதயத்துடிப்பும் அதிகரிக்கிறது. செரிமானக் கோளாறாலும், தலைவலியாலும் அவதிப்படுகிறேன்'. என்று தன் நாட்குறிப்பில் எழுதியிருந்தார்.

அவருடைய உடல்நலத்தைக் கவனிக்கும் பொருட்டுப் பிரான்ஸின் தென் பகுதிக்குச் சென்று

தங்கி ஓய்வெடுக்குமாறு மருத்துவர்கள் அவருக்கு ஆலோசனை கூறினார்கள். இதற்கிடையில் மீண்டும் ஒருமுறை, **1896**இல் நுரையீரலில் ரத்தக் கசிவு ஏற்பட்டது.

1897ஆம் ஆண்டு செக்காவின் வாழ்க்கையில் முக்கியமான ஆண்டாகும். செர்புயிக்கோவ் வட்டாரத்தில் உள்ள மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் முழுமூச்சுடன் அவர் ஈடுபட்டார். மெலக்கோவோ, தலேழ், நொவேசியோல்கி ஆகிய கிராமங்களில் பல பள்ளிக்கூடங்களைப் பெரும்பாலும் அவர் சொந்த செலவிலேயே உருவாக்கினார்.

மாஸ்கோ உணவு விடுதி ஒன்றில் நண்பர் சுவோரின் தந்த விருந்தில் கலந்துகொண்டபோது, செக்காவுக்குத் திடீரென நுரையீரலில் மீண்டும் ரத்தக் கசிவு ஏற்பட்டது. உடனடியாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர். மது அதிகம் அருந்தியிருந்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் ஆய்வில் தெரிந்தது. இனி தன் உணவுப் பழக்க வழக்கங்களை முற்றிலுமாக அவர் மாற்றியாக வேண்டும் என மருத்துவர்கள் அவருக்கு அறிவுரை கூறினார்கள். எனவே, குளிர்காலத்தைப் பிரான்ஸின் தென் பகுதியில் கழிக்கச் சென்றார்.

பிரான்ஸில் ஏற்பட்ட டிரெஃபுயிஸ் விவகாரத்தில் செக்காவ் பெரும் ஈடுபாடு காட்டினார். தொவோய் விரேமா பத்திரிக்கையில் வெளியான டிரெஃபுயிஸீக்கு எதிரான கருத்துகள் அவருக்கு வெறுப்பை உண்டாக்கின. எனவே, சுவோரினிடமிருந்து பிரிந்தார். **1898**இல் அவருடைய தந்தையும் மறைந்தார். மருத்துவர்கள் தொடர்ந்து வற்புறுத்தவே, கிரிகியா பகுதியில் குடும்பத்துடன் போய்

வசிப்பது என்ற முடிவை எடுத்தார். அப்பகுதியில் ஒரு மனையை வாங்கி யால்டா அருகில் வீடு ஒன் றைக் கட்டினார். அடுத்த ஆண்டு, மெலிக்கோ வோவில் உள்ள தன் பண்ணையை விற்றுவிட்டுக் கிரிகியாவில் உள்ள புது வீட்டில் குடியேறினார்.

இதுவரை தான் எழுதியவை, இனி எழுத இருப்பவை எனத் தன் படைப்புகள் முழுவதுக்கு மான பதிப்புரிமையை 75,000 ரூபிள்களுக்குப் பீட் டர்ஸ்பர்க்கின் பதிப்பாளர் மார்க்ஸ்க்கு விற்றுவிடு கிறார்.

1900ஆம் ஆண்டு அவருடைய உடல் நிலை மிகவும் மோசமடைகிறது. அடுத்த ஆண்டு, அதாவது 1901ஆம் ஆண்டு மே 25ஆம் நாளில் மாஸ்கோ கலை நாடக மன்றத்தின் நடிகையான ஓல்கா நிப்பரை மணக்கிறார், செக்காவ். ஆனால், அவருடைய மண வாழ்க்கை நீண்ட காலம் நீடிக்க வில்லை. 1903இல் இருமல் அதிகமாகிச் செக்காவ் படுக்கையில் வீழ்கிறார். 1904, மே மாதம் முதல் வீட்டிலேயே முடங்கிக்கிடந்த செக்காவ், ஜீன் 3ஆம் நாள் ஜெர்மனியில் உள்ள பேடன்வல்லர் என்னும் இயற்கையான சுகாதாரமான நகரில் ஓய்வெடுக்க மனைவியுடன் செல்கிறார். அங்கேயே அவருக்கு நிரந்தர ஓய்வு கிடைத்து ஜூலை 2ஆம் நாள் இறந் துபோகிறார். மாஸ்கோவின் நொவோடெவிச்சி ஆசிரமத்தின் கல்லறையில் அவர் அடக்கம் செய் யப்படுகிறார்.

செக்காவ் மறைந்து நூறு ஆண்டுகள் கடந் துவிட்டபோதிலும், அவரது படைப்புகள் நம்மை ஈர்க்கவும் அவற்றை நாம் கொண்டாடவும் முக்கியக் காரணமாக அமைபவை, அவற்றில் உள்ள எளி

மையும் யதார்த்தமுமாகும். அவருடைய சிறுகதை கள் பல்வேறு கால கட்டங்களில் தமிழில் வெளி வந்துள்ளன. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளக் கதைகளில் பெரும்பாலானவை, இதுவரை தமி ழில் வெளிவராதனவாகும். செக்காவின் படைப்பு கள் சிலவற்றில் பிரஞ்சுச் சொற்களும் காணப்படு கின்றன. எனவே, ஆங்கிலம் மட்டுமின்றி பிரஞ்சு மொழியாக்கங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தமி ழாக்கம் செய்திருக்கிறேன்.

இந்த மொழியாக்க நூல் வர ஊக்கமளித் ததோடு, அவ்வப்பொழுது நினைவூட்டி, துரிதப்ப டுத்தி 'பின்னுரை' என்னும் பெயரில் செக்காவின் புகழினைப் போற்றிச் சிறப்புச் செய்துள்ள தமிழின் மூத்த எழுத்தாளர் கி.ரா அவர்களுக்கு நன்றி.

பதிப்புலகில் தொழில்நேர்த்திக்கு முக்கியத்துவம ளிக்கும் 'தடாகம்' பதிப்பகம் வழக்கம் போல் இப் புத்தகத்தைச் செம்மையாக வெளியிட்டுள்ளது. அதன் தலைமைப் பொறுப்பாளர் நண்பர் திரு. அமுதரசன் அவர்களுக்கும் பதிப்பக ஊழியர்க ளுக்கும் நன்றி.

என் மற்ற நூல்களைப் போல், இந்த நூலின் தட்டச்சுப்படியினையும் ஆர்வமுடன் வாசித்து பிழைகளைக் களைந்த நண்பர் பாவலர் சீனு. தமிழ்மணி அவர்களுக்கும் என் மனைவி சிவகா மிக்கும் நன்றி.

மொழியாக்கத்தினைக் கணினியில் முனைப்புடன் தட்டச்சு செய்து உதவிய நண்பர் திரு. சி. இளங்கோ அவர்களுக்கும் நன்றி.

எப்போதும் போல் என் மொழியாக்க நூல் களை வரவேற்று வாழ்த்திவரும் உங்களுக்கும் நன்றி.

தோழமையுடன்



சு.ஆ. வெங்கட சுப்புராய நாயகர்
138, மெயின் ரோடு
லாசுப்பேட்டை
புதுச்சேரி – 605008
Ph : 99440 64656
vengadasouprayanayagar@gmail.com

கி.ராவின் பின்னுரை

கி. ராஜநாராயணன்

மொழிபெயர்ப்பாளர், வெங்கட சுப்புராய நாயகர் அவர்களை நாங்கள் ”நாயக்கர்” என்று தான் கொண்டாடுவோம். அவரும் இதை ஏற்றுக் கொண்டுவிட்டார்.

அவருடைய பெயரின் கடைசியில் வரும் “நாயகர்” என்று இருப்பதை எப்படியெல்லாம் போராடித் தக்க வைத்துக் கொண்டார் என்பதை அவர் சொல்லி நாம் கேட்கணும்!

நாயக்கர் பணிபுரியும் கல்லூரி எங்கள் வீட்டிலிருந்து அவருக்குக் கல்லெறியும் தூரம்தான்: அல்லது உரத்து ஒருவர் சத்தம் கொடுத்தால் கேட்கிற தூரம்தான்.

கல்லூரிக்குப் போகும் போதே எங்கள் வீட்டை ஒரு பார்வை எட்டிப்பார்த்து விட்டுப் போவார்.

இப்போது நாங்கள் இருப்பது “Q 13’ முன்பு இருந்தது “ஓ நாலு” அந்த வீட்டில் இருந்த போது தான் பழக்கம் ஆனார். அது ஒரு சுவாரசியம்!

ஒருநாள் காலை. எட்டு மணி. நாயக்கர் திடீரென்று வீட்டுக்குள் நுழைந்து எங்கள் வீட்டு சாப்பிடும் மேஜை முன்னால் வந்து உரிமையோடு உட்கார்ந்து, சாப்பிடனும், எது இருந்தாலும் பரவாயில்லை என்றார்.

அவரை பேன்டில்த்தான் நாங்கள் பார்த்திருக்கிறோம். இப்போது இடுப்பில் புதுவேட்டி மட்டும் கட்டியிருந்தார். வேட்டிக்குப் பழக்கம் இல்லாதவர்கள் அல்லது சிறிய குழந்தைகள் முதல் முதலில் வேட்டி கட்டியவர்கள் போல இருந்தது.

“பசி” என்ற அந்த வார்த்தை வேகமாக எங்களை இயக்கியது. சூடாக தோசை, அப்பதான் எல்லாமே இவருக்காக ஆக்கியது போல கொண்டு வந்து வைத்தாள் கணவதி. வேடிக்கையாக இருந்தது எனக்கு! சாப்பிட்டுவிட்டு ஓட தயாரானார். “என்னெ என்னெ” என்று நான் கேட்பதற்கு முன்னால் அவரே “வந்து சொல்றேன் எல்லாம்” என்று ஓடாமல் ஓடினார். எங்கள் வீட்டுச் சாப்பாட்டு மேஜை, இப்படி ஒரு ஆள் வந்து போனதை. அதுவும் பார்த்ததில்லை: நாங்களும் பார்த்ததில்லை. அன்றைக்கு ஏப்ரல் முதல் தேதிகூட இல்லை. சரி, பார்ப்போம் என்று காத்திருந்தோம்.

வழக்கமான உடையில், தொங்கட்டாம் பையில் வழக்கமாக அதனுள் கொதிக்கும் வெந்நீரோடு ஃபிளாஸ்க்., டப்பாவுக்குள் கொறிக்க எதாவது பலகாரம் இந்த ’அளகில்’ தான் வருவார். “நாயக்கர் பிரசாதம்” வந்தாச்சி என்று குரல் தருவேன்.

அந்த டப்பாவை யாரும் – மாணவர்கள், பேராசிரியர்கள் உட்பட யாரும் திறந்து கை நுழைக்கலாம். அப்படி ஒரு உரிமையைக் கொடுத்திருந்தார்.

கணவதியிடம் நான் சொல்வேன்: “நாயக்கர் வீட்டம்மாவைப்பாரு, மனம் சுணங்காமல் தெனமும் வகை வகையாக இப்படிச் செய்து கொடுத்தனுப்புகிறாரே”

டீ சாப்பிடத் தோன்றும் போது, அவருடைய பையிலிருந்து தன்னுடைய தம்ளரை எடுத்து மேஜை பேரில் வைப்பார். டப்பாவைத் திறந்து நூல் இழையில் தொங்கும் சிறிய டீப் பொட்டலத்தை இட்டு, ஃபிளாஸ்க்கிலிருந்து கொதிக்கும் வெந்நீரை ஒரு பெரிய மடக்கின் அளவுக்குக் கொட்டி அந்தப் பொட்டலத்தின் நூல் நுனியைப்பிடித்து

மேலும் கீழும் முக்கி எடுத்தாலே போதும் டீ தயார். கொஞ்சங் கொஞ்சமாக குடித்தால் தயாராகிவிடும் அந்த ஒல்லியான உடம்பு, எழுதவோ படிக்கவோ.

உடம்பை அப்படிப் 'பாடம்' பண்ணி வைத் திருக்கிறார்! எங்கே போனாலும் போன இடத்தில் பச்.....சைத் தண்ணிகூட குடிக்கமாட்டார். ஆனா லும் படு வைதீகர் என்று சொல்ல முடியாது. என்றா லும் இதும் ஒரு வகை "தீவிர வைதீகம் தாம்".

சாப்பாட்டு நேரத்தை "8-12-8" என்று வைத் துக் கொண்டிருக்கிறார். பூகம்பமோ புயலோ வந் தாலும் கூட இதில் எந்த மாற்றமோ தொய்வோ இல்லை!

அன்று எங்கள் வீட்டு மேஜையில் உட் கார்ந்த அந்த காலை எட்டு மணி தான் அவரின் காலைச் சாப்பாட்டு நேரம். அன்று தன்னுடைய அப்பாவின் சிரார்த்த தினம். அந்த மண்டபம் எங் கள் வீட்டுக்குப் பக்கத்தில்தான் அமைந்திருக்கி றது. வெறும் வயிற்றோடு தான் அந்த அனுட்டாங் களை செய்து முடிக்க வேண்டும். அப்படியே விட் டால் மதியம் ஆகிவிடும்.

"வயித்தைக் கலக்குது: ரொம்ப அவசரம்" என்று ஓதுவார் காதோடு சொன்னாராம் நாயக்கர்!

"ஈஸ்வரா என்று சொன்ன ஓதுவார், ஒடுபா தையைக் கை காட்டினாராம்.

"தப்பித்து அப்படி வந்தேன் என்றார்" நாயக்கர்!

நல்ல வேளை நம்மவீடு பக்கத்தில் இருந் தது" என்றார்.

"இல்லை என்றால் என்ன செய்திருப்பீர் கள்?" என்று கேட்டேன்.

“எதாவது ஒரு வழி பிறந்துவிடும்” என்றார் நாயகர்!

நாயகரின் இடத்தில் நாம் இருந்திருந்தால் இப்படிச் செய்திருப்போமா என்பது சந்தேகமே.

கி.ரா வின் வீடு அவருக்குத் தன்வீடுபோல் தோன்றியிருக்கிறது. அது எங்கள் பாக்கியமே.

***

எனது முப்பதுவயது காலத்தில், “செக் காவிய பாணி” என்ற சொல்லைக் கேள்விப்பட் டேன். அந்தச் சொல்லைத் தமிழுக்குத் தந்தவர் எனது எழுத்து நண்பர் சுந்தர ராமசாமி அவர்கள்.

அதன்பிறகு நான், ருஷ்ய எழுத்தாளரான ஆன்டன் செக்காவ் கதைகள் – தமிழுக்கு வந்த வைகளைத் – தேடித் தேடித் படிக்க ஆரம்பித்தேன்.

செக்காவ் கதைகளைத் தமிழுக்கு முதன் முதலில் கொண்டு வந்தவர் யாராக இருக்கலாம்?

டாக்டர் புரசு பாலகிருஷ்ணன் ஆக இருக் கலாம் என்று நான் டாக்டர் வீரப் பிள்ளையிடம் சொன்னபோது, அவர் எங்களின் ஜிப்மர் மருத்துவ மனைக் கல்லூரியில் எங்களுக்குப் பாடம் சொல் லித் தந்தவர் என்றார் டாக்டர். வீரப்பிள்ளை.

புரசு பாலகிருஷ்ணன் அவர்கள், செக்காவ் கதைகள் ஒரு தொகுப்பு கொண்டு வந்திருப்பதாக வும் ஞாபகம்.

மழைக்காலம் என்பதுபோல தமிழ் உரைந டைக் காலத்துக்கும் உண்டு போல. அந்தக்காலம் ஏற்பட்டு தமிழ்மொழி செழிக்க அடைமழைபோல் பிடித்து அடித்தது.

வங்கமொழியிலிருந்து, மராட்டி (காண்டே கர்), மலையாளம், கன்னடம், இந்தி மற்றும் ஆங்

கிலம், ருஷ்யம், பிரெஞ்சு, அமெரிக்கம் என்று “சோ...” என்று பெய்தது.

ருஷ்ய மொழியிலிருந்து இலக்கியம், சமூகம், அரசியல் என்று கப்பல் கப்பலாக வந்து இறங்கின.

ஒருநாள் எங்களுடைய பேச்சு ருஷ்ய எழுத்தாளரான ஆன்டன் செக்காவ் பற்றித் திரும்பியது.

படைப்பைப் பற்றி சிலாகித்துப் பேசுகிறவர்கள் படைப்பாளிகளின் வாழ்க்கையைப் பற்றியும் தெரிந்துகொள்ள அக்கறைப்படுவார்கள்

தால்ஸ்தாய் (லியோ டால்ஸ்டாய்) பற்றித் தெரிந்த அளவுக்குக்கூட செக்காவ் பற்றி எமக்குத் தெரியாது. நாயக்கருக்குப் பலது தெரிந்திருந்தது. அவர் சொன்னார். செக்காவ் தனது மனைவியுடன் ஜெர்மனியில் நாலு ஆண்டுகள் மருத்துவ சிகிச்சைகாக தங்கி இருந்தார். ஆன்டன் செக்காவ் காலமானதும் ஜெர்மனியில் தான்.

எங்களுக்குத் தெரிந்ததெல்லாம், அவருக்குக் காசநோய் வந்து குணமாகாமல் இறந்தார். இதுக்கும் அவர் ஒரு டாக்டர் என்பது மட்டும்தான்.

செக்காவ் பேரில் எனக்கு மேலும் ஒரு கூடுதல் அபிமானம் சுரந்ததுக்கு ,எனக்கும் அந்த நோய்வந்து, “ஆச்சோபோச்சோ” என்று கிடந்து “செத்துப் பிழைத்ததும்” காரணமாக இருக்கலாம்.

சிறுகதையில் வடிவம் தோன்றி உருவான காலத்தில் அதற்கு இலக்கணம் வகுத்தவர்களின் பெயர்களில் செக்காவின் பங்கும் உண்டு என்பார்கள்.

ஃபிரெஞ்ச் இலக்கியத்தில் முதன்முதலில் எழுதிய சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைத்

தொகுப்பு தமிழிலும் வந்திருக்கிறது. (அன்னம் பதிப்பகம்).

***

ருஷ்ய மொழிப் படைப்புகளில் வரும் பாத் திரங்களின் முழுப்பெயர்களை ஞாபகத்தில் வைத் துக் கொண்டு படிப்பது ரொம்பச்சிரமம். அந்தப் பெயர்களை ஒவ்வொரு பெயர்ப்பாளர்களும் ஒவ் வொரு விதமாகச் சொல்லியிருப்பார்கள். "ஆன் டன் செக்காவ் " "ஆந்தோன் சேகோவ்" இவைக ளில் எதுசரி என்று தெரியாது சங்கடப்படுவோம்.

படிப்பாளி "ஏழை" வாசகனை அதிரவைப் பதில், திணற அடிப்பதில் பரம சந்தோசம் இந்தப் பண்டித மாமணிகளுக்கு.

"அன்னாக் கரீனா" இல்லை "அன்னா கரீ னானா" என்பார்கள். (வினோபாபாவே என்பது போல) படுத்துவதில் மனிதனுக்கு ஒரு குரூர சந் தோசம் எப்பவும் உண்டு.

***

"கதை சொல்லி" சிற்றிதழில் நாயகர்வாள் பெயர்த்த செக்காவின் கதையான "சிகரட்" ஒரு சிறந்த கதை. இந்தத் தொகுப்பில் அது "வீட் டில்" என்ற தலைப்பில் வந்துள்ளது. குழந்தைகள் ஒரு தவறு செய்தால் அவர்களைத் தண்டனைக்கு உட்படுத்தாமல் கதைகள் சொல்லித் திருத்துவது எப்படி என்று செக்காவ் சொல்லுகிறார். கதைகள் சொல்லியே குழந்தைகளை நல்வழிப்படுத்த முடி யும் என்கிறார் அந்தக் கதையில்.

இதெல்லாம் நடக்கிற சங்கதியா என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

"காந்திய முறை" யென்றால், உடனே உன் னோடு நான் ரெண்டு நாளைக்குப் பேசமாட்டேன்

அல்லது ரெண்டு நாளைக்குச் சாப்பிடமாட்டேன் என்று விடுவார்!

பெற்றோர்கள் தங்களையே இப்படி வருத்திக்கொள்வது இன்னொரு வகை வலுவந்தம் என்றும் சொல்லலாம். மெய்யாகவே சாமி வந்து ஆடுகிறவர்கள் தங்களைத் தாங்களே சாட்டையால் அடித்துக்கொள்வது இன்னொருவகை வதை. “விதிவிதி” என்று சொல்லி நம் தலைநெற்றியில் நாமே – நோகாமல் – அடித்துக் கொள்கிறது. இப்படியெல்லாம் இருக்கின்றன.

***

தமிழில் நவீன உரைநடை இலக்கிய ஜாம்பவான் புதுமைப்பித்தன் ஏழ்மையில் உழன்று கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள், ரயில் பயணம் போகிறார். அவரோடு அவரின் எதிர் இருக்கையில் அவர் அறியாத அவருடைய பரமரசிகர் ஒருவர் போகிறார், புதுமைப்பித்தனையே கவனித்துக் கொண்டு.

புதுமைப்பித்தன் பசியோடு இருப்பது போல் இவருக்குத் தெரிகிறது. பேசப்பயம். அப்படி கேள்விப்பட்டிருந்தார்.

ஊரில் மழைகள் உண்டா என்று கேட்டால் யாரும் சண்டைக்கு வரமாட்டார்கள்:

இவர் வந்தாலும் வரலாம். முகம் அப்படி இருந்தது இவருக்கு.

திருச்சி ஜங்ஷனுக்குள் ரயில் நுழைந்தது. பு.பி. கையில் தாம்பூலச் செல்லத்தை எடுத்தார். இங்கேயே இறங்கிவிடுவாரோ! அவருக்குப் புறத்தாலேயே இவரும் இறங்கினார். அதோடு, அது மத்தியானச் சாப்பாட்டு நேரம்.

இந்தக் காலத்து ரயில்களைப் போல படு நீளம் இல்லாமல் ஏழு அல்லது எட்டு “டக்கு” கள் மட்டும்தான் இருக்கும்.

இறங்கும்போதே தெரிந்தது எதிர்பக்கத் தில் புத்தகக்கடை இருப்பது.

“பட்டிக்காட்டான் முட்டாய்கடையைப் பார்த்ததுபோல” என்பதெல்லாம் அந்தக்காலத் திய நகரத்துக்காரன் பழமொழி. ஏழை எழுத்தாளன் புத்தகக் கடையைப் பார்ப்பதுபோல என்பது இக் காலத்தியப் பழமொழி.

இந்த ஜங்ஷனில் ரொம்பநேரம் நிற்கும் ரயில். புத்தகக்கடையைப் பார்த்ததும் இறங்க வேண்டும் என்று தோன்றிவிட்டது இருவருக்கும்.

இறங்கி, புதுமைபித்தனின் கால் தரை யைத் தொடும்போது வாசகர் ஒரு ‘ஜாலக்’ செய் தார். மடித்த ரூபாய் நோட்டைப் புதுமைபித்தனின் ஜேபியில் பொன்னம்போலப் போட்டுவிட்டார்!

அவருடைய கதைத் தொகுப்பில் ஒரு கதை. இரண்டுபேர் பலகாரக்கடையில் சாப்பிடு கையில் மற்றவருக்கு ஒருவர் ‘சாப்பிடு சாப்பிடு’ என்று வாங்கிகொடுத்துக் கொண்டேயிருக்கிறார். மற்றவரும் சாப்பிட்டுவிட்டு, “துட்டு இருக்கு என்று சொல்லி இப்படித் துட்டை வீணடிக்காதே “என்று சொல்லிவிட்டுப் போவார்.

ஆனால் பு. பி அந்த நோட்டுக்கு உணவு எதையும் வாங்கிச்சாப்பிடவில்லை. முதல் காரி யம் வெத்திலை போயிலை என்று வாங்கிச் செல் லத்தை நிரப்பிக் கொண்டு, புத்தகமேதான் வாங்கி னார். ஆன்டன் செக்காவின் கதைகள் தொகுப்பு.

ரயில் ஏறியதும் முதலில் வெத்திலை போயிலை. அடடா என்னெ சுகம். புத்தகத்தில்

ஆழ்ந்து விட்டார். வெளியே மரங்களும் செடிக ளும் பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்தது. நேரம் போனதே தெரியவில்லை.

இந்தச் சம்பவத்தை ஏதோ ஒரு சமயத் தில் சிதம்பர ரகுநாதனிடம் அந்த எதிர் இருக்கை வாசகன் சொல்ல, ரகுநாதன் கு. அழகிரிசாமியிடம் சொல்ல, அழகிரிசாமி என்னிடம் சொல்ல, இதோ இப்போ நான் உங்களிடம் சொல்லிவிட்டேன்.

செக்காவ் இப்படித்தான் உலகமெங்கும் பரவினார்.

***

கிட்டத்தட்ட எழுவது அல்லது அறுபது ஆண்டுகள் இருக்கும். ஞாபகத்திலிருந்து சொல் லுகிறேன்.

கதாநாயகன் ஒரு போலீஸ் அதிகாரி.

வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்படுகிறார். மழை வருமோ என்று கேட்டுக் கொள்கிறார். படி இறங்கியதும் உதவிப் பணியாள் அவரோடு சேர்ந் துக் கொள்கிறான்.

தெருக்கோடியில் ஒரு சிறியகூட்டம் தெரி கிறது. அது என்ன கூட்டம்? போய் பார் என்கி றார். பணியாள் பார்த்துவிட்டு வந்து, யாரோ ஒரு வன் ஒரு நாய் மீது சிகரெட் துண்டைக் குடித்து விட்டு வீசியிருக்கிறான். அந்த நாய்க் காரனுக்கும் சிகரெட் வீசியவனுக்கும் வாய்ச் சண்டை. அதை வேடிக்கை பார்க்க ஒரு சின்ன கூட்டம். கலைந்து போங்கெ என்று சொல்லி விட்டு வந்தேன் என் றான்.

“தெருவில் எச்சில் சிகரெட்டை எறிவதே குற்றம். அதும் ஒரு நாயின்மேல் எறிவது எந்த

வகையில் சரி! அது வளர்ப்பு நாயா? தெரு நாயா? என்று கேட்டார் போலிஸ் அதிகாரி.

தெருநாய் போல்தான் தெரிகிறது என்று பதில் வந்தது.

தெரு நாயா! உடனே தகவல் கொடு: முனி சிப்பாலிட்டியிலிருந்து நாய் வண்டி வந்து பிடித்துக் கொண்டு போகட்டும் என்றார்.

யாரோ சொன்னார்கள். இது வளர்ப்பு நாய் தான். பக்கத்துத் தெருவில் வசிக்கும் பெரிய போலீஸ் அதிகாரிவீட்டு நாய் என்றான் ஒருவன்.

“பார்த்தாயா, நினைத்தேன்: அதன்மேல் சிகரெட் வீசியவனைப் பிடி. பிராணிகள் வதைத் தடம் சட்டத்தின் கீழ் கேஸ் போடலாம் என்றார்.

இப்படி அதிகாரம் எப்படி கீழும் மேலும் அமைகிறது என்பதை விவரிக்கும் அந்த செக்கா வின் கதை.

ஊரில் மட்டுமல்ல, உலகம் பூராவும் அதி காரம், அதிகாரிகள் எப்படி இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார் செக்காவ்.

விதவிதமான வகைவகையான விசயங்க ளைத் தொட்டுச் செக்காவ் கதைகள் எழுதியிருக் கிறார்.

ஒரு மகாசோம்பேறி, லாவகமாகப் பொய் சொல்லி ஏமாற்றும் பிச்சைக்காரனை, ஒரு சமை யல்காரியின் உருக்கும் கண்ணீர் எப்படி அவனைத் திருத்துகிறது என்பது கதை.

தூங்கவே விடாமல் ஓய்வொழிச்சல் இல் லாமல் ஒரு வேலைக்காரியைத் தூளியை ஆட் டிக் கொண்டே இருக்கச் சொன்னால் விளைவு என்ன ஆகும். குழந்தையைக் கழுத்தை நெறித்துக்

கொன்றுவிட்டு அவள் நிம்மதியாக அயர்ந்து தூங் குவதாக ஒரு கதை.

கண்மணி – டார்லிங் – பேதை இப்படித் தலைப்புகளில் ஒரு கதை வந்திருக்கிறது தமிழில். இந்தக் கதையை எத்தனை முறை வாசித்தாலும், கண்களைத் தொடைத்துக் கொள்ளாமல் இருக்க முடிந்ததில்லை என்று இந்தக் கதையைப் பற்றி லியோ டால்ஸ்டாய் சொல்லுகிறார்.

செக்காவிடமே அவர் சொன்னாராம்:

“அந்தப் பெண்பிள்ளையை சபிக்க கையை உசத்துகிறாய். உசத்திய கை அவளை ஆசீர்வதித்து விடுகிறது” என்றாராம்.

கி. ராஜநாராயணன்,

Q, 13, அரசு வீடுகள் குடியிருப்பு,
லாஸ்பேட், புதுவை 8
பேச – 0413 – 2251506

1. பேச்சாளர்

அன்று காலை, வருமானவரி ஆய்வாளர் கிரில் இவானோவிச் வாவிலோனோவின் இறுதிச் சடங்குகள் நடக்க இருந்தன. நம் நாட்டில் பரவலாகக் காணப்படும் இரண்டு நோய்களால் அவர் இறந்துவிட்டார் . ஒன்று குடிப்பழக்கம். மற்றொன்று,சண்டைபிடிக்கும் மனைவி.

தேவாலயத்திலிருந்து கல்லறையை நோக்கி இறுதி ஊர்வலம் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது. இறந்தவருடன் பணியாற்றிய ஊழியர்களில் ஒருவனான பாப்லாவ்ஸ்கி, கோச்வண்டியொன்றில் ஏறித் தன் நண்பன் கிரிகோரி பெட்ரோவிட்ச் சாப்போய்க்கின் என்பவனை அழைத்து வர விரைந்தான். இளம் வயது என்றாலும் சாப்போய்க்கின் ஊரில் பிரபலமாகியிருந்தான்.

அவனது அபூர்வமான ஆற்றலைப் பற்றி பெரும்பான்மையான வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். திருமணம், பிறந்த நாள், இறந்த நாள், இறுதிச் சடங்குகள் என எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, எவ்வித முன்னேற்பாடும் இல்லாமல் உடனடியாக அற்புதமான சொற்பொழிவை ஆற்றுவதில் தனித்திறமை படைத்தவன். எப்பொழுது தேவை என்றாலும் பேசக்கூடியவன். பாதி தூக்கத்தில் இருந்தாலும் வெறும் வயிற்றில் இருந்தாலும், மூச் சுமுட்டக் குடித்திருந்தாலும், காய்ச்சலில் இருந்தாலும்கூட எதைப்பற்றியும் கவலை இல்லை. அவன் பேச்சு சீராக, சரளமாக மடைதிறந்த வெள்ளமாகக் கணக்கின்றிக் கொட்டிக் கொண்டேயிருக்கும். விடுதியில் இருக்கும் கரப்பான்பூச்சிகளை விட அவன் பேச்சில் இருக்கும் சோக வார்த்தை

கள் அதிகம். அவன் எப்பொழுதும் நீட்டி முழக்கி அலங்காரமாக பேசுவான். சில நேரங்களில் அள வுக்கு அதிகமாகப் பேசிவிடுவான். எந்த அளவுக் குத் தெரியுமா ! வர்த்தகர் ஒருவர் வீட்டுத் திரு மணத்தில் அவன் நிறுத்தாமல் பேசிக்கொண்டே போக, அவன் பேச்சை நிறுத்த காவலர் உதவியை நாட வேண்டியதாகிவிட்டது.

சாப்போய்க்கின்னை அவனது வீட்டில் போய் பார்த்த பாப்லாவ்ஸ்கி, ‘‘உன்னைத்தான் பார்க்க வந்தேன். உடனே கோட்டைப் போட்டுக் கொண்டு புறப்படு! நம் அதிகாரி ஒருவர் இறந்து விட்டார். உடனடியாக அடுத்த உலகத்துக்கு அவரை அனுப்பவேண்டும். அதற்கான ஏற்பாடுக ளைச் செய்து கொண்டிருக்கிறோம். அவரை வழி யனுப்பிப் பேச ஆள் வேண்டும்... உன்னைத்தான் நம்பி இருக்கிறோம். கீழ்மட்டத்தில் யாராவது இறந் திருந்தால் நாங்கள் இவ்வளவு சிரத்தை எடுத்தி ருக்கமாட்டோம். இறந்திருப்பது எங்கள் காரியத ரிசி. ஒரு வகையில் பார்த்தால் எங்கள் அலுவல கத்தில் அவர் ஒரு தூண் போன்றவர். நல்லதொரு சொற்பொழிவு இல்லாமல் அவரை வழியனுப்புவது முறையாக இருக்காது என்றான்.

“ஓ ! உங்கள் காரியதரிசியா! யார்? அந்தக் குடி காரன்தானே?”

கொட்டாவி விட்டபடி சாப்போய்க்கின் கேட் டான்.

”ஆமாம். அவரேதான். ஆனால், உனக்குச் சாப் பிட கேக், குடிக்க ஏதாவது கொடுப்போம். நீ வந்து போக கோச் வண்டிக் கட்டணத் தொகையும் உண்டு. என்ன சொல்கிறாய்? நீ அவரது கல்லறை

யின் அருகில் நின்று வழக்கமான பல்லவியில் ஏதாவது நல்லதாக அவரைப்பற்றி பேசு. உனக்கு நாங்கள் என்றென்றும் கடன்பட்டிருப்போம்.”

சாப்போய்க்கின் சந்தோஷமாக ஒப்புக்கொண்டான். தலைமுடியை சரி செய்து கொண்டு, முகத்தில் சோகத்தை வரவழைத்துக்கொண்டு பாப்லாஸ்கியுடன் புறப்பட்டான்.

கோச்வண்டியில் ஏறும்போது, ’உன் காரியதரிசியை எனக்கு நன்றாகத் தெரியும்’ என்றான் சாப்போய்க்கின்.

“அவன் ஒரு பொறுக்கி ; அயோக்கியன், இப்படியும் சில பேர் இருக்கிறார்கள் நல்ல வேளையாக கடவுள் அவனுக்கு ஓய்வளித்துவிட்டார்” என்றான்.

“போகட்டும், இப்போது இறந்தவரைப் பற்றித் தவறாகப் பேசாதே?”

“பேசமாட்டேன், இறந்தவரைப் பற்றி நல்லதாகப் பேசவேண்டும் அல்லது பேசாமல் இருக்க வேண்டும். ஆனால், அதற்காக அவன் அயோக்கியன் என்னும் உண்மை மாறிவிடப்போவதில்லை”.

இரு நண்பர்களும் போய் சவ ஊர்வலத்துடன் சேர்ந்து கொண்டார்கள், ஊர்வலம் மிகவும் மெதுவாக சென்றதால், அவர்கள் கல்லறைக்கு செல்லும் வழியில் மூன்று முறை, இறந்தவரின் நினைவாக, மதுக்கூடத்துக்குள் நுழைந்து நுழைந்து திரும்பினார்கள்.

சவ ஊர்வலம் கல்லறையை அடைந்ததும் இறுதிச் சடங்குகள் ஆரம்பித்தன. இறந்தவரின் மாமியார், மனைவி, மைத்துனர் ஆகியோர் சம்பி

ரதாயப்படி அழுது கொண்டிருந்தனர். சவப் பெட்டியை குழியில் இறக்கிய போது அவர் மனைவி, "என்னை விடுங்கள் நானும் அவரோடு சென்று விடுகிறேன்" என்று கதறினாள். அனேகமாக, அவளுக்கு வரவிருக்கும் ஓய்வூதிய அனுகூலங்களை எண்ணிப் பார்த்திருக்கவேண்டும். அதனால், அவ்வாறு செய்யவில்லை. அனைத்துச் சடங்குகளும் முடிந்து எல்லாரும் அமைதியான பின் சாப்போய்க்கின் முன்னால் வந்தான். சுற்றியிருந்தவர்களை ஒருமுறை பார்த்துவிட்டுத் தன் இரங்கல் உரையைத் தொடங்கினான்.

"என் கண்களையும் காதுகளையும் என்னாலேயே நம்ப முடியவில்லை. இந்த சவப்பெட்டி, கண்ணீர் தோய்ந்த முகங்கள், அழுகுரல்கள்... இவையெல்லாம் ஒரு கனவாக இருந்து விடக்கூடாதா? ஐயோ, இது கனவல்ல ; நம் கண்கள் நம்மை ஏமாற்றவில்லை. நேற்று வரை, நம் கண் முன்னே சுறுசுறுப்புடனும், துடிப்புடனும், சளைக்காமல் ஒரு தேனீயைப் போல நாட்டின் வளத்துக்காக அயராது உழைத்தவர். இன்றோ அவர் மண்ணுக்குள் மறைந்து, கானல் நீராய் காட்சியளிக்கிறார். கொடிய மரணம் தன் இரும்புக் கரங்களால் அவரை பிணைத்து விட்டது. வயது முதிர்ந்த நிலையிலும் அபரிமிதமான ஆற்றலுடனும், நம்பிக்கையுடனும் வாழ்ந்துவந்தார். இது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு! அவருடைய இடத்தை யாரால் நிரப்ப முடியும்?

நம்மிடையே நல்ல உயரதிகாரிகள் பலர் உண்டு.ஆனால், ப்ரொகோபி ஓசிபிச் அவர்களுக்கெல்லாம் அப்பாற்ப்பட்டவர். எவ்வித பயமுமின்றி, யாருக்கும் எந்த சலுகையும் காட்டாமல் தன்னு

டைய கடமையை, அல்லும் பகலும் ஓய்வில்லா மல் நேர்மையாகச் செய்துவந்தவர். அவருடைய நேர்மைக்கு விலையாக, பலர் அவரை இணங்கச் செய்யலாமென, கொடுக்க முன்வந்த பொருள்க ளையெல்லாம் சிறிதும் சட்டை செய்யாதவர். தன் னுடைய சொற்ப வருமானத்தின் பெரும் பகுதியை ஏழை எளியவர்களுக்கு, ப்ரொகோபி ஓசிபிச் உத வியதை நாமே நம் கண்களால் பார்த்திருக்கி றோம். இங்கு, இப்பொழுது நம் எதிரே அழுது புலம் பும் இந்த விதவைகளும், அனாதைகளும் அவரு டைய கருணையினால் வாழ்வு பெற்றவர்கள்தான்.

அவர் கடமையில் கண்ணியத்தை கடைபி டித்ததோடு மட்டுமல்லாமல், உலக இன்பங்களில் சிறிதும் நாட்டம் இல்லாதவர். இறுதிவரை, இல்லற வாழ்வில் ஈடுபடாமல் பிரம்மசாரியாகவே வாழ்ந் தவர். ஒரு நண்பனாய் அவர் இடத்தை யாரால் பூர்த்தி செய்ய முடியும்? இப்பொழுது கூட, அவரு டைய மழிக்கப்பட்ட, புன்னகை தவழும் அழகான முகத்தைப் பார்க்க முடிகிறது. அவருடைய மென் மையான, அன்பு தவழும் குரல் என் காதுகளில் ஒலிப்பதைப் உணருகிறேன். ப்ரொகோபி ஓசிபிச் ! உமது ஆன்மா அமைதியடையட்டும். ஓர் உன்னத மான, நேர்மையான உழைப்பாளியாகிய நீ நிரந்திர ஓய்வு அடைந்துவிட்டாய்”

சாப்போய்க்கின் தன் உரையை தொடர்ந்து கொண்டிருந்தான். ஆனால் கூடியிருந்தவர்கள் தங்களுக்குள் முணுமுணுக்க ஆரம்பித்தனர். அனைவரும் அவன் இரங்கல் உரையை ரசித்தனர். சிலரது கண்களில் கண்ணீரைக்கூட அப்பேச்சு வரவழைத்தது. எனினும், அவன் குறிப்பிட்ட சில விஷயங்கள், அவர்களுக்கு விசித்திரமாக தோன்

றின. முதலாவதாக, அவன் ஏன் இறந்தவரை ப்ரொ கோபி ஓசிபிச் என்று விளித்தான், அவருடைய பெயர் கிரில் இவானோவிச்தானே ! இரண்டாவது, இறந்தவர் தன் மனைவியுடன் எலியும் பூனை யும் போல இறுவதிவரை சண்டையிட்டு கொண்டி ருந்தது அனைவருக்கும் தெரியும். அப்படியிருக்க அவரைத் திருமணமாகாதவர் என்று சொல்வது அபத்தமானது. மூன்றாவதாக, அவர் அடர்த்தியான சிவப்பு தாடி வைத்திருந்தார். வாழ்நாளில் ஒருபோ தும் அவர் மழித்ததே இல்லை. ஆனால் இந்தப் பேச்சாளர் அழகான மழித்த முகம் என்று ஏன் குறிப்பிடவேண்டும்? அவர்கள் குழப்பத்தோடு ஒரு வரையொருவர் பார்த்துக்கொண்டு தங்கள் தோள் களைக் குலுக்கிக் கொண்டனர்.

கல்லறையைப் பார்த்தவண்ணம் சாப்போய்க் கின் தன் உரையை உணர்ச்சிப்பூர்வமாக தொடர்ந் தான்.

“ப்ரொகோபி ஓசிபிச், உங்கள் முகம் வசீகரமில் லாமல், அழகற்றதாக இருந்திருக்கலாம். நீங்கள் கண்டிப்பான ஒழுக்கமும், கடுகடுப்பான குணமும் கொண்டவர். ஆனால், இந்த மாயதோற்றத்துக் குள், நேர்மையான, மென்மையான இதயம் ஒன்று துடித்து கொண்டிருந்தது” என்பது நம் எல்லோ ருக்கும் தெரியும்”.

இப்பொழுது, அங்கு கூடியிருந்தவர்கள் சாப் போய்க்கின் பேச்சில் சில மாறுதல்கள் ஏற்படு வதை கவனித்தார்கள். அவன் பார்வை ஓரிடத் தைக் கூர்ந்து நோக்கியது. குழப்பத்துடன் தன் தோள்களை குலுக்கியபடி தன் உரையை நிறுத்தி

விட்டு பாப்லாப்ஸ்கியின் பக்கமாக திரும்பி, கண்க ளில் பயத்துடன்,

”இங்கே கவனி, அவன் இன்னும் உயிரோடு தான் இருக்கிறான்”, என்றான்.

“யாரைச் சொல்கிறாய்?”

”ப்ரொகோபி ஓசிபிச் தான்! அதோ அந்தக் கல் லறைக்குப் பக்கத்தில்தான் நின்று கொண்டிருக்கி றான்”

”ஆனால், இறந்தவர் இவரல்ல, அவர் பெயர் கிரில் இவானோவிச்.”

“உன் மேலதிகாரி தானே இறந்துவிட்டதாகத் தெரிவித்தாய்!

“ஆமாம் ! கிரில் இவானோவிச் தான் என் மேலதி காரி. நீ முட்டாள் போலத் தவறாகப் புரிந்து கொண் டாய். ப்ரொகோபி ஓசிபிச் என் மேலதிகாரியாக இருந்துள்ளார்.ஆனால், இரண்டு வருடங்களுக்கு முன்பே இரண்டாவது பிரிவுக்கு அவர் தலைவராக மாற்றலாகிப் போய்விட்டார்.

”எனக்கு எப்படித் தெரியும்?”

”சரி! நீ பேசிக்கொண்டே இரு, இப் பொழுது நிறுத்தினால் தர்ம சங்கடமாகப் போய்வி டும்”

சாப்போய்க்கின் கல்லறையின் பக்க மாகத் திரும்பி, விட்ட இடத்திலிருந்து, தன் சாதுர் யமான பேச்சைத் தொய்வின்றித் தொடர்ந்தான். கல்லறையின் பக்கத்தில் நன்கு மழித்த முகத்து டன், வயதான ப்ரொகோபி ஓசிபிச் நின்று கொண்டு

கோபமாக சாப்போய்கின்னையே முறைத்துக் கொண்டிருந்தார்.

“என்ன ஒரு திறமைசாலி ! உயிரோடு இருக்கின்றவனைப் புதைத்துவிட்டானே !” என்று ஆச்சரியமடைந்து, அங்கிருந்தவர்கள் கல்லறையி லிருந்து வீடுதிரும்பினர்.

ப்ரொகோபி ஓசிபிச் சாப்போய்க்கின்னிடம் வந்து கோபமாக பொரிந்துதள்ளினான்.

‘’தம்பி ! நீ செய்தது சரியில்ல. உன் பேச்சு இறந் தவருக்கு வேண்டுமானால் பெருமை சேர்ப்பதாக இருக்கலாம். ஆனால் என் பெயரைக் குறிப்பிட்டுப் பேசியதால் என்னைக் கேலி செய்வதாகவே இருந் தது. யாருக்கும் எந்த சலுகையும் செய்ய மாட்டேன், லஞ்சம் வாங்க மாட்டேன் என்றெல்லாம் உயி ரோடு உள்ள ஒரு மனிதரைப் பற்றிச் சொல்வது கேலிப் பேச்சாகத் தான் எடுத்துக் கொள்ள முடியும். அதிலும், என் முகத்தைப் பற்றி அவ்வளவு விரிவாக யாரும் உன்னைக் கேட்கவில்லை. வசீகரமில்லாத, அழகில்லாத – சரி அது எப்படியோ இருக்கட்டும், அதனோடு என் குணாதிசயத்தை அத்தனைப்பேர் எதிரில் யார் உன்னை வெளிச்சத்தை போட்டுக் காட்டச் சொன்னது. எனக்கு அது மிகவும் அவமா னமாகிவிட்டது ‘’.

****

இக்கதை முதன்முதலில் 1886 ஆம் ஆண்டு வெளிவந்தது.

2. மாப்பிள்ளையும் அப்பாவும்

“என்ன, உனக்குத் திருமணமாமே! எப்பொழுது எங்களுக்கு விருந்து வைக்கப்போகிறாய்?” கோடைக் கால விருந்து ஒன்றில், பியோர் பெட்ரோவிச் மில்கினிடம் அவனுடைய நண்பன் கேட்டான்.

கொஞ்சம் கூச்சத்துடன், மில்கின், “நான் திருமணம் செய்து கொள்ளப்போவதாய் எங்கு பேசிக் கொண்டார்கள்? எந்த முட்டாள் அப்படிச் சொன்னான்?” எனக் கேட்டான்.

“எல்லோரும் அப்படித்தான் பேசிக்கொள்கிறார்கள். நடப்பதை எல்லாம் பார்க்கும்போது அப்படித்தான் தெரிகிறது. தம்பி, இனி எதையும் மறைக்க முடியாது. எங்களுக்கு எதுவும் தெரியாது என்று நினைக்கிறாயா? ஹா, ஹா! எல்லா விஷயமும் தெரியும். கொண்ட்ராஷ்கின் குடும்பத்தினரோடுதான் நாள் முழுக்க இருக்கிறாய். பகல் சாப்பாடு, இரவு விருந்து எல்லாம் அங்குதான். ஆடல், பாடல் எல்லாம்... அவர்களுடைய பெண்ணான நஸ்தயா கொண்ட்ராஷ் கினைத் தவிர யாருடனும் நீ நடை பயிற்சிக்குப் போவதில்லை. அவளுக்கு மட்டும் தான் மலர்க் கொத்து கொண்டு போகிறாய். எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறோம். அன்று ஒரு நாள், நஸ்தயாவின் அப்பாவைச் சந்தித்தேன். அவரும் விரைவில் திருமணம் நடக்கும் என்றார். நீ இங்கிருந்து நகரத்திற்கு மாற்றலாகிப் போனதும் அது நிகழும் என்று சொன்னார். எது எப்படியோ! நன்றாக இருங்கள். கடவுளின் ஆசிர்வாதம் உங்களுக்குக் கிடைக்கட்டும். உன்னைவிட, கொண்ட்ராஷ்கினுக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பாவம்! அந்த மனிதருக்கு ஏழு மகள்கள். ஆமாம். ஏழு! இது ஒன்றும் விளையாட்டில்லை. ஏதோ ஒன்றாவது முடிந்ததே!”

“என்ன சோதனையடா இது!” என்று நினைத் தான் மில்கின்.

“நஸ்தயாவை நான் திருமணம் செய்து கொள் ளப்போவதாக, இவனோடு சேர்த்தால், இதுவரை பத்துபேர் சொல்லிவிட்டார்கள். இதை எல்லாம் இவர்கள் எப்படிக் கணக்கு போடுகிறார்கள்? வீணாய்ப் போனவர்கள்! காரணம் இது தான். கொண்ட்ராஷ்கின் வீட்டில் சாப்பிடுகிறேன். அவர் மகளுடன் மாலையில் நடைபயிற்சிக்குச் செல்கி றேன். இனி முடியாது. இது போன்ற வதந்தி களுக்கு இப்பொழுதே முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். ஆமாம். இதற்கான நேரம் வந்துவிட் டது. இல்லையென்றால், நான் எங்கு இருக்கி றேன் என்று யோசிப்பதற்குள் இந்தப் படுபாவி கள் என்னை எதிலாவது சிக்கவைத்து விடுவார் கள்! நாளைக்கே அந்த வீட்டிற்குப் போய், அந்த மரமண்டை கொண்ட்ராஷ்கின்னிடம் இரண்டில் ஒன்று பேசித் தீர்த்துவிட வேண்டும். அப்பொழுது தான் அந்த ஆள் வீணாக மனக்கோட்டை கட்டா மல் இருப்பான். பிறகு என்ன, சும்மா விட்டுவிட முடியுமா?”

இந்த உரையாடல் நடந்த அடுத்த நாள், சங் கடத்தோடும் கொஞ்சம் பயத்தோடும் காணப்பட்ட மில்கின், நீதிமன்ற அதிகாரியான கொண்ட்ராஷ் கின் அலுவலகத்திற்குள் நுழைந்தான்.

“வா! வா! எப்படிப் போகுது வாழ்க்கை! என்ன, அவளைக் காணோம் என்று பார்க்கிறாயா? ஹா! ஹா! நஸ்தயா இதோ ஒரு நொடியில் வந்து விடு வாள். குஸ்ஸேப் வீடுவரை போய், தலையைக் காட்டிவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு போனாள்.”

“பார்க்கப்போனால், நான் நஸ்தயாவைப் பார்க்க இப்பொழுது வரவில்லை. உங்களைச் சந்

திக்கத்தான் வந்தேன். உங்களோடு ஒரு விஷயம் பேச வேண்டும். என் கண்ணில் ஏதோ...” எனக் கண்களைக் கசக்கிக்கொண்டு வாய்குழறிய படி ஆரம்பித்தான்.

கண்களைச் சிமிட்டியபடியே, “என்ன விஷயம் பேசப் போகிறாய்? ஹோ! ஹோ! ஏன் ரொம்ப பதற்றமாய் காணப்படுகிறாய்? காதெல்லாம் வியர்வை. இதுதான் உன்னிடம் உள்ள பிரச்சனை. என்ன விஷயம் பேசப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். ஹா! ஹா! ஏறக்குறைய அதற்கான நேரம்...”

“சுருக்கமாகச் சொல்வதென்றால், வேறு மாதிரி சொல்ல வேண்டுமென்றால்... என்ன சொல்ல வருகிறேன் என்றால்... நான் உங்களிடம் விடைபெற்றுப் போகலாம் என்று வந்தேன்... நான் நாளைக்குக் கிளம்புகிறேன்?

“என்ன சொல்கிறாய்? கிளம்புகிறாயா?” ஆச்சரியத்தில் கொண்ட்ராஷ்கினின் கண்கள் விரிந்தன.

“கிளம்புகிறேன் என்றால் அப்படித்தான். நீங்கள் இதுவரை என்னிடம் காட்டிய விருந்தோம்பலுக்கு நன்றி. உங்கள் மகள்கள் மிகவும் அன்பானவர்கள். உங்களோடு பழகிய நாட்களை நான் எப்பொழுதும் மறக்க மாட்டேன்”.

வெளிறிப்போன முகத்தோடு, கொண்ட்ராஷ்கின் அவனைப் பார்த்து,

“தம்பி, எனக்கு நீ பேசுவது எதுவும் புரியவில்லை. யாராக இருந்தாலும் விலகிப் போவதற்கு உரிமை இருக்கிறது. உன் விருப்பப்படி எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், நீ ஏதோ முக்கியமான காரணத்தைச் சொல்லாமல் தப்பிக்கப் பார்க்கிறாய். அப்படிச் செய்வது நேர்மையில்லையே!”.

“நான்... எனக்கு... புரியவில்லை. நான் என்ன தப்பிக்கப் பார்க்கிறேன்”.

“இந்தக் கோடைக்காலம் முழுவதும் நீ இங்கு வந்துகொண்டு இருக்கிறாய் ; சாப்பிட்டாய்; குடித்தாய்; காலை, மாலை, இரவு என்று நாள் முழுவதும் என் மகள்களோடு அரட்டையடித்தாய். திடீரென்று இப்பொழுது, 'நான் கிளம்புகிறேன்' என்று சொன்னால்... அதுதான்...”

“என் எதிர்பார்ப்புக்களை நான் மேலும் வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை”.

“நிச்சயமாக, நீயாக எதையும் கேட்கவில்லை. ஆனால், உன் நடவடிக்கையெல்லம் எதை நோக்கி இருந்தன என்று எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்? நீ தினமும் எங்களுடன் விருந்து சாப்பிட்டாய். மாலை முழுவதும் நஸ்தயாவுடன் நடைபயிற்சிக்கு சென்றாய். இதற்கெல்லாம் அர்த்தம் எதுவும் இல்லை என்றா சொல்கிறாய்? மாப்பிள்ளையாக வரப்போகிறவர்கள்தான் தினமும் இப்படிச் சாப்பிடுவார்கள். நீ அப்படி இல்லை என்றால், இங்கு வருவதை ஊக்குவித்திருப்பேனா? ஆமாம். நான் அப்படித்தான் நினைக்கிறேன். இதில் நேர்மை வேண்டும். இனி நான் எதுவும் உன்னிடம் கேட்க விரும்பவில்லை. தயவு செய்து இப்பொழுதாவது உன் விருப்பத்தைச் சொல்லிவிடு. இல்லையென்றால்...”

“நஸ்தயா மிகவும் இனிமையானவள். அருமையான இளம்பெண். அவள்மீது பெரும் மதிப்பு வைத்திருக்கிறேன். அவளைவிட சிறந்த மனைவி எனக்குக் கிடைக்க மாட்டாள். ஆனால், எங்களிடையே ஒத்த கருத்துக்கள் இல்லை”.

“இதுதான் காரணமா?” புன்னகையோடு தொடர்ந்த கொண்ட்ராஷ்கின்,

“இவ்வளவுதானா? தன் கருத்துக்களும் கண வனின் கருத்துக்களும் ஒன்றாக இருக்கக்கூ டிய பெண்ணை நீ கண்டுபிடித்துவிடுவாய் என நினைக்கிறாயா? ஓ! இளைஞர்களே! பசுமை நிறைந்த இளமைக்காலம் இப்படித்தான். இப்படி ஏதாவது ஒரு புதிய நடைமுறையைக் கண்டுபிடிக் கும். ஹா! ஹா! திடீரென யாரையும் ஒரேயடியாக மாற்றிவிட முடியாது. இப்பொழுது வேண்டுமானால் உங்கள் இருவருடைய கருத்துக்களும் வேறுபட லாம். ஆனால், நீங்கள் ஒன்றாக வாழத் தொடங்கிய பிறகு ஏற்ற தாழ்வுகள் அனைத்தும் சரி செய்யப் பட்டுவிடும். புதிதாக அமைக்கப்பட்ட பாதையில் நன்றாக சவாரி செய்ய முடியாது. ஆனால், கொஞ் சம் பயன்பாட்டுக்கு வந்ததும் வழவழப்பாக மாறிவி டும்”.

“இருக்கலாம்... ஆனால், நான் நஸ்தயாவுக்கு ஏற்றவனில்லை”

“இல்லை. இல்லை! அப்படிக் கண்டதையும் பேசக்கூடாது! நீ ஓர் அற்புதமான இளைஞன்”.

“அய்யோ. உங்களுக்கு என் குறைகளைப் பற்றி தெரியாது.. நான் ஏழை”.

“அதனால் என்ன? கடவுள் புண்ணியத்தில் உனக்கு ஒரு சம்பளம் கிடைக்கிறது!”

“நான் ஒரு குடிகாரன்.”

“அதெல்லாம் கிடையாது. நீ அதிகம் குடித்து நான் எப்பொழுதும் பார்த்ததில்லை.”

அவன் சொல்வதை அவர் ஏற்றுக்கொள்ள வில்லை என்பது தோளைக் குலுக்கியதிலிருந்து புரிந்தது.

“இளைஞர்கள் குடிக்காமல் இருக்க முடியாது. நானும் இளைஞனாக இருக்கும்போது குடித்த

வன்தான். இப்பொழுது அதற்கான சுவடே என்னி டம் இல்லாமல் செய்துவிட்டேன். சில நேரங்களில் முடியாது என்று எதுவும் கிடையாது.”

“ஆனால், நான் நிறைய குடிப்பேன். அது ஒரு பரம்பரை பலவீனம்”.

“இருக்காது. நான் அதை நம்பமாட்டேன். நம் பவே மாட்டேன்”.

“எமகாதகன்! இவனை ஏமாற்ற முடியாது” என நினைத்தான் மில்கின். “எப்படியாவது தன் பெண்க ணைத் தள்ளிவிடப் பார்க்கிறான்”.

“எனக்குக் குடிப்பழக்கம் மட்டும் இல்லை. லஞ்சம் வாங்குவேன்”.

“தம்பி, இங்கே பார். யார்தான் வாங்கவில்லை. ஹி! ஹி! இதையெல்லாம் சொல்லி எனக்கு அதிர்ச்சி அளிக்க முடியும் என்று நினைக்கிறாயா?”

“இதற்குமேல் உங்களிடம் மறைக்க என்ன இருக்கிறது. என் தலையில் என்ன எழுதியிருக் கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் நான் திருமணம் செய்து கொள்ள முடியாது. உங்களிடம் அந்த விஷயத்தை மறைத்து வந்தேன். ஆனால், இப்பொழுது நீங்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, அரசு பணத்தை முறைகேடு செய்த வழக்கு ஒன்றில் என்மேல் விசா ரணை நடந்து வருகிறது”.

“என்ன, வழக்கு விசாரணையா?” என்ற கொண்ட்ராஷ்கின் வாயடைத்துப் போனார். “இது எனக்குப் புதிதாக இருக்கிறது. எனக்கு அதைப் பற் றித் தெரியாது. உன் வழக்கின் முடிவு என்ன என்று தெரிந்துகொள்ளும்வரை, நீ நிச்சயமாகத் திரும ணம் செய்து கொள்ளக்கூடாது. நிறைய கையாடல் செய்துவிட்டாயா?”

“ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரம்”.

“ஊம்! கொஞ்சம் பெரிய தொகைதான். நிச்சயம் நீ சைபீரியா போக வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். அப்படியானால், என் பெண்ணின் கதி அவ்வளவுதான். இதில் வேறு எதுவும் செய்வதற்கில்லை. கடவுள்தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும்”.

மில்கின் 'அப்பாடா' எனப் பெருமூச்சு விட்டபடித் தன் தொப்பியை எடுக்கப் போனான்.

கொஞ்சம் யோசித்த கொண்ட்ராஷ்கின்,

“ஒரு வேளை, நஸ்தயா உன்னை நேசிப்பதாக இருந்தால் உன்னுடன் அங்குச் செல்லத் தயாராக இருப்பாள். தியாகம் செய்ய பயந்தால், அப்புறம் காதலில் என்ன இருக்கிறது?

மேலும், தோம்ஸ்க் குபேர்னியா செழிப்பாக இருக்கும். சைபீரியாவில் என் நண்பர்களின் வாழ்க்கை இங்கு இருப்பதைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறது. என் குடும்பச் சூழ்நிலை தடுக்கா விட்டால், நானேகூட சைபீரியாவுக்குச் சென்றுவிடுவேன். நீ அவளிடம் திருமணம் பற்றிப் பேசு”.

“என்ன ஒரு விடாப்பிடியான ஆள் இவன்” என மில்கின் நினைத்தான். “தன்னை விட்டுப்போனால் போதும், பேயாக இருந்தாலும் திருமணம் செய்துவைத்துவிட சம்மதிப்பான்போல் இருக்கிறதே” என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

சற்று உரத்த குரலில்,

“அத்துடன் முடியவில்லை. பண முறைகேடு மட்டுமல்ல, பண மோசடிக்காகவும் என்மேல் அவர்கள் வழக்குப் போடக்கூடும்”.

“இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் இல்லையே. ஒரே தண்டனைதான் கிடைக்கும்.”

“போச்சுடா!”

“என்ன முணுமுணுப்பு?”

“நன்றாகக் கவனியுங்கள். உங்களிடம் நான் எல்லாவற்றையும் சொல்லிவிடவில்லை. என் வாழ்க்கையில் முக்கியமான ரகசியத்தைச் சொல் லும்படி வைத்துவிடாதீர்கள். அது ஒரு பெரிய ரகசி யம்.”

“உன் ரகசியத்தைத் தெரிந்துகொள்ள நான் விரும்பவில்லை. அது ஒன்றும் இருக்காது”

“அய்யோ. அது இல்லை. நீங்கள் அதைக் கேட் டால்... நான் யார் என்று உங்களுக்குத் தெரிந்தால், அவ்வளவுதான். அப்படியே வாயடைந்து போய்வி டுவீர்கள்.

“நான் ஒரு.... தப்பி ஓடி வந்த குற்றவாளி”.

ஏதோ தேள் கொட்டியதுபோல் துணுக்குற்று, மில்கின்னிடமிருந்து கொண்ட்ராஷ்கின் ஓர் அடி பின்வாங்கினார். கொஞ்ச நேரம் அப்படியே பேசா மல், அசையாமல் மில்கினையே உற்றுப் பார்த்தபடி நின்றார். அவருடைய கண்களில் பயம் குடிகொண் டிருந்தது. பிறகு அங்கிருந்த சாய்வு நாற்காலியில் சோர்ந்துபோய் முனகியபடியே சரிந்துவிழுந்தார்.

“நான் இப்படி இருக்கும் என்று எதிர்பார்க்க வில்லை. என் வீட்டில் பாம்புக்கு அல்லவா பால் வார்த்திருக்கிறேன்? போய் விடு! தயவு செய்து போய்விடு. இனி உன்னைப் பார்க்க விரும்ப வில்லை! அய்யோ!”

மில்கின் தன் தொப்பியை எடுத்துக்கொண் டான். எப்படியோ வெற்றி பெற்றுவிட்டோம் என்று மனம் கொண்டாட, கதவை நோக்கி நடந்தான்.

“கொஞ்சம் இரு!” என்று கொண்ட்ராஷ்கின் அவனை நிறுத்தினார்.

“ஏன் உன்னை இன்னும் கைது செய்யாமல் இருக்கிறார்கள்?”

“நான் வேறு ஒரு பெயரில் வாழ்ந்து கொண்டி ருக்கிறேன். என்னை அவ்வளவு சுலபமாகக் கைது செய்துவிட முடியாது”.

“நீ சாகும்வரை அப்படியே வாழ்ந்து விடக்கூ டிய வாய்ப்பு இருக்கிறது. யாருக்கும் உன்னைத் தெரியாது. கொஞ்சம் பொறு! இப்பொழுது, நீ ஒரு நேர்மையான மனிதன். நீ செய்த குற்றங்களுக்காக சீக்கிரமாய் வருந்திவிட்டாய். கடவுளும் உன்னைக் கைவிடமாட்டார். என் மகளைத் திருமணம் செய் துகொள்”.

மில்கினுக்கு வியர்த்துக்கொட்டியது. தப்பித்து வந்த குற்றவாளி என்பதைவிட மேலும் வளர்த்திக் கொண்டு போவதில் பயன் இல்லை என்று முடிவு செய்தான். ஒரே வழிதான் பாக்கி இருந்தது. அது சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய்விடுவது. அதற்காகக் கதவை நோக்கி அடி எடுத்து வைக்க நினைத்தபோது, மின்னல் போல் ஓர் எண்ணம் அவன் மனதிற்குள் உதித்தது.

“இங்கே பாருங்கள். நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது இன்னும் முடிந்தபாடில்லை. ஆமாம். நான் வந்து... நான் ஒரு பைத்தியம். மன நலம் சரி யில்லாமல், பைத்தியமாக இருக்கும் ஒருவர் சட் டப்படி திருமணம் செய்து கொள்ள முடியாது”.

“இதை நான் நம்பமாட்டேன். பைத்தியமாய் இருக்கும் ஒருவன் இந்த அளவு தர்க்கரீதியாக வாதாட முடியாது”.

“அப்படியானால் உங்களுக்குப் புரியவில்லை என்று தெரிகிறது. சில குறிப்பிட்ட நேரங்களில்தான் பெரும்பாலான பைத்தியங்கள் தாறுமாறாக நடந்து கொள்ளும். மற்ற நேரங்களில் சாதாரண மனி

தர்களுக்கும் அவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இருக்காது. இது உங்களுக்குத் தெரியாதா?”

“இல்லை. இதை நான் நம்பமாட்டேன். வீணாக நேரத்தைப்போக்க வேண்டாம்”.

“சரி. மருத்துவரின் சான்றிதழைக் கொண்டு வந்து காட்டுகிறேன்”.

“சான்றிதழ் இருந்தால் நம்புகிறேன். ஆனால், இப்போதைக்கு...”

“இதோ அரைமணி நேரத்தில் வருகிறேன்!”

தொப்பியை எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் வெளியேறினான் மில்கின். ஐந்து நிமி டத்தில், மனநில மருத்துவராகப் பணிபுரியும் தன் நண்பர் பிட்டுயுயேவின் வீட்டிற்குப்போய்ச் சேர்ந் தான். ஆனால், இவனுடைய போதாக காலம், சற் றுமுன்தான் அவன் தன் மனைவியுடன் சண்டை செய்து முடித்துத் தன் தலைமுடியைச் சரிசெய்து கொண்டிருந்தான்.

“உன்னிடம் ஓர் உதவிக்காக வந்திருக்கி றேன். பிரச்சனை என்னவென்றால், எப்படியாவது என்னை ஒரு பெண்ணிடம் மாட்டிவிடப் பார்க்கி றார்கள். இந்தப் பேராபத்திலிருந்து தப்பிக்க நான் பைத்தியம் போல் நடிக்க முடிவு செய்துவிட்டேன். ஹாம்லெட்டின் உத்திதான். உனக்குத்தான் தெரி யுமே, பைத்தியமாக இருந்தால் திருமணம் செய்து கொள்ள முடியாது. நீ என் நண்பன் என்ற முறை யில் எனக்குப் பைத்தியம் எனச் சான்றிதழ் கொடு”.

“என்ன? திருமணம் செய்துகொள்ள உனக்கு விருப்பம் இல்லையா?” என்று ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்துக் கேட்டான்.

“கோடி கொடுத்தாலும் எனக்கு திருமணம் வேண்டாம்”.

“அப்படியென்றால் நான் உனக்குச் சான்றிதழ் வழங்க முடியாது. யார் ஒருவர் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லையோ, அவர் பைத்தியம் இல்லை. மாறாக, அவர் அதிபுத்திசாலி. எனினும், திருமணம் செய்து கொள்ள நீ விரும்பும்போது, நேராக இங்கு வா. அதுதான் என்னிடம் சான்றிதழ் பெறச் சரியான நேரம். அப்பொழுது உனக்கு மரை கழண்டுவிட்டது, சரியான பைத்தியம் பிடித்துவிட் டது என்பது உறுதியாகிவிடும்...”

****

இக்கதை முதன்முதலில் 1885 ஆம் ஆண்டு வெளியானது.

3. பிச்சைக்காரன்

‘ஐயா சாமி, கருணை காட்டுங்கள். பசியால் துடிக்கும் இந்த ஏழையைக் கொஞ்சம் பாருங் கள். மூன்று நாட்களாச் சாப்பிட எதுவும் கிடைக்க வில்லை.

கடவுள் சத்தியமாக.... ஒரு கிராமத்தில் பள்ளி ஆசிரியராக எட்டு வருடங்கள் வேலை பார்த்தேன். சில சூழ்ச்சிகளால் என் வேலை பறிபோனது.

ஒரு வருடமாக எந்த வேலையும் இல்லாமல் சுற்றி வருகிறேன்....’

அந்த பிச்சைக்காரனை வழக்கறிஞர் ஸ்கோர் சோவ் பார்த்தார். சாயம் போன நிறத்தில் கிழிந்தி ருந்த அவனது ஓவர்கோட், ஓடுங்கிப் போயிருந்த போதையேறிய அவன் கண்கள். அவன் கன்னங்க ளில் இருபுறமும் சிவப்பு நிறப் புள்ளிகள்....இதற்கு முன் அவனை வேறு எங்கேயோ பார்த்தது போல் தோன்றியது.

”காலுகா பகுதியில் எனக்கு ஒரு வேலை கிடைத்திருக்கிறது. ஆனால், அங்கு போக என்னி டம் பணம் இல்லை. தயவு செய்து எனக்கு உதவுங் கள். கேட்க எனக்கு வெட்கமாகத்தான் இருக்கி றது, ஆனால் என் சூழ்நிலை அப்படி.....”

ஸ்கோர்சோவின் பார்வை அவன் அணிந்தி ருந்த காலணிகளின் பக்கம் சென்றது. ஒன்று உயர்ந்து மற்றது தாழ்ந்தும் இருந்தது. உடனடியாக அவருக்கு ஏதோ ஞபாகத்துக்கு வந்தது.

”இங்கே பார். நேற்றைய முன்தினம் உன்னை சடோவயா வீதியில் பார்த்த மாதிரி இருக்கிறதே. ஆனால், அப்பொழுது என்னிடம் பேசியபோது, நீ ஒரு மாணவன் என்றும் உன்னைப் பள்ளியிலி ருந்து நீக்கிவிட்டதாகவும் சொன்னாய். பள்ளி ஆசி

ரியரென்று சொல்லவில்லை. ஞாபகம் இருக்கி றதா?”

“இல்லை.....இருக்காது.” அதிர்ச்சியடையந்த பிச்சைக்காரனின் பேச்சு குழறியது. “நான் கிராமத் தில் பள்ளி அசிரியர்தான். வேண்டுமானால், என் சான்றிதழ்களைக் காட்டுகிறேன்.”

“நீ ஒரு மாணவன் என்றும் உன்னை நீக்கி விட்டதாகச், சொன்னாய். உனக்கு ஞாபகமே இல் லையா?”

“அய்யா, இது பித்தலாட்டம். இது மோசடி“.

“நான் போலீசைக் கூப்பிடுவேன். ராஸ்கல்! நீ ஏழையாக இருக்கலாம். பசியோடு இருக்கலாம். அதற்காக இப்படி வெட்கமில்லாமல் அப்பட்டமா கப் பொய் சொல்ல முடியாது.” கோபமாக கத்தினார் வழக்கறிஞர்.

“நான்...வந்து....நான் பொய் சொல்லவில்லை. என்னிடமுள்ள சான்றிதழ்களைக் காட்டுகிறேன்” என முனகினான் அவன்.

“உன்னை யார் நம்புவார்கள்? கிராமப் பள்ளி ஆசிரியர்கள் மீதும் மாணவர்கள் மீதும் சமுதாயத் துக்குள்ள பரிவைத் தவறாகப் பயன்படுத்தும் கீழ்த் தரமான நடவடிக்கை இது என்று உனக்குத் தெரி யாதா? எனக்கு கடுங்கோபம் வருகிறது.”

ஸ்கோர்சோ கோபம் கட்டுக்கடங்கவில்லை. பிச்சைக்காரனை தயவு தாட்சன்யமின்றித் திட்டத் தொடங்கினார். ஸ்கோர்சோவிடமிருந்த கருணை, இளகிய மனம், துயரத்திலுள்ள எல்லா உயிர்களி டமும் அவர் காட்டும் பரிவு என அவரிடம் இருந்த நல்லியல்புகள் அனைத்தையும் அந்த பித்தலாட் டக்காரன் சொன்ன அப்பட்டமான பொய் காயப்ப டுத்திவிட்டது”. ஆரம்பத்தில், தான் ஒரு அப்பாவி

எனத் தொடர்ந்து வாதம் செய்து கொண்டிருந்த பிச்சைக்காரன் பிறகு அமைதியானான். குழப்பத் தில் தலையைத் தொங்கப்போட்டபடி நின்றிருந் தான்.

“சார்.....” என்று இழுத்த பிச்சைக்காரன், தன் கையை மார்பின் மீது வைத்தபடி, ”உண்மை என் னவென்றால், நான் பொய் சொன்னேன்! நான் மாணவனும் இல்லை. பள்ளி ஆசிரியரும் இல்லை. எல்லாமே கதை தான். முதலில் ரஷ்யப் பாடல் குழுவில் சேர்ந்து பாடிக்கொண்டிருந்தேன். குடித் திருந்ததால் என்னை வெளியே அனுப்பிவிட் டார்கள். வேறு என்னதான் செய்வது? என்னால் பொய் சொல்லாமல் காலம் தள்ள முடியவில்லை. நான் உண்மையைப் பேசும்போது யாரும் எனக்கு எதுவும் தரமாட்டார்கள். உண்மையை வைத்துக் கொண்டிருப்பவன் பட்டினியால் வாடுவான் அல் லது குடியிருக்க வீடு கிடைக்காமல் குளிரில் செத் துப்போவான். நீங்கள் நியாயத்தைத் தான் பேசுகி றீர்கள். உங்களை எனக்கு புரிகிறது. ஆனால் நான் என்ன செய்வது?”

”என்ன செய்வது?” என்ன செய்வது?” என்றா கேட்கிறாய்?“ என்று கத்தினார் ஸ்கோர்சோவ் அவனிடம் நெருங்கிவந்து, ”போய் வேலை செய்! அதுதான் நீ செய்யக்கூடியது! நீ வேலை பார்க்க வேண்டும் !” என்று சத்தம் போட்டார்.

”வேலை.. ஆமாம் அது எனக்கே தெரி யும். ஆனால் எனக்கு எங்கே வேலை கிடைக் கும்?“ சத்தியமாக உழைத்துச் சம்பாதிக்க எனக்கு எங்கே வேலைகிடைக்கும்? நான் ஒரு கிளார்க் ஆகவேண்டுமென்றால் காலம் கடந்துவிட்டது. அதற்கு ஏதாவது ஒரு தொழிலில் எடுபிடியா

ளராக ஆரம்பித்து முன்னேறியிருக்க வேண்டும். என்னை ஒரு போர்ட்டராக யாரும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். காரணம் என்னை வேலை வாங்க முடியாது. எந்தத் தொழிற்சாலை யிலும் என்னை வைத்துக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அங்கு வேலை செய்ய ஏதாவது தொழில் தெரிந்திருக்கவேண்டும். எனக்கோ எது வும் தெரியாது". என்று காரணங்களை அடுக்கிப் புலம்பினான்.

"போதும் நிறுத்து. உங்களுக்கெல்லாம் எதா வது சாக்கு கிடைத்துக்கொண்டே இருக்குமே. எனக்காக விறகு வெட்டிக்கொடுப்பாயா?"

"அந்த வேலை செய்ய எனக்கு பிரச்சனை எது வும் இல்லை. ஆனால், இந்தக் காலத்தில் திற மையான விறகு வெட்டிகள் கூட சாப்பிட ஒன்றும் கிடைக்காமல் பட்டினிகிடக்கிறார்கள்..."

"உங்களைப் போன்ற சோம்பேறிகள் எல்லோ ரும் இப்படிதான் பேசுவீர்கள். ஏதாவது வேலை தருகிறேன் என யாராவது முன் வந்தால் வேண் டாம் என்று தட்டிக்கழிப்பீர்கள். என் வீட்டுக்கு வந்து விறகு வெட்டிக்கொடுக்கிறாயா?"

"சரி அய்யா..செய்கிறேன்."

"நல்லது. சீக்கிரம் ஏற்பாடு செய்துவிடலாம். பார்க்கலாம்".

ஸ்கோர்சோவ் கைகளைத் தேய்த்துக் கொண்டே வேகமாகச் சென்றார். (யாருக்கும் துன் பம் தரவேண்டும் என்ற எண்ணம் உள்ளவராக அவர் இல்லை) சமையலைறையில் இருந்த பெண்மணியைக் கூப்பிட்டார்.

“ஓல்கா. இங்கேவா.. இந்த ஆளை விற குக் கிடங்குக்குக் கூட்டிச் செல். அங்கு இருக்கும் விறகை வெட்டட்டும்.”

ஏதோ குழப்பத்தில் உள்ளவன் போல், தோள் களை உலுக்கியபடி நோஞ்சானாக இருந்த அந்த ஆள் சமையல்காரியைப் பின்தொடர்ந்து சென் றான். அவன் போகும் விதமே அவன் பட்டினி கிடப்பதாலோ, வேலை வேண்டும் என்றோ விறகு வெட்ட ஒப்புக்கொண்டது போல் தெரியவில்லை. தன் பெருமையைக் காப்பற்றிக்கொள்ளவும் அவ மானப்படாமல் இருக்கவும்தான் ஒப்புக்கொண் டுள்ளான். வாயாலேயே அவன் மாட்டிக்கொண் டான் என்றுதான் நினைக்கத் தோன்றியது. மேலும் வோட்கா, அவன் பலத்தையும் ஆரோக்கியத்தை யும் குறைத்திருந்தது தெரிந்தது. வேலை செய்வ தற்கு அவனது உடல் சிறிதும் வளையாது என்ப தும் தெளிவாகத் தெரிந்தது.

ஸ்கோர்சோவ் வேகமாகச் சாப்பாட்டு அறைக் குச் சென்றார். அங்கிருந்தபடியே சன்னல் வழியாக விறகுக் கிடங்கையும் அங்கு என்ன நடக்கிறது என் பதையும் பார்க்க முடியும். சன்னல் அருகே நின்றி ருந்த ஸ்கோர்சோவ், சமையல்காரியும் அந்த பிச் சைக்காரனும் பின் வாசல் வழியாக முற்றத்துக்கு வந்து அங்கு தேங்கியிருந்த பனிக்கட்டிகளைத் தாண்டி கிடங்கை நோக்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஓல்கா தன்னுடன் வேலை செய்பவனைக் கோபமானப் பார்த்தாள். கிடங்கைத் திறந்துவிட்டு அதன் பிறகு கதவைக் கோபமான அடித்துச் சாத் தினாள்.

”அந்த பெண் காப்பி குடித்துக்கொண்டிருந் தபோது தொந்திரவு செய்துவிட்டோமா? என்ன ஒரு மோசமான ஜென்மம்!” என்று ஸ்கோட்சோவ் நினைத்தார்.

ஆசிரியர் என்று சொல்லிக்கொண்டே அந்த ஆள், மாணவன் என்று தன்னை அறிமுகம் செய்துகொண்ட அந்த ஆள், விறகுக்குவியல் மீது உட்கார்ந்து இருந்ததையும், சிவப்பு முகவாயைக் கைகளின்மீது வைத்தபடி நினைவில் மூழ்கிப் போய் இருந்ததையும் அவரால் பார்க்க முடிந் தது. குழப்பத்துடன் ஒரு விறகுக்கட்டையை தன் பக்கம் அந்தப் பிச்சைக்காரன் இழுத்துப் போட் டான். தன் கால்களுக்கு இடையில் அதை வைத் துக் கோடாரியால் சிரத்தையன்றித் தட்டினான். விறகு அசைந்து கொடுத்து விழுந்தது. மீண்டும் பிச்சைக்காரன் அதைத் தன் பக்கம் இழுத்தான். உறைந்து போகும் தன் கைகளில் வைத்து அதை ஊதிவிட்டு அதைக் கவனமாக வெட்ட ஆரம்பித் தான். தன் காலணியோ அல்லது தன் விரலையோ வெட்டிக்கொண்டு விடக்கூடாது என்ற பயத்தில் வெட்டுவதுபோல் இருந்தது. மறுபடியும் அந்த விற குத்துண்டு நிலத்தில் விழுந்தது.

ஸ்கோர்சோவின் கோபம் காணாமல் போயி ருந்தது. குடித்து வீணாய்ப் போய்விட்ட ஒரு நோயா ளியை இப்படிக் குளிரில் வேலை செய்ய வைத்து விட்டதற்கு ஒரு வித அவமானம் ஏற்பட்டது.

“போகட்டும். இதை நான் அவனுடைய நல்ல தற்காகத்தான் செய்தேன்” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு தன் அலுவலகத்திலிருந்து சாப்பாட்டு அறைக்குச் சென்றான்.

ஒரு மணி நேரம் கழிந்ததும் ஓல்கா உள்ளே வந்தாள். விறகுகள் எல்லாம் வெட்டி முடித்தாகி விட்டது என்று சொன்னாள்.

“நல்லது அவனுக்கு ஒரு ரூபிள் கொடு..” என் றார் ஸ்கோர்சோவ். அவனுக்கு விருப்பம் இருந் தால் ஒவ்வொரு மாதமும் முதல் தேதி இங்கு வந்து விறகு வெட்டலாம். நம்மிடம் ஏதாவது வேலை இருக்கும்” என்று சொன்னார்.

அடுத்த மாதம் முதல் தேதி அந்த ஆள் தலை காட்டினான். நிற்கக் கூட முடியாத நிலையி லும் அரை ரூபிள் சம்பாதித்துச் சென்றான். அன்று முதல் அவனை அடிக்கடி அந்த முற்றத்தில் பார்க்க முடிந்தது. ஒவ்வொருமுறையும் அவனுக்கு வேலை இருந்தது. பனிக்கட்டிகளை கூட்டுவது, விறகுக்கி டங்கை ஒழுங்கு செய்வது, மெத்தை, தலையணை களைத் தூசித்தட்டி சுத்தம் செய்வது என ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டான். ஒவ்வொரு முறையும் இருபது முதல் நாற்பது கோபெக்ஸ்வரை ஊதிய மாகப் பெற்றான். ஒரு முறை, பழைய கால்சட்டை யைக் கூட அவனுக்கு தந்துனுப்பினார்கள்.

“நல்லது. நான் பேசியதுக்குப் பலன் கிடைத் திருக்கிறது” என்று சொல்லிக்கொண்டே அவனி டம் ஒரு ரூபளைக் கொடுத்தார். இந்தப் பணம் நீ பட்ட கஷ்டத்திற்கு. உனக்கு வேலை செய்ய எந்தத் தயக்கமும் இல்லை. ஆர்வமானவன் தான் என்பது புரிகிறது. உன் பெயர் என்ன?”

“லஷ்கோவ்”

“நல்லது லஷ்கோவ். இப்பொழுது உனக்கு வேறு ஏதாவது முறையான வேலை கொடுக்கலாம். நீ எழுதுவாயா?”

“எழுதுவேன்”

”அப்படியானால் நாளைக்கு இந்தக் கடிதத் தைக் கொண்டுபோய் என் நண்பனிடம் கொடு. அவன் உனக்கு ஏதாவது எழுதும் வேலை தரு வார். நன்றாக கஷ்டப்பட்டு வேலைப்பார். குடிக் காதே. நான் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொள். போய்வா”.

ஒரு மனிதனை சரியான பாதைக்கு கொண்டு வந்த திருப்தியில் லஷ்கோவை வாஞ்சையாக தட் டிக்கொடுத்ததோடு கை கொடுத்தும் வழி அனுப் பிவைத்தார். ஸ்கோர்சோவ். லஷ்கோவ் கடிதத்தை எடுத்துக் கொண்டு போனான். அன்றிலிருந்து வீட்டு முற்றத்தில் வேலைப் பார்க்க வருவதில்லை.

இரண்டு வருடம் ஓடியது. ஒரு நாள் மாலை, ஒரு நாடக அரங்கில் நுழைவுச் சீட்டு வாங்க பணம் செலுத்திக் கொண்டிருந்தபோது, ஸ்கோர் சோவ் பக்கத்தில் இருந்த ஆளைக் கவனித்தார். சீட்டுத் தருபவரிடம் கேலரியில் இடம் வேண்டும் என்று சொல்லிச் செப்புக் காசுகளாக் செலுத்துவ தைப் பார்த்தார்.

“அட, லஷ்கோவ் தானே நீ ! என்று ஸ்கோர் சோவ் கத்தினார். அவருடைய பழைய விறகுவெட் டியை அடையாளம் கண்டு கொண்டவர், ”எப்படி இருக்கிறாய்? இப்பொழுது என்ன செய்து கொண் டிருக்கிறாய், எல்லாம் எப்படி போகிறது?” என்று விசாரிக்க ஆரம்பித்தார்.

“எல்லாம் நன்றாகப் போய்க் கொண்டிருக்கி றது. நான் இப்பொழுது ஒரு நோட்டரியாக இருக் கிறேன். மாதம் முப்பத்தைந்து ரூபள் சம்பாதிக்கி றேன்” என்றான் அவன்.

”எல்லாம் ஆண்டவன் செயல் ! ரொம்ப சந்தோஷம் உன்னைப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. ஒரு வகையில், நீ எனக்கு ஒரு மகன் மாதிரி, சரியான பாதையில் உன்னைத் தள்ளிவிட்டேன். புரிகிறதா? உன்னை எப்படித் திட்டினேன் ஞாபகம் இருக்கிறதா? என் காலடியில் விழும் அளவு அன்றைய தினம் உன்னை ஆக்கியிருக்கியிருந்தேன். நான் சொன்ன வார்த்தைகளை மறக்காமல் இருந்ததற்கு நன்றி”.

“நானும் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்” என்றான் லஷ்கோவ். ”நான் உங்களிடம் அன்றைக்கு வராமல் போயிருந்தால், இன்றுவரை என்னை ஒரு ஆசிரியராகவோ மாணவராகவோ தான் சொல்லிக் கொண்டு திரிந்திருப்பேன், உண்மைதான். உங்கள் ஆதரவு கிடைத்ததால் பாழும் கிணற்றில் விழாமல் தப்பினேன்“ என்று கலங்கினான்.

“உண்மையிலேயே எனக்குக் கேட்க சந்தோஷமாக இருக்கிறது” என்று மீண்டும் சொன்னார் ஸ்கோர்சோவ்.

“உங்களுடைய பரிவான வார்த்தைகளுக்கும் நடவடிக்கைக்கும் நன்றி அய்யா. அப்பொழுது நீங்கள் அருமையாக என்னிடம் பேசினீர்களா. உங்களுக்கும் உங்கள் சமையல்கார அம்மாவுக்கும் நான் நிறைய கடன்பட்டிருக்கிறேன். அந்த புண்ணியவதிக்கு கோடி புண்ணியம். ஆமாம். அன்றைய தினம் அற்புதமாகப் பேசினீர்கள். நான் சாகும் வரை உங்களுக்குக் கடன்பட்டிருப்பேன். ஆனால், சரியாகச் சொல்லவேண்டும் என்றால், உங்களுடைய சமை

யல்காரப் பெண் ஓல்காதான் என்னை காப்பாற்றிய வர்”

“எப்படி?”

“இப்படித்தான். அதாவது, உங்கள் வீட்டுக்கு விறகு வெட்ட வரும்போது, அந்த அம்மா இப் படி ஆரம்பிப்பார்கள். “என்ன முண்டம் நீ! பாழாய் போனவனே. நீ அவ்வளவு தான். பாவம்! இப்படிச் சொல்லிவிட்டு எனக்கு எதிரில் சோகமாக உட் கார்ந்து கொள்வார். என் முகத்தைப் பார்த்தபடி அழுவார். “உண்மையிலேயே பாவப்பட்ட ஆளப்பா நீ. உனக்கு எந்த சந்தோஷமும் இந்த உலகத் தில் இல்லை. நீ அடுத்த போகவிருக்கும் உல கத்திலும் எதுவும் இருக்காது, குடிகாரா! நீ நர கத்தில் போய் வெந்து மடியப்போகிறாய். என்ன பாவப்பட்ட ஜென்மம் நீ.” என்று இந்த தொனியில் புலம்பிக் கொண்டே இருப்பார். எனக்காக எவ்வ ளவு துன்பத்தை அனுபவித்திருப்பார் ; எவ்வளவு கண்ணீர் விட்டிருப்பார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், முக்கியமான விஷயம் என்னவென்றால், எனக்கு பதில் விறகுகளை வெட்டி விடுவார். உங்க ளுக்கு ஒரு விஷயம் தெரியமா சார்? உங்களுக் காக நான் ஒற்றை விறகைக் கூட வெட்டியது கிடையாது. எல்லாவற்றையும் அவர்தான் செய் தார். ஏன் இந்த செயல் என்னை காப்பாற்றியது, ஏன் நான் மாறினேன், அவரைப் பார்த்ததிலிருந்து குடிப்பதை நான் ஏன் நிறுத்தினேன். எதற்கும் என் னிடம் விளக்கம் இல்லை. எனக்கு தெரிந்ததெல் லாம் இதுதான். அவருடைய வார்த்தைகளும் நட வடிக்கைகளும் என் உள்ளத்தில் ஒரு மாற்றத்தை உண்டாக்கக் காரணமாயிருந்தன. என்னை நல்ல பாதையில் கொண்டு சென்றார். அவரை ஒரு

போதும் என்னால் மறக்க முடியாது. சரி சரி. நான் புறப்பட வேண்டிய நேரம் இது. மணி அடித்துவிட் டது" என்று சொன்ன லஷ்கோவ் குனிந்து வணங்கி விட்டு கேலரியை நோக்கிக் கிளம்பினான்.

****

நிஷ்ஷிலி எனும் செய்தித்தாளில், ஜனவரி 19, 1889 இல் இக்கதை முதலில் வெளிவந்தது.

4. துறவு

பதினைந்தாம் நூற்றாண்டில், இப்பொழுது நடப்பது போலவே, ஒவ்வொரு நாளும் சூரியன் காலையில் எழுவதும் மாலையில் மறைவதுமாக இருந்தது. சூரியனின் முதல் கதிர்கள் பனித்துளியை முத்தமிட்டவுடன் பூமி விழித்துக் கொள்ளும். மகிழ்ச்சியும் உற்சாகமும் நம்பிக்கையும் நிறைந்த ஒளி எங்கும் பரவும். மாலைவேளையில், இதே பூமி அமைதியாகி இருளில் மூழ்கும். சில சமயங்களில், மேகங்கள் திரண்டு வந்து கோபமாக இடி இடிக்கும். இல்லையென்றால், வானில் இருந்து ஒரு நட்சத்திரம் தூங்கி விழும். அல்லது, பயந்தபோன துறவி ஒருவர் ஓடி வந்து, மடத்துக்கு மிக அருகில் ஒரு புலியைப் பார்த்ததாகத் தன்னுடன் தங்கியிருக்கும் அருட்சகோதர்களிடம் சொல்வார். அதற்குமேல் ஒன்றும் இல்லை. பிறகு மீண்டும் அதே நாள், அதே இரவு.

மடத்தில் இருந்த துறவிகள் வேலை செய்வதும் பிரார்த்தனை செய்வதுமாக காலத்தைக் கழித்தனர். அவர்களில் வயதான துறவி, லத்தீன் மொழியில் பாடல்களைப் புனைவார், இசையமைத்து ஆர்கன் கருவியில் வாசிப்பார். அந்த முதியவருக்கு அபாரத் திறமை இருந்தது. அவருடைய இசை காற்றில் அசைந்து வெளியேரும் போது யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது எனும் அளவுக்கு நேர்த்தியாக ஆர்கன் வாசிப்பார். வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் இருப்பதால் கேட்கும் சக்தியை வெகுவாக இழந்திருந்தவர்களால் கூட இவரது இசையைக் கேட்டதும் கண்களில் நீர் ததும்புவதைக் கட்டுபடுத்த முடியாது.

அந்தத் துறவி பேசிய போது, அது சாதாரணமான விஷயமாக இருந்தாலும் கூட, அதாவது மரங்கள், கொடிய மிருகங்கள், கடல் இப்

படி எதைப் பற்றி அவர் பேசினாலும், சிரிக்கா மலோ அழாமலோ யாராலும் அவரது பேச்சைக் கேட்க முடியாது. அவருடைய ஆர்கன் கருவியில் ஒலிக்கும் இசை அவரது ஆன்மாவிலும் எதிரொ லிப்பதாகத் தோன்றும். பிரம்மாண்டமான விஷ யங்களைப் பற்றி அவர் பேசிய போதும், கடுமை யான கோபமோ அதிக சந்தோஷமோ ஏற்படும் போதும், உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கிப்போவார். கோபத்தில் இருக்கும் அவரது கண்களில் இருந்து கண்ணீர் ததும்ப ஆரம்பிக்கும், முகம் சிவக்கும், அவரது குரல் இடி போல் முழங்கும். இதைக் கேட்டுக்கொண்டிருக்கும் துறவிகள், பேசுபவரின் அவருடைய உணர்ச்சிப் பெருக்கு, தங்களுடைய உள்ளத்தை உலுக்குவதாக உணர்வார்கள். இது போன்ற அருமையான அற்புதமான தருணங்க ளில், அவருடைய சக்தி, எல்லையில்லாமல் இருந் தது. அந்த நேரத்தில் அவர் மட்டும் ஆணையிட் டிருந்தால் போதும். அவரைவிட வயதில் பெரிய வர்கள் கூட துறவியின் விருப்பத்தை நிறைவேற்ற ஒருமனதாக, சந்தோஷமாக ஓடிச் சென்று கடலில் குதித்திருப்பார்கள்.

அவரது இசை, குரல், இறைவனைப் போற்றி அவர் பாடும் வரிகள் இவை எல்லாம் அங்கிருந்த துறவிகளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை வாரி வழங்குவதாக அமைந்தன. எந்திரமயமான அவர்க ளுடைய வாழ்க்கையில், மரங்கள், மலர்கள், வசந்த காலம், இலையுதிர் காலம் எல்லாம் எரிச்சலை உண்டாக்கின. கடலின் ஓசை இரைச்சலாக இருந் தது ; பறவைகளின் பாடல் நாராசாரமாக ஒலித்தது. ஆனால், அன்றாடம் தேவைப்படும் உணவு போல், அவர்களுக்கு கிடைத்த முதிய துறவியின் திறமை மட்டும் விதிவிலக்கு.

சில வருடங்கள் கழிந்தன. இரவும் பகலும் எவ் வித மாற்றமும் இல்லாமல் இயங்கிக் கொண்டி ருந்தன. அந்த மடத்தின் அருகில் கொடிய மிரு கங்களையும் பறவைகளையும் தவிர வேறு எந்த உயிரினமும் தலைகாட்டுவதில்லை. மடம் இருக் கும் இடத்துக்கும் மனிதர்கள் வாழும் இடத்துக்கும் இடையே தூரம் அதிகம். அங்கிருந்து மடத்துக்கு வரவேண்டும் என்றாலோ இங்கிருந்து அங்கு செல்லவேண்டும் என்றாலோ நூறு மைல் அகலம் கொண்ட பெரிய பாலைவனத்தை தாண்டியாக வேண்டும். அதுவும் யாருக்கு வாழ்க்கையின் மேல் எவ்வித மதிப்பும் இல்லையோ, யார் வாழ்க்கையை வெறுத்தவரோ அவர்கள்தான் இப்படி துணிந்து பயணம் மேற்கொண்டு ஏதோ ஒரு கல்லறைக்கு வருவது போல் மடத்துக்கு வருவார்கள்.

நிலைமை இப்படி இருக்க, ஒரு நாள் இரவு ஒரு நபர் வந்து தங்கள் மடத்தின் கதவைத் தட் டியபோது துறவிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. வந்தவன் பார்க்க நகரத்தைச் சேர்ந்தவன் போல் இருந்தான். வாழ்க்கை மேல் விருப்பம் வைத்து பாவங்களைச் செய்து காலம் தள்ளும் சராசரி மனிதர்களில் ஒருவன். ஜபம் சொல்வது, மூத்த துறவியிடம், ஆசீர்வாதம் கேட்பது என எதையும் செய்வதற்கு முன் வந்திருப்பவன் சாப்பாடும் மது வும் கேட்டான். 'நகரத்தில் இருந்து பாலைவனத் திற்கு எப்படி வந்து மாட்டிக்கொண்டாய்?' என்று அவனிடம் கேட்டார்கள். அவன் வேட்டைக்கு வந் தவன். குடிக்க நிறைய வைத்திருந்திருந்தானாம். பிறகு வழியைத் தவற விட்டுவிட்டான். அவன் ஒரு துறவியாகி தன் ஆன்மாவை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற புத்திமதியை கேட்டதும், சிரித் தபடியே, "நான் உங்களுடைய நண்பன் இல்லை" என்று பதில் சொன்னான்.

அவனுக்குத் தரப்பட்ட உணவையும் ஒயினை யும் சாப்பிட்ட பிறகு அவனுக்கு உணவளித்த துற விகளைப் பார்த்து எரிச்சலுடன் தலையை ஆட்டி யபடி பேசினான். ”துறவிகளாகிய நீங்கள் ஒன்றும் செய்வதில்லை. உங்கள் சாப்பாடு, மது இவற்றின் மீது தான் உங்கள் அக்கறை எல்லாம். உங்கள் ஆன்மாவைக் காப்பாற்ற இது தான் வழியா?

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நீங்கள் இங்கே தங்கி, அமைதியாக சாப்பிட்டுக் கொண் டும், குடித்துக்கொண்டும், இறைவனின் ஆசீர்வா தம் கிடைக்கும் என்ற கனவில் காலத்தைக் கழிக் காதீர்கள். இதே நேரத்தில் உங்கள் சகோதரர்கள் வழி தெரியாது நரகத்தில் உழல்கிறார்கள். அங்கே நகரத்தில் என்ன நடக்கிறது என்று பாருங்கள். சிலர் பசியில் சாகிறார்கள் ; மற்றவர்கள் தங் களிடம் உள்ள பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் ஊதாரித்த னத்தில் ஈடுபட்டு தேனில் விழுந்த ஈக்களாக மடி கிறார்கள் மனிதர்களிடையே நம்பிக்கையோ நேர் மையோ இல்லை. அவர்களை காப்பாற்றுவது யார் கடமை? காலை முதல் மாலை வரை குடித்துக் கொண்டு இருக்கிறேனே, என்னுடைய கடமையா அது? இங்கே நான்கு சுவர்களுக்கிடையே உட் கார்ந்து கொண்டு ஒன்றும் செய்யாமல் இருப்பதற் காகவா கடவுள் உங்களுக்கு நம்பிக்கை, நேசிக் கும் கருணை உள்ளம் ஆகியவற்றைக் கொடுத்து இருக்கிறார்?” வந்தவன் பொரிந்து தள்ளினான்.

போதையில் நகரவாசி செய்த போதனை அன் னியமாக இருந்தாலும் மூத்த துறவியை ஒரு வகை யில் பாதித்தது. அவரும் உடனிருந்த துறவிகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். முகம் வெளிறிப்போயிருந்த அவர் பேசினார். “சகோத ரர்களே, அவன் சொல்வது சரிதான். அறியாமை,

பலவீனம் ஆகியவற்றின் காரணமாகப் பாவப்பட்ட மனித இனம் நம்பிக்கையின்மையிலும் பாவத்திலும் உழன்று மடிகிறது. மேலும், ஏதோ இது நம் வேலை இல்லை என்பது போல் நாம் இருக்கும் இடத்திலிருந்து நகராமல் இருக்கிறோம். அவர்களுக்கு மறந்து போன கிருத்துவை அவர்களிடம் சென்று நினைவுபடுத்த நான் ஏன் அங்கு செல்லக் கூடாது?”

நகரவாசியின் வார்த்தைகள் மூத்த துறவியின் மனதை இளகவைத்தது. அடுத்த நாள், உடன் இருந்தவர்களை அழைத்தான். எல்லோரிடமும் விடைபெற்று நகரத்தை நோக்கி, நடக்க ஆரம்பித்தார். எனவே, அவருடைய இசை, அவரது பாடல்கள் வார்த்தைகள் எல்லாம் இழந்து அங்கிருந்த துறவிகள் தனிமையில் இருக்க வேண்டியதாகியது.

துறவிகள் முதலில் ஒரு மாதம், பிறகு இரண்டு மாதங்கள் எனக் காத்திருந்து பார்த்தார்கள். அந்த வயதான துறவி திரும்பவில்லை. மூன்றாவது மாதக் கடைசியில் ஒரு வழியாக அவருடைய சத்தத்தைக் கேட்க முடிந்தது. துறவிகள் எல்லோரும் அவரை நோக்கி ஓடிச் சென்று கேள்வி மேல் கேள்வியாக கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களோடு சேர்ந்து சந்தோஷமாக இருப்பதற்குப் பதிலாக அவர் சோகமாக அழுதார். எதுவும் பேசவில்லை. அவர் மிகவும் மெலிந்து போய் இருப்பதையும் வெகுவாக சோர்ந்து போய் இருப்பதையும் துறவிகள் கண்டனர். அந்தச் சோர்வும் ஆழமான சோகமும் அவருடைய முகத்தில் வெளிப்பட்டன. அவர் அழுதபோது, ஆழமாக புண்பட்ட மனிதர் ஒருவர் போல் தோன்றினார்.

பின்னர், அங்கிருந்த துறவிகளும் அழுதார்கள். அவரிடம், ஏன் அழுகிறீர்கள், ஏன் உங்கள்

முகம் இப்படி சோர்ந்திருக்கிறது என்று கேட்டார் கள். ஆனால், அவர் பதில் எதுவும் பேசவில்லை. அறைக்குப் போய் கதவைச் சாத்திக் கொண்டார். ஐந்து நாட்கள் அங்கேயே இருந்தார். சாப்பிடவும் இல்லை ; குடிக்கவும் இல்லை. இசைக்கருவியை யும் தொடவில்லை. துறவிகள் சென்று கதவைத் தட்டிப்பார்த்தார்கள். வெளியேவந்து அவரது துய ரத்தை தங்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி மன் றாடிக் கேட்டுக் கொண்டனர். ஆனால் ஆழ்ந்த மௌனமே அவருடைய பதிலாக இருந்தது.

ஒரு வழியாக அவர் வெளியே வந்தார். அவ ரைச் சுற்றியிருந்த துறவிகளிடம் அழுது அழுது வீங்கிய முகங்களில் சோகமும், ஆச்சரியமும் கலந் திருந்தன. கடந்த மூன்று மாதத்தில் அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி அவர்களிடம் பேச ஆரம்பித்தார். மடத்தில் இருந்து நகரத்துக்கு அவர் மேற்கொண்ட பயணத்தை விவரித்தபோது அவ ருடைய குரல் அமைதியானது. கண்களில் சிரிப்பு. அவர் சென்ற பாதையில் பறவைகள் காதோரம் வந்து பாடல் இசைத்தன. ஏதோ, எதிர்கொள்ளப் போகும் போரில், நிச்சயம் வெற்றிப் பெறப்போகும் படைவீரன் போல் தன்னை உணர்ந்தார். இப்ப டிக் கனவு கண்டபடியே, பாடல்களை உருவாக்கிக் கொண்டே நடந்ததில் அவருடைய பயணத்தின் முடிவு வந்துவிட்டது. இதை உணர்ந்ததும் அவ ருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால் இப்பொழுது அவர் குரல் நடுங்கியது. கண்களில் சீற்றம் தெரிந்தது. நகரத்தைப் பற்றியும் மனிதகுலத்தை பற்றியும் சொல்லத் தொடங்கிய தும் அவரது கோபம் பொங்கியது. அவர் நகரத்திற் குள் நுழைந்தபோது அவர் காண நேர்ந்த காட் சியை அவர் அதற்கு முன் பார்த்ததில்லை. கனவி லும் நினைத்துப் பார்த்ததுமில்லை. இந்த இடத்தில்,

தன் வயதான காலத்தில், வாழ்க்கையில் முதன் முறையாக சாத்தானின் வலிமையைக் கண்கூடா கக் கண்டார். மேலும், ஏற்றத்தாழ்வின் ஆதிக்கத் தையும், மனித குலத்தில் வேரூன்றிப்போன பலவீ னத்தையும் புரிந்துகொண்டார்.

துரதிஷ்டவசமாக, அவர் நுழைந்த முதல் வீடு பாவங்களின் இருப்பிடமாக இருந்தது. அங்கே பெரும் பணம் படைத்த ஐம்பதுக்கும் மேற்பட்ட வர்கள் குடித்துக் கும்மாளமிட்டுக் கொண்டு இருந் தார்கள். போதை தலைக்கேறி பாட்டுப் பாடியது டன், அதிர்ச்சியளிக்கக்கூடிய பயங்கரமான விஷ யங்களை துணிச்சலாகப் பேசிக்கொண்டு இருந் தார்கள். அவற்றை கடவுளுக்கு பயப்படும் எவ ரும் உச்சரிக்கக்கூடத் தயங்குவார்கள். அவர்கள் கட்டற்ற சுதந்திரத்துடனும், சந்தோஷத்துடனும், துணிச்சலடனும் இருந்தார்கள். அவர்களுக்கு கட வுள் மீதோ, பிசாசு மீதோ, சாவைப் பற்றியோ பயம் இல்லை. அவர்கள் நினைத்ததை செய்தார் கள் ; பேசினார்கள். அவர்கள் இஷ்டப்படி எங்கு செல்ல வேண்டும் என்று தோன்றியதோ அங்கெல் லாம் சென்றார்கள். பொன்னிறமாய் காட்சியளித்த மது, நிச்சயமாக நல்ல வாசனையுடனும் சுவை யோடும் தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அதைக் குடித்தவர்கள் எல்லோரும் உற்சாகமா கச் சிரித்ததோடு மட்டுமல்லாமல் மீண்டும் அதை ஆர்வத்தோடு அருந்தச் சென்றார்கள். எத்தகைய மயக்கும் தன்மை அச்சுவையில் மறைந்துள் ளது என மதுவுக்குத் தெரிந்ததுபோல், குடித்த வர்களிடையே அது சிரிப்பை வரவழைத்து, குதூ கலத்தை மேலும் அதிகமாக்கியது. அழுவதையும், கோபத்தில் பொருமுவதையும் விட்டு விட்டு அந்த வயதான துறவி தான் பார்த்ததையெல்லாம் விளக் கமாகச் சொல்லிக்கொண்டே போனார்.

“குடித்து கொண்டாட்டத்தில் இருந்தவர்களின் மத்தியில் ஒரு மேசை போடப்பட்டு, அதன்மீது அறைகுறை ஆடையுடன் ஒரு பெண் நின்றிருந் தாள். அவளுடைய வனப்பை விட உற்சாகமூட்டக் கூடிய உன்னதமான விஷயத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாது. இளமையாக இருந்த அவளுக்கு நீண்ட கூந்தல், கருப்பு கண்கள், தடித்த உதடு கள். வெட்கத்தை மறந்து அகந்தையோடு காட் சியளித்த அந்த பேய், பால்போல் வெண்மையான பற்களைக் காட்டி, “நான் எவ்வளவு அழகாகவும் திமிரோடும் இருக்கிறேன் பார்” என்று சொல்வது போல் இருந்தது. பட்டுச் சரிகையிலான அழகான ஆடைகள் அவள் தோள்களில் இருந்து சரிந்தன. ஆனால் உடையின் அடியில் மறைத்துவைக்க முடியாத அவளது அழகு, இளவேனில் காலத்தில் பூமியில் முளைத்து எழும் பசும்புல்லைப்போல, மடிப்புகள் வழியாக, ஆர்வமுடன் வெளியேறியது. வெட்கத்தை மறந்த அப்பெண் மதுவை அருந்திய வுடன் பாடல்களை பாடியபடி அங்குக் கொண்டாட் டத்தில் கலந்து கொண்டவர்களிடம் தன்னையே அர்ப்பணித்தாள்.

சீற்றத்தோடு கைகளை வெகுவாக ஆட்டிய வாறு பேசிய அந்தத் துறவி, மேலும் அவர் பார்த்த பந்தய மைதானங்கள், எருதுச் சண்டை, நாடக அரங்குகள் ஆகிய விஷயங்களை விவரித்துக் கொண்டே போனார்.

மேலும், நிர்வாண நிலையில் உள்ள பெண் ணின் வடிவங்களைக் களிமண்ணால் செய்து வண்ணம்பூசி வைக்கப்பட்டிருந்த கலைஞர்களின் பயிற்சிக் கூடங்களைப் பற்றி விரிவாக விளக்கி னார். அவர் பேச்சில் வசீகரமும் ஓசை நய மும் இருந்தன. ஏதோ கண்ணுக்குப் புலப்ப டாத ஓர் இசைக்கருவியை வாசிப்பது போல்,

அவர் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார். ஆச்சரியத்தில் ஸ்தம்பித்துப்போன துறவிகள், அவருடைய பேச்சை ஆர்வமாகக் கேட்டு ஆனந்தத்தில் மெய்மறந்த நிலையில் இருந்தனர். பிசாசின் அத்தனை வனப்புகளையும், வஞ்சகத்தின் அழகையும், மோசமான பெண்ணின் கவர்ந்திழுக்கும் வடிவத்தையும் விரிவாக விவரித்து முடித்த பிறகு, சாத்தானைச் சபித்துவிட்டு, திரும்பவும் தன் அறைக்குள் சென்று மறைந்து போனார்.

அடுத்த நாள் காலை அறையை விட்டு வெளியே வந்து பார்த்தபோது, அவருடன் இருந்த துறவிகளில் ஒருவரைக்கூட மடத்தில் பார்க்க முடியவில்லை. எல்லோரும் நகரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

******

இக்கதை, 1888ஆம் ஆண்டு, முதன் முதலில்
நியூ டைம்ஸ் இதழில் வெளிவந்தது.

5. வீட்டில்

“புத்தகம் கேட்டு அனுப்பியதாகக் கிரிகோரியி டமிருந்து ஒருவர் வந்தார். நீங்கள் வீட்டில் இல்லை என்று சொல்லிட்டேன். தபால்காரன் செய்தித் தாள்களையும் இரண்டு கடிதங்களையும் கொண்டு வந்தான். பிறகு, இன்னொரு விஷயம், சார், நீங் கள் கொஞ்சம், செரியோழாமீது கவனம் செலுத் தனும். இன்று காலையும் நேற்று முன் தினமும் அவன் புகை பிடிப்பதைப் பார்த்தேன். அது எவ் வளவு தவறு என்று அவனிடம் சொல்லும்போது தன் விரல்களை எப்பொழுதும் போல் காதின்மேல் வைத்து என் பேச்சு எடுபடாதபடி சத்தமாகப் பாடத் தொடங்கிட்டான்”.

உஜின் பிகோவ்ஸ்கி, அந்தப் பகுதியின் நீதி மன்றத்தில் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றுகி றார். அவர் சற்றுமுன்தான் ஒரு வழக்கு விசா ரணையை முடித்துவிட்டுத் தன் அலுவலகத்திற் குத் திரும்பியிருந்தார். கையுறைகளைக் கழட்டிக் கொண்டே அந்த வேலைக்காரப் பெண் சொல்லும் செய்தியைக் கேட்டதும் அவரைப் பார்த்துச் சிரித் தார். “ஆக, செரியோழா சிகரெட் புகைக்கிறான் !” எனத் தோள்களைக் குலுக்கியபடியே ஆச்சரியப் பட்டார். “அந்த வாண்டுப் பயல் வாயில் சிகரெட்! அவனுக்கு என்ன வயதாகிறது?”

“ஏழு வயது. உங்களுக்கு இது சிறிய விஷய மாகத் தோன்றலாம். ஆனால், அவன் வயதுக்குப் புகைப்பது ஒரு தீய பழக்கம். மிகவும் ஆபத்தானது. மேலும், கெட்டப் பழக்கங்களை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.”

“நீ சொல்வது ரொம்ப சரி. அவனுக்கு புகை யிலை எங்கு கிடைக்கிறது?”

“உங்கள் மேசையிலிருந்தது தான்”

“அங்கிருந்தா எடுக்கிறான்? அவனை என்னிடம் அனுப்பு”

அந்தப் பெண் போனபிறகு, எழுதப் பயன்படுத்தும் தன் மேசையின் முன் இருந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி யோசனையில் ஆழ்ந்தார். ஏன் என்று தெரியாமல் அவரது மனத்திரையில் ஒரு காட்சி விரிந்தது. ஒரு அடி நீளத்துக்குப் பெரிய சிகரெட்டை வாயில் வைத்தபடி செரியோழா சிகரெட் புகை மண்டலத்தின் நடுவில் இருக்கும் காட்சி அவருக்குச் சிரிப்பை வரவழைத்தது. அதே நேரத்தில், பொறுப்பும், பதற்றமும் நிறைந்த அப்பெண்ணின் முகம், கடந்த கால நினைவுகளைக் (பாதி மறந்து போய்விட்டது) கிளறியது. அப்பொழுதெல்லாம் இப்படிப் பள்ளியில் புகைபிடிக்கும் பழக்கம் ஆசிரியர்களிடமும் பெற்றோரிடமும் ஏறக்குறைய இனம் புரியாத பயத்தை ஏற்படுத்தியிருந்தது. அது உண்மையிலேயே பயங்கரமாக இருந்தது. புகைபிடிக்கும் பிள்ளைகளை எவ்வித தயவு தாட்சண்யமுமின்றி பிரம்பால் அடிப்பார்கள். பள்ளியைவிட்டு நீக்கிவிடுவார்கள். அவர்களது வாழ்க்கை வீணாக்கப்பட்டது. இத்தனைக்கும் எந்த ஒரு ஆசிரியருக்கும், தந்தைக்கும் புகைப்பிடிப்பதால் ஏற்படும் குற்றம், அதனால் விளையும் தண்டனை, இவற்றைப் பற்றித் துல்லியமாக எதுவும் தெரிந்திருக்கவில்லை. நல்ல அறிவுபடைத்த மக்கள் கூட தங்களுக்குப் புரியாத இந்தத் தீயப் பழக்கத்தை எதிர்க்கத் தயங்கவில்லை.

பிகோவ்ஸ்கிக்கு வயதான அவருடைய பள்ளி முதல்வர் நினைவுக்கு வந்தார். நன்கு படித்த, நல்ல இயல்புகளைக் கொண்ட அவருக்குச் சிகரெட்டுடன் ஒரு மாணவனைப் பிடித்துவிட்டால் போதும்.

கடும்கோபம் வந்துவிடும். முகமெல்லாம் சிவந்து போய் உடனடியாகப் பள்ளி நிர்வாகத்தின் சிறப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து அந்தக் குற்றம் செய் தவனை பள்ளியிலிருந்து நீக்க உத்தரவிடுவார். சமுதாயத்தின் சட்ட விதிகளில் அதுவும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. எவ்வளவு குறைவாக ஒரு தீமை புரிந்து கொள்ளப்படுகிறதோ, அவ்வ ளவு மோசமாகவும் பயங்கரமாகவும் அது எதிர்க்கப் படும்.

இப்படிப் பள்ளியைவிட்டு நீக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று மாணவர்களையும், தண்டனைக் குப் பிறகு அவர்களுக்கு அமைந்த வாழ்க்கையை யும் அலசிப் பார்த்த வழக்கறிஞர் சிந்தனையில் மூழ்கினார். பல நேரங்களில், குற்றத்தை விட தண் டனைதான் அதிகமாகத் தீங்கு விளைவிக்கிறது என்னும் முடிவுக்கு வராமல் அவரால் இருக்கமுடி யவில்லை. எந்தவொரு சூழ்நிலைக்கும் தன்னை வேகமாக மாற்றிக்கொள்ளும் வசதியை தற்போ தைய சமூகக் கட்டமைப்பு தன்னகத்தே கொண் டுள்ளது. அப்படி இல்லையென்றால், ஒருவன் தன் நியாயமான நடவடிக்கைகள், தொக்கி நிற்கும் நியாயமற்ற அடிப்படைகளைப் பற்றி ஒவ்வொரு நொடியும் கவனத்தில் கொள்வான். அதேபோல், கல்வி, இலக்கியம், சட்டம் போன்ற பொறுப்புகள் நிறைந்த, ஆனால் மோசமான விளைவுகளைத் தரக்கூடிய துறைகளில் கூட எந்த அளவு குறை வான நியாயமும் உறுதியும் காணப்படுகிறது என்ப தையும் அவன் எண்ணிப் பார்ப்பான்.

இது போன்ற எண்ண அலைகள் பிகோவ்ஸ் கியின் மூளையில் வந்து மோதியபடி இருந்தன. தளர்ந்து போய் ஓய்வெடுக்கும் மூளைகளில்தான் மேம்போக்கான, எளிதில் மறந்து போகும் நினைவு கள் வரும். அவை எப்பொழுது வருகின்றன? ஏன்

வருகின்றன? என்று யாருக்கும் தெரியாது. அவை சிறிது நேரம் தான் அங்குத் தங்கும். அதிக ஆழத் துக்குப் போகாமல் மூளையின் மேற்பகுதியிலேயே அந்த நினைவுகள் பரவிவிடுவது போல் தெரிகி றது. தங்கள் தொழிலில் ஈடுபட்டு ஒரே கோட்டில் பயணம் மேற்கொண்டு, மணிக்கணக்கில், நாள் கணக்கில் மனத்தை மூழ்கடிக்க வேண்டிய கட்டா யத்துக்கு ஆளானவர்களுக்கு இத்தகைய குடும் பப்பாங்கான, முழு சுதந்திரமான சிந்தனைகள் ஒருவித வசதியையும், ரம்மியமான அமைதியையும் கொண்டு வரும்.

அப்பொழுது மணி ஒன்பது. மேலே இருக்கும் மாடியில் யாரோ அங்குமிங்கும் வேகமாக நடந்து கொண்டிருந்தது தெரிந்தது. மூன்றாவது மாடியில் நான்கு கைகள் பியானோ வாசித்து கொண்டிருந் தன. மேலே வேகமாக நடந்து கொண்டிருந்தவ னின் பதற்றமான அடிகளை வைத்துக் கணக்கி டும்போது, கடுமையான பல் வலியால் பலி வாங் கப்பட்டவன் என்பது போல் தோன்றியது. சோம் பலான கனவுகளில் சஞ்சரிக்கும் மனதுக்கு ஏற்ற ஒரு விதமான அயற்சியான மாலைப்பொழுதின் நிசப்தத்தை அடர்த்தியாக்க, அந்த காலடி சப்தமும் அது ஏற்படுத்திய எந்திரகதியான இடைவெளிக ளும் உதவின.

இரண்டு அறைகள் தள்ளி இருக்கும் கூடத்தில் செரியோழாவும் அவனைக் கவனித்துக் கொள் ளும் பெண்ணும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“அ...ப்..பா.. வந்துட்டார்.....!...” பையன் பாட்டு பாடிக்கொண்டிருந்தான்.
“அப்..பா.. வந்து...ட்டாரு” அப்..அப்..அப்பா!”

“உங்க அப்பா கூப்பிடறார். சீக்கிரமா போ!” ஏதோ பயந்து போன பறவை போலக் கத்தினாள் அந்த பெண்.

“நான் அவனிடம் என்ன சொல்லலாம்” என்று பிகோவ்ஸ்கி யோசித்துப் பார்த்தார்.

ஆனால், தன் பிள்ளையிடம் என்ன சொல் வது என நினைத்துப் பார்ப்பதற்கு முன்னதாகவே செரியோழா அலுவலக அறைக்குள் நுழைந்து விட்டான். அவன் அணிந்திருந்த உடையை வைத் துதான் பையனா பெண்ணா என்று சொல்லும் படி யான சிறிய உருவம். அந்த அளவு மென்மையாக வும், அழகாகவும், மெலிந்தும் இருந்தான். பசுமை இல்லத்தில் வளர்க்கப்படும் செடியைப் போல தளர்ந்து போயிருந்தான். அவனது அசைவுகள், சுருட்டைமுடி, அவனது பார்வை, அவன் அணிந்தி ருந்த வெல்வெட் சீருடை எல்லாமே அழகாகவும் எடுப்பாகவும் இருந்தன.

“குட் ஈவ்னிங் டாடி”, அப்பாவின் முட்டி மீது ஏறி வேகமாக அவரது கழுத்தில் முத்தமிட்டபடி, “என் னைக் கூப்பிட்டியா?” என மெல்லிய குரலில் கேட் டான்.

“கொஞ்சம் இரு. கொஞ்சம் பொறு” என அவனைப் பக்கத்தில் இறக்கிவிட்டு சொன்னார். தொடர்ந்து,

“நீயும் நானும் முத்தமெல்லாம் கொடுத்துகிற துக்கு முன்ன நாம் பேசியாகணும். சீரியஸா பேச ணும். நான் உன் மேல ரொம்ப கோபமா இருக்கி றேன். உன்னை எனக்கு இனிமேல பிடிக்காது. புரி யுதா? சின்னமனுஷா! உன்னை எனக்கு பிடிக்கல. நீ என் பிள்ளை இல்ல” என்றார்.

செரியோழா தன் அப்பாவை உற்றுப் பார்த் தான். பிறகு பார்வையை மேசை மீது திருப்பித் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

“நான் என்ன செஞ்சேன்?” குழம்பிப் போய் கண்களை உருட்டியபடி கேட்டான். “நான் உன்

ஆபிஸுக்குள்ள ஒருமுறை கூட இன்னைக்குப் போகலையே. ஒன்னையும் தொடலையே”

“நத்தாலி நீ சிகரெட் புடிக்கிறதா இப்பதான் சொல்லிட்டு போறா. இது நிஜமா? நீ சிகரெட் புடிக் கிறாயா?”

“ஆமா. ஒரு முறை புடிச்சேன். அவ்வளவுதான்”

“அதான்! அப்படின்னா இந்த விஷயத்துல இப்ப ஒரு பொய் சொல்லியிருக்கிற” சிரிப்பை மறைத்தவாறு கோபமாகச் சொன்னார் வழக்கறி ஞர். “நீ இரண்டு முறை சிகரெட் புடிக்கறத நத்தாலி பார்த்திருக்கிறா. அப்படிப் பார்த்தா நீ குறும்புத்தன மான மூன்று விஷயங்கள் செஞ்சி மாட்டியிருக்கிற. அதாவது, சிகரெட் புடிக்கறது, என் மேசையிலி ருந்து உனக்குச் சொந்தமில்லாத புகையிலையை எடுத்தது, என்கிட்ட பொய் சொன்னது”.

ஞாபகம் வந்தவனாய்,

“ஆங்! ஆமா! அது உண்மைதான். மெய்தான்! இரண்டு முறை தான் சிகரெட் புடிச்சேன். இன் னைக்கு ஒன்னு, வேற ஒரு நாள் ஒன்னு” அவன் கண்கள் சிரித்தன.

“பார்த்தியா, அதான் இரண்டு முறை. ஒரு முறை இல்ல. போ, உன்மேல ரொம்ப வருத்தத்துல இருக்கிறேன். நீ நல்ல பையனா இருந்த. ஆனா, இப்ப பாத்தா கெட்டவனாகவும் குறும்புக்காரனாக வும் வளர்ந்து இருக்கற”.

செரியோழாவின் சிறிய காலரை சரி செய்தப டியே, அடுத்ததாக இவனிடம் என்ன சொல்லலாம் என்று பிகோவ்ஸ்கி யோசித்துப் பார்த்தார்.

அவர் தொடர்ந்து,

“ஆமா. அது ரொம்பத் தப்பு. உன் கிட்ட இத நான் எதிர்பார்க்கல. முதல்ல, உனக்குச் சொந்த

மில்லாத புகையிலையை எடுக்க உனக்கு உரிமை யில்ல. அவுங்கவுங்க பொருள உபயோகப்படுத் தத் தான் யாருக்கும் உரிமையிருக்கு. மத்தவங்க பொருள ஒருத்தன் எடுத்தான்னா அவன் கெட்ட வன். (நான் அவனிடம் சொல்ல வேண்டியது அது கிடையாது என்று பிகோஸ்வ்கி நினைத்தார்) உதா ரணமாக, நத்தாலியிடம் துணிமணிகள் கொண்ட ஒரு டிரங்பெட்டி இருக்கு. அது அவளுக்குச் சொந் தமானது. அத நாம அதாவது நீயும் நானும் தொடக் கூடாது. ஏன்னா அது நம்மது கிடையாது. நீ சின் னக் குதிரை வச்சிருக்க. அப்புறம் படம் வச்சி ருக்க. நான் அத எடுக்கறதில்ல. எப்பயாவது எடுத் தனா? எனக்குப் பிடிச்சுக்கூட இருக்கலாம். ஆனா, அதெல்லாம் என்னுடையது கிடையாது. உன்னு டையது" என்று நீட்டி முழக்கினார்.

"உனக்கு வேணும்னா அதையெல்லாம் நீ எடுத்துக்கலாம்" புருவங்களை உயர்த்தி செரி யோழா அப்பாவைப் பார்த்துச் சொன்னான்.

"அப்பா நீ கவலைப்படாத, நீ அதையெல்லாம் வச்சுக்கலாம். அதோ உன் மேசை மேல இருக்கே மஞ்சளா சின்ன நாய்குட்டி, அது என்னோடது தான். அது அங்கேயே இருந்தா அதைபத்தி எனக் குக் கவலையில்லை" என்றான் செரியோழா.

"நான் சொல்ல வர்றது உனக்குப் புரியல", என் றார் பிகோவ்ஸ்கி. "அந்தக் குட்டி நாயை எனக்கு நீ பரிசுப் பொருளா கொடுத்த .இப்ப அது என் னுடையது. என் இஷ்டப்படி எது வேணும்னாலும் செய்யலாம். ஆனா புகையிலை நான் உனக்குக் கொடுக்கலையே! அது என்னுடையது. (நான் அவ னுக்குச் சரியாக புரிய வைக்கவில்லை, சுத்தமாக இல்லை என்று வழக்கறிஞர் நினைத்தார்) எனக் குச் சொந்தமில்லாத புகையிலையைப் புடிக்க னும்னா முதல்ல நான் அனுமதி வாங்கியாவனும்".

மெதுவாக வாக்கியங்களைக் கோர்த்து, குழந்தையின் பேச்சை முறியடித்துத் தன் மகனுக்கு உரிமை என்றால் என்ன என்பதை விளக்கிக் கொண்டிருந்தார் பிகோவ்ஸ்கி. அப்பாவின் மார்பை விட்டு அகலாமல் இருந்தன செரியோழாவின் கண்கள். கவனமாகக் கவனித்துக் கொண்டும் இருந்தான். (மாலை நேரத்தில் அப்பாவுடன் பேசிக்கொண்டிருப்பது அவனுக்குப் பிடிக்கும்) பிறகு மேசையின் விளிம்பின் மீது அவனது கண்கள் குத்திட்டு நின்றன. அங்கிருந்த பேப்பரையும் இங்க் ஸ்டேண்டையும் பார்த்தவாறு இருந்தான். மேசையை வட்டமடித்து, அவன் பார்வை ஒரு பசை பாட்டிலின் மீது வந்து நின்றது.

அந்தப் பாட்டிலைத் தன் கண்களுக்கு அருகில் தூக்கிப் பிடித்தபடி,

“அப்பா, பசையை எதவெச்சு செய்யறாங்க?” எனத் திடீரெனக் கேட்டான்.

பிகோவ்ஸ்கி அவனிடமிருந்து பாட்டிலைப் பிடுங்கி அது இருந்த இடத்தில் வைத்துவிட்டுத் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

“அடுத்ததா, நீ சிகரெட் புடிக்கிறது, உண்மையிலேயே ரொம்பக் கெட்டது, நான் புடிக்கிறேன்னா அதுக்காக சிகரெட் பிடிக்கிறது நல்லதுன்னு எடுத்துக்கக் கூடாது. நான் சிகரெட் பிடிக்கறப்போ அது ஒரு மடத்தனம்னு எனக்குத் தெரியும். என் மேலேயே எனக்குக் கோபம் வந்து அதுக்காக வருத்தப்படுவேன். (ஆ! நான் எவ்வளவு சாமர்த்தியமான ஆசிரியர்! என வழக்கறிஞர் நினைத்துக் கொண்டார்.) புகையிலை உடல் நலத்துக்கு ரொம்பக் கெடுதல். அதைப் பிடிக்கறவங்க, அவுங்க சாக வேண்டிய நாள் வர்றதுக்கு முன்னேயே செத்துடுவாங்க. அதுவும் உன்ன மாதிரி சின்ன வயசுலியே சிகரெட் புடிக்கிறது தப்பு. உன்னுடைய இதயம்

ரொம்ப பலகீனமானது. சிகரெட் பிடிச்சா காச நோய் மட்டுமில்ல, மற்ற நோய்களும் வரும். உன் மாமா சிகரெட்டினால் காசநோய் வந்துதான் செத் தான். அவன் மட்டும் சிகரெட் பிடிக்காம இருந் திருந்தா இந்நேரம் உயிரோட இருந்திருப்பான்" என்று சொல்லி முடித்தார்.

ஏதோ சிந்தனையில் விளக்கையே பார்த்து கொண்டிருந்த செரியோழா, அதன் நிழலை தன் விரலால் தொட்டுவிட்டு பேசினான்.

"இக்நாட்டியஸ் மாமா வயலின் வாசிப்பார். இப்ப கிரிகோரிவிஸ் கிட்டதான் அந்த வயலின் இருக்கு" என்றான்.

மீண்டும் மேசை விளிம்பில் சாய்ந்தவாறு சிந் தனையில் மூழ்கிப் போனான் செரியோழா. வெளி றிப்போயிருந்த அவனது முகபாவத்தை பார்க்கும் போது அவன் எதையோ கவனிப்பது போலவோ அல்லது அவனது எண்ணங்களை அவனே அல சிப் புரிந்து கொள்வது போலவோ தோன்றியது. இமைக்காத அவனது பெரிய கண்களில் சோக மும் பயம்போன்ற ஏதோவொரு உணர்வும் தெரிந் தன. கொஞ்ச காலத்துக்கு முன் தன் அம் மாவையும் மாமா இக்நாட்டியஸையும் பறித்துச் சென்ற மரணத்தை பற்றி ஒருவேளை அவன் சிந்தித்துப் பார்த்திருக்கலாம். அம்மாக்களையும் மாமாக்களையும் வேறு ஒரு உலகத்துக்கு மரணம் கொண்டு சென்றுவிட அவர்களுடைய பிள்ளைக ளும் வயலின்களும் இந்த உலகிலேயே தங்கி விடு கின்றனர். இறந்தவர்கள் எங்கோ நட்சத்திரங்க ளின் அருகில் சொர்க்கத்தில் வாழ்ந்தபடி பூமியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் பிரி வைத் தாங்க முடியுமா?

"நான் அவனிடம் என்ன சொல்லலாம்?" என யோசித்தார் பிகோவ்ஸ்கி. "அவன் கவ

னிக்கவில்லை. என் குற்றச்சாட்டுக்கோ வாதங்க ளுக்கோ அவன் எவ்வித முக்கியத்துவத்தையும் அளிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. என்ன சொல்லி அவனை உருக வைக்கமுடியும்?”

வழக்கறிஞர் எழுந்து அலுவலகத்துக்குள் நடந்தார். யோசித்துப் பார்த்தார்.

“என் காலத்தில் இத்தகைய பிரச்சனைகள் எல்லாம் சாதாரணமாகத் தீர்த்து வைக்கப்பட் டன. யாராவது ஒரு சின்னப் பையன் சிகரெட் பிடித்து மாட்டிக் கொண்டால் போதும். அவனை நன்றாக அடிப்பார்கள், பலகீனமான நெஞ்சம் படைத்த கெட்டப் பையன் இது போன்ற தண் டனையால் சிகரெட் பிடிப்பதை நிறுத்திவிடுவான். ஆனால்,புத்திசாலியான சூட்டிகையான பையனாக இருந்து விட்டால் இப்படி அடி வாங்கியதும் புகை யிலையைத் தன் பூட்ஸில் மறைத்துக்கொண்டு போய் வீட்டுக் கொல்லைப்புறத்தில் பிடிப்பதுண்டு. அங்கேயும் பிடிபட்டு, அடி கொடுத்தால் ஆற்றுப் பக்கம் ஒதுங்கி புகைப்பிடிப்பான். அவன் வளர்ந்து பெரியவனாகும் வரை இது தொடரும். நான் புகைப்பிடிக்காமல் இருக்க என் அம்மா எனக்கு மிட்டாயும் பணமும் கொடுப்பார்கள். இப்பொழுது யோசித்துப் பார்த்தால் இவையெல்லாம் பலவீன மான, தவறான நடவடிக்கைகளாகத் தெரிகின் றன. இன்றைய ஆசிரியரோ தர்க்கரீதியாக இவ்வி ஷயத்தை அணுகி அடிப்படையில் எது சரியானது என்பதை ஒரு குழந்தைக்குப் புரியவைக்க முயல் கிறார். அவனது பயத்தைத் தூண்டி, மற்றவர்களிட மிருந்து தன்னை வேறுபடுமாறு ஊக்குவித்து ஏதா வது ஒரு பலனை அனுபவிக்கும்படி அவனைச் செய்வதில்லை”.

இப்படியெல்லாம் அவர் யோசித்தபடி நடந்து கொண்டிருந்தபோதே, செரியோழா மேசை மீது

ஏறிவிட்டான். மேசைக்குப் பக்கத்தில் இருந்த நாற் காலியில் ஒரு காலை வைத்தபடி படம் வரைய ஆரம்பித்திருந்தான். அவனுக்காக என்றே வெட் டப்பட்ட காகிதங்களும் ஒரு நீல பேனாவும் மேசை மேல் இருந்தன. அலுவலகத் தொடர்பான தாள் களில் அவன் கிறுக்காமல் இருக்கவும் அங்குள்ள இங்க் பாட்டிலைத் தொடாமல் இருக்கவும் தான் இந்த ஏற்பாடு.

“கோஸ் வெட்டறப்போ சமையல்கார ஆயா விரல வெட்டிக்கிட்டாங்க”,

ஒரு வீட்டை வரைந்து கொண்டே கண் களை விரித்து அவன் சொன்னான். “அந்த அம்மா அலறவே நாங்க எல்லாரும் பயந்துபோய் அடுப் பாங்கரைக்கு ஓடினோம். அவுங்களுக்குப் புத்தி இல்ல! அவுங்க விரல ஐஸ் தண்ணியில முக்குன்னு நத்தாலி சொன்னாங்க. ஆனா,அவுங்க கேக்கல, சப்பினாங்க. எப்படி அந்த அழுக்கான விரல வாயில வெக்கலாம்? அப்பா, அதுசரி கிடையாது. அப்படித்தானே?”

பிறகு, பகல் உணவின் போது கூடத்துக்கு வந்த ஒரு வாத்தியக்காரனைப் பற்றி விவரித்தான். அவ னுடன் வந்த ஒரு சிறிய பெண் இசைக்கு ஏற்றவாறு பாடியதையும் ஆடியதையும் விபரமாகச் சொல்லிக் கொண்டே போனான்.

“அவனுக்கென ஒரு எண்ண ஓட்டம் இருக் கிறது” என வழக்கறிஞர் நினைத்தார். “அவனுக் குச் சொந்தமான ஒரு சிறிய உலகம் அவன் தலையில் இருக்கிறது. அவனைப் பொறுத்தவரை எது முக்கியம் எது முக்கியமில்லை என்பதை அறிந்து வைத்திருக்கிறான். அவனுடைய மொழி யைப் போல் பேசுவதால் மட்டும் அவனது கவனத் தையும் மனசாட்சியையும் ஏமாற்றி விட முடியாது. அவனைப் போலவே சிந்திக்கவும் தெரிந்திருக்க

வேண்டும். நான் உண்மையிலேயே புகையிலைக் காக வருத்தப்பட்டு மனமுடைந்து கண்ணீர்விட்டு அழுதிருந்தால் அவன் என்னை முழுமையாகப் புரிந்து கொண்டிருப்பான். எனவேதான் பிள்ளை வளர்ப்பதில், தாய்க்கு மாற்றாக யாரும் இருக்கமு டியாது. ஏனெனில், தன் குழந்தைகளோடு சேர்ந்து உணரவும், சிரிக்கவும், அழவும் அவளால் மட்டுமே முடியும். தத்துவமும் அறமும் கொண்டு எதையும் சாதிக்க முடியாது. சரி, நான் அவனிடம் என்ன சொல்வது? எதை சொல்வது?" என்று யோசித்துப் பார்த்தார் வழக்கறிஞர்.

குற்றத்தைத் தடுப்பதிலும் தண்டிப்பதிலும் உள்ள ஒவ்வொரு படிநிலையை ஆராய்வதில் பாதி வாழ்க்கையைச் செலவிட்ட தன்னைப் போன்ற அனுபவமுள்ள சட்ட நிபுணர் ஒருவர் முற்றிலுமா கக் குழம்பிப்போய் ஒரு சிறிய பையனிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் விழிக்கும் விசித்தி ரத்தை நினைத்துப் பார்த்த பிகோவ்ஸ்கிக்கு சிரிப்பு வந்தது.

"இங்க பார்! இனி சிகரெட் பிடிக்கமாட்டேன் என்று என் கிட்ட உறுதி மொழி கொடு" என்றார்.

இதைக்கேட்ட செரியோழா பாட ஆரம்பித்து விட்டான்.

"உறுதி.. மொழி.....உறுதி மொ....ழி மொ..... ழி. !.....ழி !"

உறுதி மொழி என்றால் என்னவென்று அவ னுக்குத் தெரியுமா? என்று பிகோவ்ஸ்கி தன் னையே கேட்டுக் கொண்டார்.

இல்லை நான் ஒரு மோசமான ஆசிரியன். இந்த நேரத்தில் ஒரு கல்வியாளரோ சட்டம் பயின்றவரோ என் மூளைக்குள் எட்டிப்பார்த்தால் நான் ஒரு மரமண்டை என அழைக்கப்படுவேன்,

மேலும், அதிக நுட்பம் கலந்து பேசுவதாக என் மேல் புகார் எழும்ப நிச்சயம் வாய்ப்பு உள்ளது. ஆனால், உண்மை என்னவென்றால், இத்தகைய சிக்கலான பிரச்சனைகள் எல்லாவற்றுக்கும், வீட் டைவிட பள்ளியிலும் நீதிமன்றத்திலும் எளிதாகத் தீர்வு கிடைத்துவிடும். இங்கே வீட்டில், எல்லாவற் றுக்கும் மேலாக, நாம் நேசிக்கும் நபர்களுடன் பிரச் சனையை அணுகியாக வேண்டும். நேசம் நமக் குச் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திவிடும் என் பதால் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கி விடு கிறது. இதே குழந்தை என் மகனாக இல்லாமல் ஒரு பள்ளி மாணவனாகவோ நீதிமன்றக் கூண்டில் ஒரு கைதியாகவோ இருந்திருந்தால் நான் இப்படி ஏமாற்றுபவனாக இருக்கமாட்டேன். இப்பொழுது அலைபாய்வதைப் போல் என் மனமும் தவிக்காது.

மேசை எதிரே உட்கார்ந்த பிகோவ்ஸ்கி, செரி யோழா வரைந்திருந்த படங்களில் ஒன்றை எடுத் துப் பார்த்தார். அந்தப்படத்தில் சிறிய கூரையுடைய வீட்டின் புகைக் கூண்டுகளிலிருந்து மின்னல் வடி வத்தில் புகை எழும்புவது போல் வரையப்பட்டிருந் தது. புகை அந்த தாளின் நுனிவரை சென்றது. அந்த வீட்டின் அருகில் ஒரு படை வீரர் நின்றி ருந்தார். அவரது கண்களாக இரண்டு புள்ளிகளும், துப்பாக்கியினை குறிக்க “4” எனும் வடிவிலான கோடு வரையப்பட்டிருந்தது.

“ஒரு வீட்டைவிட உயரமாக ஒரு ஆள் இருக் கமுடியாது. இங்க பார், நீ வரைஞ்சிருக்கிற கூரை சோல்ஜரோட தோள்பட்டை வரைக்கும் தான் வருது” என்றார் வழக்கறிஞர்.

செரியோழா தன் அப்பாவின் மடி மீது ஏறி னான். அவன் அங்கு வசதியாக உட்கார்ந்து கொள்ள கொஞ்சநேரம் பிடித்தது.

அவனுடைய படத்தை நன்றாகக் கவனித்தபடி,

"அப்பா, சோல்ஜர சின்னதா வரைஞ்சா அப் புறம் அவரோட கண்ணைப் பார்க்க முடியாதே!" என்றான்.

அவனைத் திருத்த வேண்டிய தேவை என்ன வந்தது? தன் மகனை நாள்தோறும் கவனித்து வந்த வழக்கறிஞர் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டார். குழந்தைகள், பிராணிகளைப் போன் றவர்களுக்கு, அவர்களுக்கேயுரிய கலையுணர்வு எண்ணங்களும் வினோதமான விருப்பங்களும் இருக்கும் என்பதையும் அவை வளர்ந்தவர்களின் அறிவுக்கு எட்டாமல் இருக்கும் என்பதையும் அவர் புரிந்து கொண்டார். கூர்ந்து கவனித்தால் வளர்ந் தவர்களின் பார்வைக்கு, செரியோழாவின் நடவ டிக்கை அசாதாரணமாகத் தோன்றும். ஏனெனில், ஒரு வீட்டை விடப் படை வீரரை உயரமாக வரைய முடிந்த அவனிடம் அதற்கான காரணமும் இருந் தது. தன் எண்ணங்களை ஒரு மனிதனாகத் தெரி விக்க பென்சிலை பயன்படுத்தவும் தெரிந்திருந் தது. இப்படித்தான், இசைக் குடும்ப சப்தங்களைப் புகைவளையங்களால் காட்டியிருந்தான். முறுக்கிய கயிற்றின் வடிவம் விசிலை நினைவூட்டியது. அவன் மனதில், ஓசைக்கு வடிவத்தோடும் வண்ணத்தோ டும் நெருக்கமான தொடர்பு இருந்தது. எனவே "எல்" எனும் சப்தத்துக்கு எப்பொழுதும் மஞ்சள் நிறம், "எம்" என்றால் சிவப்பு, "ஏ" என்றால் கறுப்பு என வரைந்து போக அவனால் முடிந்தது.

வரைந்த படத்தை ஓரமாகப் போட்டுவிட்டு மேலும் வசதியாக உட்கார்ந்து கொண்டான். இப் பொழுது அவனது கவனம் அப்பாவின் தாடிப்பக் கம் திரும்பியது. கவனமாக அதைத் தடவிக்கொ டுத்தான். பிறகு அதை இரண்டு பக்கமும் மீசை போல் வருமாறு சீவிவிட்டான்.

“இப்ப நீங்க இவான் ஸ்டெபானோவிச் மாதிரியே இருக்கீங்க” என்று காதோரமாகச் சொன்னான்.

“இப்ப இன்னும் ஒரு நிமிஷத்துல நம்ம போர்ட்டர் போல மாறிடுவீங்க. அப்பா, ஏன் அவுங்க கதவுகிட்டடியே நின்றுக்கிட்டிருக்காங்க? திருடங்க உள்ள வராம பாத்துக்கவா?”

குழந்தையின் மூச்சுக் காற்று தம் முகத்தில் படர்வதை வழக்கறிஞரால் உணர முடிந்தது. அவரது கன்னத்தை அந்த மென்மையான முடி வருடிக்கொடுத்தது. பாசமும் நெகிழ்ச்சியும் இதயத்துக்குள் சென்றவிதம், தன் கைகள் மட்டுமல்ல ஆன்மா முழுவதுமே செரியோழாவின் வெல்வெட் உடைமீது இருந்ததைப் போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது.

பிள்ளையின் அகலவிரிந்த கருமையான கண்களைப் பார்த்தார். அந்த அகண்ட கண்களில் தன் அம்மாவையும், மனைவியையும் மட்டுமல்ல அவர் ஒரு காலத்தில் நேசித்த அத்தனை விஷயங்களும் தெரிந்தன.

“அவனை அடிக்க எப்படி மனம் வரும்? எப்படி அவனைத் தண்டனை மூலம் திருத்துவது? முடியாது. பிள்ளைகளுக்கு எப்படி போதிப்பது என்பதைத் தெரிந்திருப்பது போல் நாம் நடிக்கக் கூடாது. அந்தக்காலத்தில் எல்லோரும் சாதாரணமாக இருந்தார்கள். அவர்கள் குறைவாக யோசித்தார்கள். எனவே, அவர்கள் சந்தித்த பிரச்சனைகளில் துணிவாக முடிவெடுத்தனர். ஆனால், நாமோ அதிகமாகச் சிந்திக்கிறோம். தர்க்கத்துக்கு நாம் இரையாகிறோம். ஒரு மனிதன் எந்த அளவுக்கு அதிகமாக அறிவாளியாக இருக்கிறானோ அந்த அளவுக்கு அவன் சிந்தித்து முடியைப் பிய்த்துக் கொள்கிறான். முடிவெடுப்பதில் அதிக தயக்கமும்

போலித்தனமும் உண்டாகின்றன. ஒரு செயலை அணுகுவதிலும் மிகவும் மந்தமாக இருக்கிறான். ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், கற்பிக்கவோ, மதிப்பீடு செய்யவோ, ஒரு பெரிய புத்தகத்தை எழுதவோ ஒரு மனிதனுக்கு எத்தகைய துணிவும் தன்னம்பிக்கையும் தேவைப்படுகின்றன என்பது புலனாகும்".

கடிகாரம் ஒலித்தது. மணி பத்து.

"வாடா, படுக்க நேரமாச்சு" எனப் பையனை வழக்கறிஞர் அழைத்தார். "குட்நைட் சொல்லிட்டு போய் படு" என்றார்.

"இல்லப்பா..இன்னும் கொஞ்ச நேரம் இருக்கறனே. ஏதாவது சொல்லுப்பா, ஒரு கதைசொல்லு" என்று கொஞ்சினான் செரியோழா.

"சரி சொல்றேன், ஆனா கதை சொல்லி முடிஞ்சதும் நாம் போயிடனும்".

தமக்கு ஓய்வு கிடைக்கும் மாலை வேளைகளில் செரியோழாவுக்குக் கதை சொல்லும் வழக்கம் வழக்கறிஞருக்கு இருந்தது. பரபரப்பாக இயங்கும் பெரும்பான்மையானவர்களைப் போல் இவருக்கும் ஒரு பாடல் கூட ஞாபகத்தில் இருக்காது. அதேபோல் ஒரு கதை கூட சொல்லத் தெரியாது. எனவே, ஒவ்வொரு முறையும் எதையாவது புதிதாக இட்டுகட்டிச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். "முன்பொரு காலத்தில்....." என்பதை ஒரு பொதுவான வாசகமாக ஆரம்பிப்பார். பிறகு தொடங்கும் போது என்ன சொன்னோம், எது அடுத்தது, எப்படி முடியும் என எதுவும் தெரியாமல் ஒன்றன்பின் ஒன்றாக வெகுளித்தனமாக அபத்தங்களை அடுக்கிக்கொண்டே போவார். காட்சிகள், கதாபாத்திரங்கள், சூழ்நிலைகள் என எல்லாவற்றையும் போகிற போக்கில் கற்பனை செய்வார்.

கதைக் கருவும், கதை வழங்கும் நீதியும், கதை சொல்லியின் விருப்பத்துக்குக் கட்டுப்படாமல் தன் போக்கில் அமையும். இது போன்ற கற்பனை கள் செரியோழாவுக்கு மிகவும் பிடிக்கும். கதைக் கரு மிகவும் சாதாரணமாகவும் சிக்கலில்லாமலும் இருக்கும்போது அதன் தாக்கம் மகன் மீது அதி கமாக ஏற்படுகிறது என்பதை வழக்கறிஞர் கண்டு கொண்டார்.

தன் கண்களை மேல் கூரை மீது உயர்த்திய வாறு, “கவனமா கேள்” என்று தொடங்கினார்.

“ஒரு காலத்துல ஒரு ராஜா இருந்தார். ரொம்ப வயசானவர். அவருக்குப் பெரிய தாடியும் இதோ... இது மாதிரி பெரிய மீசையும் இருந்தது எல்லாம் நரைச்சுப் போய் தான். அவர் ஒரு பளிங்கு மாளி கையில் வசிச்சு வந்தார். அது சூரிய வெளிச்சத் தில், ஒரு பெரிய சுத்தமான ஐஸ் கட்டி மாதிரி தகதகன்னு மின்னும். தம்பி, அந்த மாளிகை ஒரு பெரிய தோட்டத்துல இருந்தது. அந்தத் தோட்டத் துல என்ன எல்லாம் இருந்தது தெரியுமா? ஆரஞ்சு, பெர்கமட், செர்ரி இப்படிப் பல மரங்கள் இருந் தது. அது மட்டுமா, துய்லிப், ரோஜா, லில்லின்னு நிறைய பூக்களும் பூத்துக் குலுங்கிச்சு. கலர் கலரா பறவைங்க வந்து பாடிக்கிட்டிருக்கும். ஆமாம்! மரத் துல சின்னச் சின்ன ஸ்படிகமணி கட்டியிருக் கும். காத்துல அசையும் போது கேக்க ரம்மியமாக இருக்கும். கேட்டுகிட்டே இருக்கலாம், அலுக்காது, உலோகத்தவிட இந்தப் பளிங்கில இருந்து வர சப் தம் ரொம்ப மென்மையா, இனிமையா இருக் கும். சரி என்ன யோசிக்கற? அடுத்து என்னன்னா? அப்புறம் அந்தத் தோட்டத்துல நீர் ஊற்று நிறைய இருந்தது. உனக்கு ஞாபகம் இருக்கா? ஒரு முறை நம்ம அத்தை சோனியாவோட பண்ணை வீட்டுக் குப் போயிருந்தப்போ அங்க பாத்தியே? ஆமாம்!

அதே மாதிரி நீர் ஊற்றுதான் ராஜாவோட தோட் டத்துல நிறைய இருந்தது. ஒரே வித்தியாசம். ராஜா தோட்டத்துல இருந்ததெல்லாம் பெரிசா இருக் கும். அதுல இருந்து புறப்படற சாரல் அங்க இருந்த உயரமான பாப்லார் மரத்தோட உச்சி வரைக்கும் போவும், தெரியுமா ?”

சிறிது நேரம் யோசித்த பிகோவ்ஸ்கி, தொடர்ந் தார். ‘’வயசான அந்த ராஜாவுக்கு ஒரே பிள்ளை, உன்னைப் போல சின்ன பையன். அவன்தான் அந்த ராஜாங்கத்தோட அடுத்த வாரிசு. அவன் நல்ல பையன். சேட்டை எதுவும் செய்யமாட்டான். சீக்கரமா தூங்கப் போவான். அவனோட அப்பா மேசை மேல இருக்கற எதையும் தொடமாட்டான். அப்புறம்.... அப்புறம், அவன் எல்லா வகையிலும் எப்படி நல்லவனாக இருக்கனுமோ அப்படி இருந் தான். அவன் கிட்ட ஒரே குறை. அவன் சிகரெட் பிடிப்பான்”.

அப்பாவின் கண்களையே பார்த்தபடி செரி யோழா கவனமாக கேட்டுக் கொண்டிருந்தான். வழக்கறிஞர் யோசித்தார். “எப்படித் தொடர்வது?” நீண்ட நேர சிந்தனைக்குப்பின் இப்படி முடித்தார்.

“சிகரெட் பிடிச்சதால ராஜா பிள்ளைக்கு உடம்பு சரியில்லாம போச்சு. காச நோய் வந்ததுல இருபது வயசுலியே செத்துட்டான். நடக்க முடியாம நோய்ல கஷ்டப்பட்ட வயசான ராஜாவைப் பாத் துக்க யாரும் இல்லாம போயிட்டாங்க. ராஜாங்கத்த நிர்வாகம் பண்ணவும், மாளிகையைப் பாத்துக்க வும் யாரும் இல்ல. எதிரிங்க படையெடுத்து வந்து ராஜாவ கொன்னுட்டு மாளிகையை நாசம் பண் ணாங்க. இப்ப அந்த தோட்டத்துல எந்த செர்ரி மர மும் இல்ல, பறவையும் இல்ல, மணியும் கிடையாது. அவ்வளவுதான்”.

இத்தகைய முடிவு கலை நயமற்றதாகவும் அபத்தமாகவும் பிகோவ்ஸ்கிக்கு தோன்றினாலும் அந்த முழுக்கதையும் செரியோழாவின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மீண்டும் சோகமும் பீதிபோன்ற ஏதோவொரு உணர்வும் அவனது கண்களில் குடிகொண்டன. அங்கிருந்த இருட்டான ஜன்னலை சிறிது நேரம் உற்றுப் பார்த்தபடி இருந்துவிட்டு பிறகு மெல்லிய குரலில், "இனி மேல் நான் சிகரெட் பிடிக்க மாட்டேன்" என்றான்.

அவன் 'குட்நைட்" சொல்லிவிட்டுத் தூங்கப் போனபிறகு அவனுடைய அப்பா கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக மெதுவாக நடந்தபடியே சிரித்தார். யோசித்துப் பார்த்தார்.

இந்த விஷயத்தில் அழகும் கலை வடிவமும் தான் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டன எனச் சொல்வார்கள். இருக்கலாம். என்ன இருந்தாலும் அவையெல்லாம் தாக்கத்தை ஏற்படுத்த உரிய வழிகள் இல்லை. ஏன் உண்மையையும் நீதியையும் அது உள்ள நிலையிலேயே அப்படியே தராமல், எதையாவது கலந்து, மாத்திரைகளைப் போல இனிப்பில் தோய்த்து முலாம் பூசித்தர வேண்டும்? அது முறை இல்லை. அப்படிச் செய்வது மோசடி, சூழ்ச்சி, ஏமாற்றும் வேலை.

எப்பொழுதுமே நீண்ட உரை நிகழ்த்தவேண்டிய அவசியத்தில் உள்ள வழக்கறிஞர்களைப் பற்றி யோசித்துப் பார்த்தார். அவற்றைக் கேட்கும் பொது மக்களுக்கும் புராணக்கதைகள், சரித்திர நாவல்கள், கவிதைகள் போன்றவை மூலம் தான் புரியவைக்கமுடியும். மருந்து என்றால் இனிப்பாக இருக்கவேண்டும்; உண்மை என்றால் அழகாக இருக்கவேண்டும். ஆதாம் காலத்தில் இருந்தே இந்த முட்டாள் தனமான எண்ணம் மனிதனிடம் இருந்து வருகிறது. ஆனால், அவை எல்லாமே

இயற்கையாக இருக்கலாம். அப்படித்தான் இருக்கவேண்டும். சூழ்நிலைக்கு ஏற்பச் சில அனுகூலங்களையும் ஏமாற்றங்களையும் இயற்கையே ஏற்பாடு செய்து வைத்துள்ளது.

அவர் தன் பணியைக் கவனிக்க உட்கார்ந்தார். ஆனால், அவருக்கு நெருக்கமான சில நீண்ட நினைவுகள் அவரது மனதில் தொடர்ந்து வட்டமடித்தன. அவர் தலைக்கு மேல் நடந்தவரின் காலடிச் சப்தம் இப்பொழுது கேட்கவில்லை. ஆனால், இரண்டாவது மாடியில் குடியிருப்பவர் இன்னமும் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டுதான் இருந்தார்.

****

இக்கதை முதலில் “டோமா” என்ற பெயருடன் நியூ டைம்ஸ் இதழில் 1887இல் வெளியானது. பல பதிப்புகளில் இடம்பெற்றுள்ள இக்கதை, செக்காவின் மிக முக்கியமான கதைகளில் ஒன்றாக டால்ஸ்டாய் கருதினார்.

6. கொஞ்சம் அதிகம்

நில அளவையாளர் கிலேப் சிமிர்நோவ டெட் வீல் நிறுத்தத்துக்கு வந்து சேர்ந்ததும், தாம் பணி மேற்கொள்ள வேண்டிய பண்ணையை அடைய இன்னும் முப்பது அல்லது நாற்பது மைல்கள் கடக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டார். குதிரையோட்டி குடிக்காமல் நிதானாக இருந்து, குதிரையும் திடமாகர் இருந்தால் அந்த தூரம் முப் பது மைல்களுக்கு குறைவாகத்தான் இருக்கும். போதையில் குதிரைக்காரனும், தேய்ந்த கால்களு டன் குதிரைகளும் இருந்தால் துரம் ஐம்பதையும் தொடும்.

“வாடகைக்குப் போஸ்ட் குதிரைகள் எங்குக் கிடைக்கும் என்று சொல்ல முடியுமா?” அங்கிருந்த அதிகாரியைப் பார்த்து நில அளவையாளர் கேட் டார்.

“என்ன போஸ்ட் குதிரைகளா ? போஸ்ட் குதி ரையை விடுங்கள். நூறு மைல் தூரத்துக்கு ஒரு நாயைக்கூட உங்களால் பார்க்க முடியாது. சரி நீங் கள் எங்கே போக வேண்டும் ?”

“தேவ்கினோவுக்கு, தளபதி ஹோஹோத்தோ வின் பண்ணைக்குப் போகவேண்டும்”.

“அப்படியா ?” என்று கொட்டாவி விட்ட ரயில்வே அதிகாரி, “இந்த ஸ்டேஷனைவிட்டு வெளியேப் போனால் அங்கே சில விவசாயிகள் இருப்பார்கள். சில நேரங்களில் அவர்கள் பயணி களை ஏற்றிச் செல்வார்கள்.” என்ற தகவலைச் சொன்னார்.

நில அளவையாளர் பெருமூச்சுவிட்டார். ரயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்தார். நீண்ட நேரத் தேடலுக்கு பின், நிறைய வாக்குவாதத்துக் கும் பேரத்துக்கும் பின் ஒருவழியாகப் பருத்த திட

மான விவசாயி ஒருவன் அவருக்குக் கிடைத்தான். அம்மைத் தழும்புடைய முகம் கொண்ட அவர் விவ சாயி சாம்பல் நிறத்தில் கிழிந்த கோட்டும் கோரை சப்பாத்துகளையும் அணிந்திருந்தான்.

“என்ன ஒரு வித்தியாசமான வண்டியை நீ வைத்திருக்கிறாய் !” என்று சொல்லிக்கொண்டே நில அளவையாளர் வண்டியில் ஏறினார். “எது முன்பக்கம் எது பின் பக்கம் என்றுகூடத் தெரிய வில்லை.”

---

*போஸ்ட் குதிரைகள் என்பவை 19ஆம் நூற்றாண்டில் ரஷ்யர்களின் பயணமுறை. இத்தகைய குதிரைகள் ஒவ் வோரு போஸ்ட்டிலும், அதாவது ஒவ்வொரு நிறுத்தத்தி லும் பயணிகள் வாடகைக்கு எடுத்து செல்ல ஏதுவாக்க கிடைக்கும்.

“என்ன தெரியவில்லையா? குதிரையின் வால் இருக்கிறதே அதுதான் முன் பக்கம். தங்கள் சமூகம் உட்கார்ந்திருப்பதுதான் பின்பக்கம்.”

அந்தச் சின்னக் குதிரை இளமையாக இருந்தாலும் மெளிந்திருந்தது. கால்கள் பரப்பிய படியும். காதுகள் கிழிந்தும் காணப்பட்டன. குதி ரைக்காரன் ஏரி நின்று தன் சாட்டைக்கயிற்றால் அதனை ஒருமுறை அடித்ததும், தலையை மட் டும் அது அசைத்தது. மேலும் சத்தமாக அதட்டி யதும் ஏதோ காய்ச்சலில் உள்ளது போல் உடல் உதறியது. மூன்றாம்முறை அடி விழுந்ததும் வாக னம் முன்னும் பின்னுமாக அசைந்தது. நான்காவது அடியில் மெதுவாக ஊர்ந்து சென்றது.

“வழி நெடுக இப்படித்தான் இருக்குமா?” என நில அளவையாளர் கேட்டார்.

“நாம் நல்ல விதமாகப் போய்ச் சேர்ந்து விடுவோம். இந்தச் சின்னக் குதிரை இளமையும் துடிப்பும் கொண்டது. அது ஓட ஆரம்பிக்க வேண்டி

யது தான் பாக்கி. பிறகு எதுவும் அதை நிறுத்த முடி யாது'' என வண்டியோட்டி அவருக்கு ஆறுதலாய்ச் சொன்னான் . . .

''ஏ குட்டிச்சாத்தானே . . . ஓடு !'' என விரட்டி னான்.

"அவர்கள் நிலையத்தைவிட்டுப் புறப்பட்ட போது பொழுது சாய்ந்து விட்டது. வலப்பக்கத் தில் இருட்டான அகண்ட சமவெளி. அதைத் தாண்டிவிட்டால் அடுத்த முனைக்கு நிச்சயமாகச் சென்றுவிடலாம் என்னும் அளவுக்கு அது பரந்து விரிந்திருந்தது. இலையுதிர்காலச் சூரியன் கொஞ் சம் கொஞ்சமாக எரிந்து உருகி வானில் கலந்து விட்டது. இடப்பக்கத்தில், மங்கிவரும் ஒளியில் சிறு மேடுகள் தெரிந்தன. அவை மரங்களாகவும் இருக் கலாம். அல்லது, சென்ற ஆண்டின் மீதியாக இருக் கும் வைக்கோல் போராகவும் இருக்கலாம். முன் பக்கம் என்ன இருக்கிறது என்பதை நில அள வையாளாரால் பார்க்க முடியவில்லை. ஏனெனில், ஒட்டுமொத்த இயற்கைக் காட்சியையும் வண்டி யோட்டியின் அகலமான அருவருப்பான பின்பு றம் மறைத்துவிட்டது. காற்று மென்மையாக வீசிய போதிலும. குளிர் தெரிந்தது.

'என்ன ஒரு கஷ்டகாலம் !', என்று தன் காதுகளைக் கோட் காலரால் மூட முயன்ற நில அளவையாளர் நினைத்தார். "குடிசையோ வீடோ எதுவும் இல்லை. யாரவது வந்து நம்மைச் சூழ்ந்து கொண்டு நம்மிடம் உள்ளதைத் திருடினால் கூட யாருக்கும் தெரியாது. நாம் பீரங்கி வைத்துச் சுட்டா ளும் கேட்காது. இந்தக் குதிரைக்காரனையும் நம் பமுடியாது. என்ன ஒரு பெரிய முதுகு இவனுக்கு! பயங்கரமான மிருகத்தைப் போல என்ன ஒரு மோசமான முகம்!'

“உன்னைத்தான், இங்க பார். உன் பெயர் என்ன ?” என்று நில அளவையாளர் கேட்டார்.

“என் பெயரா? கிலிம்.”

“அப்படியா, கிலிம். இங்க எப்படி? ஒன்றும் ஆபத்தில்லையே? யாரும் கைவரிசையைக் காட்டமாட்டார்களே?”

“அப்படியெல்லாம் நடக்காது. கடவுள் நம்மை பார்த்துக்கொள்வார். இந்த இடத்தில் யார் வந்து திருடப் போகிறார்கள்?”

“உண்மைதான். எது எப்படி இருந்தாலும், என்னிடம் மூன்று கைத்துப்பாக்கிகள் இருக்கின்றன” என நில அளவையாளர் பொய் சொன்னார். “துப்பாக்கியோடு விளையாடுவது தவறு. ஒரு துப்பாக்கி பத்து திருடர்களை பதம் பார்த்துவிடும்.” என்று மேலும் அடுக்கினார்.

இருட்டத் தொடங்கியது. திடீரென வாகனம் கிறீச் என்ற சத்தத்துடன் உறுமியது, உதரியது. பின் ஏதோ அதன் விருப்பத்தை மீறி இயங்குவது போல் வாகனம் இடப்புறமாக திரும்பியது.

“இப்பொழுது என்னை எங்கே கொண்டு போகிறான்?” என்று நில அளவையாளர் நினைத்தார்.” இதுவரை நேரே போய்கொண்டிருந்தான். இப்பொழுது திடீரென இடது பக்கம் திரும்பிவிட்டான். தடியன், என்னைத் தனியாக இருக்கும் புதருக்கு கூட்டிப் போகிறானோ என்று பயமாக இருக்கிறது. மேலும், இப்படியெல்லாம் நடக்கும் என்பது தெரிந்ததுதான்”.

குதிரைக்காரனைப் பார்த்து, “இங்கே கவனி, இங்கே ஆபத்து எதுவும் இல்லை என்று சொன்னாய். அடச்சே ! சுவாரஸ்யமாக இல்லையே. திருடர்களுடன் சண்டை பிடிப்பதென்றால் எனக்கு

மிகவும் பிடிக்கும். பார்ப்பதற்குத்தான் நான் நோஞ் சானாகத் தெரிவேன். ஆனால் ஒரு காளைக்கு இருக்கும் பலம் எனக்கு இருக்கிறது. ஒரு முறை மூன்று திருடர்கள் என்னை தாக்க வந்தார்கள். என்ன நடந்தது என்று நினைக்கிறாய். ஒருவனை அடித்த அடியில் அவன் செத்தேபோனான். மீதி இரண்டு பேரையும் சைபீரியாவுக்கு அனுப்பிவிட் டேன். எங்கிருந்துதான் அத்தனை பலமும் எனக்கு வருகிறதோ, எனக்கே தெரியவில்லை. உன்னை போன்ற ஒரு பெரிய முரடனைக்கூட அப்படியே ஒற் றைகையால் தூக்கி . . . தோலை உரித்துவிடு வேன் !", என்றார்.

கிலிம், நில அளவையாளரைத் திரும்பிப் பார்த்தான். அவர் முகத்தை உற்று உற்றுப் பார்த் தான். பிறகு குதிரைக்கு ஒரு அடி கொடுத்தான்.

"ஆமாம். என கையில் மாட்டிய திருட னைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! அவன் கை, கால்களை இழுப்பதோடு போகாது. நீதி மன்றத்தில் வந்து அவன் செய்த குற்றங்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். அங்குள்ள நிதீப திகள், வழக்கறிஞர்கள் என எல்லோரும் எனக்கு தெரிந்தவர்கள்தான். நான் ஒரு அரசு ஊழி யர். அதோடு ஒரு முக்கியப்புள்ளி. இதுபோல். நான் பயணம் செய்யும்போது அரசுக்குத் தெரியும். எனவே எனக்கு, யாரும் எந்த தீங்கும் செய்யா மல் இருக்க, அரசு கண்காணித்தப்படி இருக்கும். பாதை முழுக்க உள்ள புதர்களுக்கு பின் பதுங்கி யபடி போலிஸ்காரர்களும் போலீஸ் கேப்டன்களும் பார்த்துகொண்டிருக்கிறார்கள். நிறுத்து. நிறுத்து. . ." என்று திடீரென நில அளவையாளர் கத்தினார். "எங்கே போகிறாய்? என்னை எங்கே கொண்டு போகிறாய்?"

"தெரியவில்லையா ? காட்டுக்குள் தான்."

“அப்படி என்றால் இவன் அப்படித்தான்.” என்று நில அளவையாளர் நினைத்தார்.” நான் பயந்து விட்டேன். என் பயத்தை வெளியே காட்டக்கூடாது. நான் அவனைப் பார்த்துப் பயந்து போய் இருப்பதை ஏற்கனவே பார்த்துவிட்டான். ஏன் என்னை அவன் அடிக்கடி திரும்பிப் பார்க்கிறான்? அவன் ஏதோ திட்டம் திட்டிக்கொண்டிருக்க வேண்டும். ஆரம்பத்தில் வண்டி நகர்தே அரிதாக இருந்தது. ஆனால், இப்பொழுது பறக்கிறது. “இங்கே பார் கிலிம். ஏன் நீ இப்படி உன் குதிரையை விரட்டுகிறாய் ?” என்று கேட்டு வைத்தார்.

“நான் விரட்டவில்லை. அதுவாக ஓடுகிறது. ஓடத்தொடங்கி விட்டால் போதும், அப்புறம் எதற்க்கும் அது நிற்காது. பாவம். அதன் கால்கள் அப்படி அமைந்துள்ளன.” என்று பதில் சொன்னான்.

“அது பொய். தம்பி. அது பொய் என்பது எனக்குத் தெரிகிறது. இவ்வளவு வேகமாக போக வேண்டாம் என்று உனக்கு சொல்லிவைக்கிறேன். குதிரையைப் பிடி. கேட்கிறதா? அதை பிடி!”

“ஏன்?”

“ஏன் என்றால். . . ஏனென்றால் ஸ்டேஷனிலிருந்து நான்கு நண்பர்கள் என்னைத் தொடர்ந்து வருகிறார்கள். இந்தக் காட்டுப் பகுதியில் அவர்களுடன் சேர்ந்து பயணம் செய்வது இன்னும் சந்தோஷமாக இருக்கும். அவர்கள் எல்லாம் உயரமான பலமான ஆட்கள். எல்லோரிடமும் கைத்துப்பாக்கி இருக்கிறது. ஏன் நீ திரும்பி என்னைப் பார்த்து ஏதோ முள்ளில் உட்கார்ந்திருப்பவனைப் போல் குதிக்கிறாய்? ஹேய்! இங்கே பார். என்னை . . . என்னிடம் பார்க்க எதுவும் இல்லை. என் துப்பாக்கிகளைத் தவிர! இதோ, அவற்றைப்

பார்க்க வேண்டும் என்று நீ விருப்பப்பட்டால் எடுத் துக் காட்டுகிறேன். இதோ அவற்றை எடுக்கிறேன்.”

“நில அளவையாளர் தன் கோட்பைக ளில் எதையோ தேடுவதுபோல் பாவனை செய் துகொண்டிருந்தார். அதே நேரத்தில் அவர் கன விலும் நினைத்து பார்த்திருக்கமுடியாத சம்ப வம் நடந்துவிட்டது. கிலிம் திடீரென வாகனத்தை விட்டு எகிறிக் குதித்துப் பின்னங்கால் பிடரியால் இடிபட ஓடி காட்டுக்குள் மறைந்து போனான்.

ஓடும் போதே, “காப்பாற்றுங்கள், காப்பாற் றுங்கள். என் குதிரையை எடுத்துக்கொள்,சண் டாளா என் வாகனத்தை எடுத்துக்கொள், என்னை விட்டுவிடு” என்று கத்தியபடியே ஓடினான்,

அவன் வேகமாக ஓடியதில் ஏற்பட்ட கால் தடத்தின் ஒலி மறைந்த்து. காய்ந்த சருகுகளின் ஒலியும் அடங்கியது. எங்கும் நிசப்தம் நிலவியது. இந்த எதிர்பாராத சம்பவம் நடந்து முடிந்தவு டன் நில அளவையாளர் செய்த முதல் காரியம், குதிரையை நிறுத்தியதுதான். பிறகு வாகனத்தில் மேலும் வசதியாக அமர்ந்தபடி யோசித்துபார்க்கத் தொடங்கினார்.

“ஆக, அவன் பயந்து போய் ஓடிவிட்டான். முட்டாள்! சரி. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு வழி தெரியாது. எனவே தனி யாக போகமுடியாது. அப்படியே போனாலும், நான் ஏதோ அவனது குதிரையைத் திருடியது போல் ஆகிவிடும். என்ன செய்யாலாம்? “கிலிம் ! கிலிம் !” என்று கத்திப் பார்த்தார்.

“கிலிம்” என்ற எதிரொலி பதிலாக கிடைத் தது.

இரவு முழுவதும் இந்த இருட்டான காட் டில், ஓநாய்களின் ஊளையிடும் சத்தத்தையும்

அதன் எதிரொலியையும், இந்த மெளிந்த குதிரை யின் குறட்டை ஒலியையும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டிருக்கும் என்ற எண்ணமே ஒன்றே அவரது முதுகெலும்பில் சில்லிட வைத்தது.

“கிலிம்” என்று உரக்கக் கத்திப்பார்த்தார். ”என் இனிய கிலிம்! என் செல்லக் கிலிம்!” எங்கி ருக்கிறாய்!”

இரண்டு மணிநேரம் தொடர்ந்து கூப்பிட் டுப் பார்த்தார். குரல் கம்மி பேசமுடியாமல் முயற் சியைக் கைவிட்டு இந்தக் காட்டில் இரவை கழிப் பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தபோதுதான் முனகல் ஒலி ஒன்று காற்றில் மிதந்து வந்தது.

“கிலிம். நீ தானே? வா, கிலிம். கிளம்பலாம்.”

“நீங்கள் என்னைக் கொன்றுவிடுவீர்கள்.”

“நான் ஏன் உன்னைக் கொல்லப்போகி றேன். கிலிம். சும்மா வேடிக்கைக்காக அப்படிச் சொன்னேன். கடவுள்மீது சத்தியமாய், நானாவது துப்பாக்கி வைத்திருப்பதாவது! நான் அப்படிப் பொய் சொன்னதற்குக் காரணம் எனக்கு பயமாக இருந்தது. வா போகலாம். நான் குளிரில் உறைந்து போய் இருக்கிறேன்.”

உண்மையான திருடனாக இருந்தால் நீண்ட நேரத்துக்கு முன்பே குதிரையையும் வாக னத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிப்போய் இருப் பான் என்று கிலிம் நினைத்திருக்க வேண்டும். எனவே, காட்டைவிட்டு வெளியே வந்த கிலிம், வண்டியில் பயணம் செய்தவரை நோக்கி எதற்கும் கவனத்துடன் அடியெடுத்து வைத்தான்.

“முட்டாள். நீ எதற்காகப் பயப்படுகிறாய்? நான் சும்மா வேடிக்கைக்காகதான் சொன்னேன்.

நீ என்னைப் பார்த்துப் பயப்படுகிறாய் ! வா வந்து ஏறு !” என்று மீண்டும் சொன்னார்.

“முதலாளி ஐயா” என்று முனகிய கிலிம், வாகனத்தில் ஏறியபடியே, ‘’இப்படியெல்லாம் நடக்கும் என்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தால், நூறு ரூபள்களுக்கு உங்களை அழைத்து வர ஒப்புக் கொண்டிருக்கமாட்டேன். பயத்தில் எறக்குறைய செத்தே போனேன தெரியுமா ?”, என்றான்.

கிலிம் தன் குதிரையை அடித்தான். வாகனம் குலுங்கியது. கிலிம் மீண்டும் அடித்தான் வாகனம் சட சடத்தது. நான்காவது அடியில் வாகனம் மெதுவாக நகர்ந்தது தான் தாமதம், நில அளவையாளர் தன் கோட் காலரை இழுத்து காதுகளை மூடிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டான்.

கிலிம்மும் சரி, பாதையும் சரி இரண்டுமே இப்பொழுது அவருக்கு ஆபத்தாகத் தெரியவில்லை.

****

இக்கதை முதன்முதலில் ஆண்டோஷா ஷெக்கோண்டே என்ற அவரது ஆரம்பக்கால பெயருடன், 1885 ஆம் ஆண்டு, நவம்பர் 16ஆம் நாள் ஃப்ராக்மெண்ட்ஸ் என்னும் இதழில் வெளியானது. பிறகு 1886 இல் அவருடைய கதைத்தொகுப்பில் இடம்பெற்றது.

7. கலைப்பொருள்

பங்குசந்தைச் செய்திகள் வெளிவரும் “ஸ்டாக் எக்ஸ்சேஞ் நியூஸ்” ஸின் 223 ஆம் இதழினால் சுற்றப்பட்டிருந்த அந்தப் பொருளை, தன் தாய்க்கு ஒரே மகனான சாஷா ஸ்மிர்நோவ் மிகக் கவனமாகத் தன் கக்கத்தில் தாங்கியபடி வந்தான். சோகமான முகத்துடன் இருந்த மருத்துவர் கோஷெல் கோவில் அலுவல் அறைக்குள் அவன் நுழைந்தான்.

“அட, தம்பியா வா! இன்று எப்படி? எல்லோரும் நலமாக இருக்கிறீர்களா? என்று அவனை மருத்துவர் வரவேற்றார்.

கண்கனைச் சிமிட்டிய சாஷா, தன் மார்பின்மீது கைகளை அழுத்தி, நடுக்கத்துடன் உணர்ச்சிவசப்பட்டு பேசினான்:

“டாக்டர், அம்மா உங்களை விசாரித்ததாகச் சொல்லச் சொன்னார்கள். உங்களுக்கு நன்றி தெரிவிக்கச் சொன்னார்கள். அந்த அம்மாவின் ஒரே பையன் நான். என் உயிரை நீங்கள் காப்பாற்றிவிட்டீர்கள். அபாயகரமான நோயிலிருந்து என்னை மீட்டுவிட்டீர்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே என் அம்மாவுக்கும் எனக்கும் தெரியவேயில்லை.”

“உளறாதே” என்று இடைமறித்த மருத்துவர், உள்ளூர மகிழ்ச்சியில் அசட்டுத்தனமாகச் சிரித்துக் கொண்டே, “என் இடத்தில் யார் இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பார்கள்” என்றார்.

“நான் என் அம்மாவுக்கு ஒரே பிள்ளை. நாங்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். டாக்டர், நீங்கள் செய்த சிகிச்சைக்கு எங்களால் பணம் செலுத்த முடியவில்லைதான் என்றாலும், அம்மா

வும் நானும், அதாவது அவரது ஒரே பிள்ளை யான நான் உங்களை மிகவும் தாழ்மை யாக கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான். இதோ இந்தப் பொருளை எங்கள் சார்பாக நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது ஒரு பழமையான வெண் கலக் கலைப்பொருள் ; அற்புதமான கலை நயம், வேலைப்பாடு கொண்டது.”

“முடியாது. உண்மையாகத்தான் சொல்கிறேன். என்னால் இதனை...” எனப் புருவத்தை நெறித்த படி மருத்துவர் மறுத்தார்.

“இல்லை. இல்லை நீங்கள் இதனை ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்” என முணு முணுத்தபடியே தான் கொண்டு வந்திருந்த பொரு ளைச் சுற்றியிருந்த தாளை பிரிக்கத் தொடங்கி னான்.

“நீங்கள் முடியாது என்றால் அம்மாவுக்கும் எனக்கும் மனது புண்படும். இது ஒரு அருமை யான பொருள். பழைய பொருள். வெண்கலத்தா லானது. அப்பா இறந்தவுடன் இது எங்களுக்குக் கிடைத்தது. இதனை விலை மதிப்பற்ற நினைவுப் பொருளாக நாங்கள் பாதுகாத்து வந்தோம். இது போன்ற பழைய வெண்கலப் பொருட்களை வாங்கி கலைப் பொருள் சேகரிப்பவர்களுக்கு விற்பதை என் அப்பா தொழிலாகச் செய்து வந்தார். இப்பொ ழுது அம்மாவும் நானும் அந்தத் தொழிலைப் பார்த் துக் கொள்கிறோம்...”

அப்பொருளை சுற்றியிருந்த தாளை பிரித்து முடித்தவுடன் அங்கிருந்த மேசை மீது அதனை எடுத்து வெற்றிகரமாக வைத்தான். மெழுகுவத்தி கள் வைப்பதற்கென அழகாக சிறிய அளவில் வடிவமைக்கப்பட்ட பழைய வெண்கலக் கொத்து விளக்குத் தண்டு அது. அதன் பீடத்தில் இரண்டு பெண் உருவங்கள் பிறந்த மேனியாக காட்சியளித்

தன. அவை எப்படி நின்றிருந்தன என்பதை விவ ரிக்குமளவு துணிச்சலோ பாலுணர்வோ எனக்கு இல்லை. அந்த உருவங்கள் பசப்புகின்ற முறையில் சிரித்துக் கொண்டிருந்தன. மெழுகுவத்திகளைத் தாங்கவேண்டிய வேலையை விடுத்து அவை அந்த பீடத்திலிருந்துத் தாவிக் குதித்து இந்த அறை முழுவதும் மோசமான காட்சியை உண்டாக் கக்கூடும் என்பதைப் போல் தோன்றியது. அதை நினைக்கும் மாத்திரத்திலேயே, இனிய வாசகரே, உங்களுக்கு வெட்கத்தால் கன்னம் சிவந்து போய் விடும்.

அந்தப் பரிசுப் பொருளை ஒரு முறை நோட்ட மிட்டவுடன், தன் காதின் பின் பகுதியை மருத்துவர் லேசாகச் சொறிந்து கொண்டார். தொண்டையை செருமிக்கொண்டு பெருமூச்சு விட்டார்.

“உண்மைதான். இது ஓர் அழகான கலைப் பொருள் தான். ஆனால், இதை நான் எப்படி வைக்க முடியும்? இது ரசனை என்று நீ சொல்ல முடியாது. அதாவது, கழுத்து தெரிய இறக்கி வெட் டப்பட்ட சட்டை ஒருபுறம் இருக்க, இது உண்மை யில் எல்லை மீறிய....”

“எல்லை மீறிய என்றால் என்ன சொல்ல வருகி றீர்கள்?”

“உணர்வுகளைத் தூண்டும் அந்தப்பாம்புக் கூட இந்த அளவு பண்பாடு குறைவாக எதையும் நினைத்திருக்காது. மேசை மீது இத்தகைய சாதா ரண அலங்காரப் பொருளை வைப்பதனால், இந்த வீடு முழுவதும் கெட்டு விடுவதாக நான் ஏன் நினைக்க வேண்டும்?”

“டாக்டர், கலை மீது ஏன் உங்களுக்கு இத்த கைய வினோதமான பார்வை இருக்கிறது?” சாஷா வின் மன வருத்தம் பேச்சில் எதிரொலித்தது.”

“இது உத்வேகத்தை அளிக்ககூடிய வேலைப் பாடுடையது. இதன் ஒட்டுமொத்த அழகையும் நேர்த்தியையும் பாருங்கள். அப்படியே பயபக்தி ஏற் பட்டு உங்கள் தொண்டை அடைக்கவில்லையா? இது போன்ற அழகை ரசிக்கும் போது இந்த பூமி யில் உள்ள மற்ற விஷயங்கள் அனைத்தும் உங்க ளுக்கு மறந்து போகும். அதோ அந்த அசைவைப் பாருங்கள் டாக்டர். அந்தத் தோற்றத்தை, முக பாவத்தை பாருங்கள்.” என்று சாஷா சொல்லிக் கொண்டே போனான்.

“நான் அதை மிகவும் ரசிக்கிறேன், பாராட்டு கிறேன்,” என்று சுதாரித்துக்கொண்ட மருத்துவர்,” ஆனால் ஒரு விஷயத்தை நீ மறந்து விட்டாய். நான் ஒரு குடும்பத்தலைவன். இங்கு வந்து விளையாடப் போகும் என் சிறு பிள்ளைகளைப் பற்றியும் பெண் கள் பற்றியும் யோசித்துப்பார்” என்றார்.

“உண்மைதான். சாதாரண மக்களின் பார்வை யில், இந்த மாபெரும் கலைப்படைப்பு வேறு மாதி ரியாகத்தான் தெரியும். ஆனால், டாக்டர், நீங்கள் இவர்களை விட மேலே நின்று பார்க்கவேண்டும். குறிப்பாக, அம்மாவும் நானும் நீங்கள் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தால் மிகவும். வருத்தமடை வோம். நான் அம்மாவின் ஒரே மகன். நீங்கள் தான் என் உயிரைக் காப்பாற்றீனார்கள். எங்களி டம் உள்ள மிகவும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷத்தை உங்களுக்கு தருகிறோம். இதனை ஜோடியாக தரு மளவு எங்களிடம் இதேபோல் வேறு ஒன்று இல் லையே என்ற ஒரே குறைதான் எனக்கு இருக்கி றது” என்றான் சாஷா.

“நன்றி, தம்பி. அம்மாவை நான் மிகவும் கேட் டதாகச் சொல். ஆனால் என் இடத்தில் கொஞ் சம் இருந்து பார். இங்கு வரக்கூடிய குழந்தைகள், பெண்கள் பற்றி யோசித்து பார்... சரி, விடு, அது இங்

கேயே இருக்கட்டும்! உன்னைச் சமாதானப்படுத்த முடியாது என நான் நினைக்கிறேன்” என்று மருத்துவர் கூறினார்.

“என்னை சமாதானம் செய்ய ஒன்றுமில்லை.” என சந்தோஷமாக சொன்ன சாஷா, “இதோ இந்தப் பூச்செடியின் பக்கத்தில் இந்தக் கொத்து விளக்குத் தண்டை நீங்கள் வைக்க வேண்டும். என்ன, இது ஜோடியாக இல்லை! வருத்தமாகத் தான் இருக்கிறது. என்ன செய்ய, சரி! போய் வருகிறேன் டாக்டர்!” என விடை பெற்றான்.

சாஷா சென்ற பிறகு, நீண்ட நேரம் அந்தக் கொத்து விளக்கையே உற்று நோக்கியபடி இருந்த மருத்துவர், காதின் பின்புறத்தை சொறிந்துகொண்டே யோசித்தார்.

“இது ஒரு அற்புதமான பொருள்தான். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. இதனை வாங்காமல் விட்டிருந்தால் தான் அவமானம். ஆனால், இதனை இங்கு வைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஹூம்! பிரச்சனை தான்! யாரிடம் இதனைக் கொடுப்பது அல்லது தள்ளி விடுவது?” என யோசித்தார்.

நீண்ட நேர யோசனைக்குப் பின், அவருடைய சிறந்த நண்பரும் வழக்கறிஞருமான ஹர்கீன் நினைவுக்கு வந்தார். மருத்துவருக்கு நிறைய சட்ட உதவிகளைச் செய்தவர் அவர்.

“ஆம், இது தான் சரியான தீர்வு” என மருத்துவர் முடிவெடுத்தார்.

“நண்பர் என்ற முறையில் நான் தரும் பணத்தை ஏற்றுக்கொள்வது சங்கடமாக இருக்கும். ஆனால், இந்தப் பொருளை அன்பளிப்பாகத் தந்தால் அது முறையானதாக இருக்கும். ஆமாம்,

இந்த கொடூரமானப் பொருளை நேராக அவரி டம் கொண்டு போய் கொடுக்க வேண்டும். எப்ப டிப் பார்த்தாலும் அவர் திருமணமாகாதவர்தானே. வாழ்க்கையினை அப்படி ஒன்றும் பெரிதாகச் சட்டை செய்யாதவர்" என பலவாறு சிந்தித்தபடியே இருந்தார்.

இதற்கு மேல் காலம் தாழ்த்தாமல், தன் கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு, அந்தக் கொத்து விளக்கை எடுத்துக் கொண்டு ஹர்கீன் வீட்டை நோக்கி விரைந்தார்.

அவர் வீட்டுக்குள் நுழைந்ததும், "வணக் கம்" என்றார் மருத்துவர். "நீ எனக்கு செய்த உத விகளுக்கு நன்றி சொல்ல வந்திருக்கிறேன். நீ பணம் எதுவும் பெற்றுக்கொள்ள மாட்டாய் என் பது எனக்கு தெரியும். இந்தச் சிறிய அன்பளிப்பை ஏற்றுக்கொள்ள சம்மதிப்பாய் என நினைக்கிறேன். இதோ இதுதான். உண்மையிலேயே இது மிகவும் சிறப்பு வாய்ந்தது." என்று அப்பொருளை வழக்கறி ஞரிடம் மருத்துவர் வழங்கினார்.

அந்தச் சிறு அன்பளிப்பினைப் பார்த்ததும் வழக்கறிஞர் மகிழ்ச்சியின் உச்சத்துக்கே போய் விட்டார்.

"ஆமாம் நிச்சயமாக ! எப்படியெல்லாம் யோசிக்கிறார்கள். அருமை! அபாரம்! இது போன்ற பொக்கிஷம் உனக்கு எங்கு கிடைத்தது?" என்று உற்சாகத்தில் குதித்தார் வழக்கறிஞர்.

தன் மகிழ்ச்சியின் வெளிப்பாடுகளை எல் லாம் கொட்டித் தீர்த்த பின், கதவின் பக்கம் பதட் டத்துடன் நோட்டமிட்டபடியே,

“நல்ல பிள்ளையாக இதனை நீயே திரும்ப எடுத்துச்சென்று விடு. இதனை நான் வைத்துக் கொள்ளமுடியாது” என வழக்கறிஞர் கூறினார்.

“ஏன் ? என்ன காரணம் ?” எனப் பதறினார் மருத்துவர்.

“எல்லோருக்கும் தெரிந்த காரணம்தான் என் அம்மாவோ வாடிக்கையாளரோ உள்ளே வர நேர்ந்தால் என்ன ஆகும் என்று யோசித்துப்பார். என்னிடம் வேலை செய்பவர்களை எப்படி நான் ஏறிட்டுப் பார்க்க முடியும்?” என்று கேட்டார்.

“இல்லை, இல்லை, இதை நீ மறுக்க முடி யாது! நீ சரியான பட்டிக்காட்டானாக இருக்கிறாய். இது ஒரு உத்வேகமான படைப்பு. அந்த அசை வைப் பார். அந்த முக பாவத்தைப் பார். இதற்கு மேல் ஏதாவது பிடிவாதம் பிடித்தால், நான் மிகவும் வருத்தமடைவேன்.” என்று வேக வேகமாக மறுத் தார் மருத்துவர்.

“மேலே ஏதாவது வண்ணம் பூசி இருக்க லாம். இடையினை மறைக்க ஆடை இருந்தாலா வது பரவாயில்லை...” என வழக்கறிஞர் பொரு மினார். ஆனால், இன்னும் வேகமாக அவரைப் பார்த்துக் கையசைத்துவிட்டு, மருத்துவர் சாமார்த் தியமாக அந்த வீட்டை விட்டு வெளியேறி தன் வீடு வந்து சேர்ந்தார். ஒரு வழியாக அந்த அன்பளிப் பினை கை கழுவியதில் அவருக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டது.

நண்பர் போனதும், அவர் விட்டுச்சென்ற கொத்து விளக்கை ஹர்கீன் உற்று நோக்கினார். அதன் எல்லா பாகத்தையும் தொட்டுப் பார்த்த வழக்கறிஞர், மருத்துவரைப் போலவே இதனை

என்ன செய்வது என்று மண்டையை உடைத்துக் கொண்டார்.

“இது ஒரு அற்புதமான படைப்புதான். இதனை எடுத்துச் செல்ல விட்டிருந்தால் அவ மானம்தான். ஆனால், இதை இங்கே வைத்துக் கொள்வது என்பது முறையாகாது. யாரிடமாவது இதைக் கொடுத்து விடுவது தான் உத்தமம். ஆமாம், இன்று இரவு, நகைச்சுவை நடிகர் ஷாஷ் கின்னுக்கு நிதி அளிக்க சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கொத்து விளக்குத் தண்டை அவனுக்கு அன்பளிப்பாக அளித்துவிட லாம். எப்படிப் பார்த்தாலும் அந்த ராஸ்கலுக்கு இது போன்ற பொருட்கள் பிடிக்கும்...” என முடிவு செய் தார் வழக்கறிஞர்.

உடனடியாக அங்குப் புறப்பட்டு சென்றார். மிகுந்த கவனத்துடன் சுற்றப்பட்ட அந்த கொத்து விளக்குத் தண்டு, நகைச்சுவை நடிகர் ஷாஷ்கின் னுக்கு அன்பளிப்பாக அன்று மாலை அளிக்கப்பட் டது. அன்று மாலை முழுவதும் அந்த நடிகரின் ஒப் பனை அறையில் இருந்த அன்பளிப்பினைப் பார் வையிட ஆண் பார்வையாளர்கள் மொய்த்தனர். அந்த ஒப்பனை அறை, ஆச்சரியத்தில் எழும்பிய உற்சாகமான ஆரவாரத்தாலும், குதிரை கனைப் பது போன்ற சிரிப்பொலியாலும் நிரம்பியிருந்தது. நடிகைகளில் யாராவது ஒருவர் உள்ளே வர கத வைத் தட்டினால், நடிகர் தன் காந்த குரலில்,

“தற்சமயம் வேண்டாம் டார்லிங், உடை மாற்றிக் கொண்டிருக்கிறேன்” என்று சமாளித்து விடுவார்.

நாடகம் முடிந்ததும் தன் தோள்களை வளைத்துக் கொண்டு, குழப்பத்தில் கைகளை உதறிக்கொண்டிருந்தார்.

“இந்தப் பாழாய் போன விகாரத்தை நான் எங்கு வைப்பது? நான் இருப்பதோ தனியார் விடுதியில். என்னைப் பார்க்க வரும் நடிகையை நினைத்துப் பார்க்கிறேன். சட்டென எடுத்து மேசைக்குள் போட்டு மூட இது ஒன்றும் புகைப்படம் இல்லை.!” எனப் புலம்பிக் கொண்டிருந்தார்.

அவரது உடைகளைக் களைய உதவி செய்துக் கொண்டிருந்த ஒப்பனைக்காரர், “ஏன் சார், இதை விற்றால் என்ன?” என்று கேட்டார். இந்தப் பகுதியில் இது மாதிரியான பழைய வெண்கலப் பொருட்களை வாங்கும் வயதான பெண் ஒருவர் இருக்கிறார். திருமதி. ஸ்மிர்நோவா என்று கேளுங்கள். எல்லோருக்கும் தெரியும்.” என அவருக்கு ஆலோசனை வழங்கினார்.

அவரது ஆலோசனைப்படியே நகைச் சுவை நடிகர் நடந்து கொண்டார்.

இரண்டு நாட்கள் கழித்து, பித்தநீர் குறித்த சிந்தனையில் இருந்த மருத்துவர், நெற்றியில் ஒரு விரலை அழுத்தியபடி, தன் அலுவலகத்தில் உடகார்ந்திருந்தார். திடீரென கதவைத் திறந்து கொண்டு, சாஷா ஸ்மிர்நோவ் உள்ளே நுழைந்தான். உற்சாகமாக சிரித்தபடி வந்த அவன் முகம் முழுக்க சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தது. அவன் கையில் வைத்திருந்த ஏதோ ஒரு பொருள், செய்தித்தாளால் சுற்றப்பட்டு இருந்தது.

“டாக்டர்,” எனப்பேசத் தொடங்கும் போதே மூச்சு வாங்கியது அப்படியே தொடர்ந்தான் :

“நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். உங்களுக்கு இருக்கும் அதிர்ஷ்டத்தை உங்களால் நம்ப முடியாது. எப்படியோ உங்களுக்கு அன்று கொடுத்த கொத்து விளக்குத்தண்டுக்கு ஜோடி கிடைத்துவிட்டது. அம்மாவுக்கு ரொம்ப திருப்தி. நான் அம்மாவுக்கு ஒரே பிள்ளை. நீங்கள் தான் என்னைக் காப்பாற்றினீர்கள்...”

மிகவும் நன்றி விசுவாசத்துடன், அந்தக் கொத்து விளக்குத் தண்டை மருத்துவர் முன் சாஷா வைத்தான். வாயைப் பிளந்த மருத்துவர், ஏதோ சொல்ல முயன்றுப் பார்த்தார். ஆனால் வார்த்தை எதுவும் வரவில்லை. வாயடைந்து நின்றார்.

****

இக்கதை முதன்முதலில் வெளிவந்து 1886ஆம் ஆண்டிலேயே பெரும் வரவேற்பினைப் பெற்றது.

8. மெலிந்தவனும் பருத்தவனும்

நிக்கோலயேஸ்கி புகைவண்டி நிலையத்தில் இரண்டு நண்பர்கள் சந்தித்துக்கொண்டனர். ஒருவன் மெலிந்து இருந்தான். அடுத்தவன் பருத்து இருந்தான். பருத்திருந்த ஆள், சற்று முன்தான் அந்தப் புகை வண்டி நிலையத்தின் உணவு விடுதியில் சாப்பிட்டு முடித்திருந்தான். சாப்பிட்ட ஈரம் கூட காயாமல், அவனது உதடுகள் பார்க்க முதிர்ந்த செர்ரி பழங்களைப் போல் மினுமினுத்தன. அவனிடம் ஆரஞ்சு மணம் வீசியது. ஒல்லியான நபர், சற்று முன்தான் ரயிலிலிருந்து இறங்கியிருந்தான். அவனிடம் கைப்பெட்டிகள், பொதிகள், அட்டைப்பெட்டிகள் என நிறையப் பொருட்கள் இருந்தன. அவனிடம் இருந்து காப்பிக்கொட்டையும் பன்றிக்கறியும் கலந்து வாசனை வந்தது. நீண்ட முகவாயுடன் மெலிந்து காணப்பட்ட குட்டையான பெண் அவனுக்குப் பின்னாலிருந்து எட்டிப்பார்த்தாள். அவள்தான் அவனுடைய மனைவி. பாதியளவு மூடிய கண்களுடன், உயரமாக இருந்த பள்ளி மாணவன்தான் அவளுடைய மகன்.

அந்த ஒல்லியான ஆளைப் பார்த்தவுடன், ஆச்சரியத்தில், “போர்ஃபிரி” என்று பருத்த நபர் கத்தினான். “அட, நீயா? என் இனிய நண்பனே! நாம் கடைசியாகக் சந்தித்து வெகு நாட்கள் ஆகிவிட்டன,” என்றான்.

அப்படியே ஸ்தம்பித்துப்போன ஒல்லியானவன்,

“எல்லாம் கடவுள் செயல். மிஷா! நீ என்னுடன் பள்ளியில் படித்த பழைய நண்பன். உன்னை இங்குச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

நண்பர்கள் இருவரும் மூன்று முறை மாறி மாறி அணைத்துக்கொண்டனர். கண்களில் கண்ணீர்

மல்க, ஒருவரையொருவர் உற்றுப் பார்த்தபடியே இருந்தனர். இருவருக்குமே இச்சந்திப்பு இன்ப அதிர்ச்சியாக அமைந்தது.

பிறகு இருவரும் உணர்ச்சிகளை தங்கள் கட்டு பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ஒல்லியான நபர் ஆரம்பித்தான். "என் இனிய நண்பனே. இப்படி நடக்கும் என்று யார் எதிர்பார்த் திருக்க முடியும்? என்ன ஒரு ஆச்சரியம்! இப்படித் திரும்பு. உன்னை நன்றாக பார்க்கிறேன்! அட அதே அழகு, எடுப்பு. நீ எப்பொழுதுமே மிடுக்காகத்தான் இருப்பாய் மயக்கும் மன்மதனாய், என்ன அப்ப டித்தானே! அட, நான் எதிர்பார்க்கவே இல்லை! சரி சொல். நீ எப்படி இருக்கிறாய்? பணக்காரனாகி விட்டாயா? திருமணமாகிவிட்டதா? எனக்கு... அது தான் பார்க்கிறாயே. எனக்குத் திருமணமாகிவிட் டது. இவள் தான் என் மனைவி லூயீஸ். திருமணத் துக்கு முன் இவள் பெயர் வான்சென்பாக், லூத் தரன் பிரிவினர். இவன் என் மகன் நத்தானியேல். பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கிறான்... நத்தன், "இவன் யார் தெரியுமா? மிஷா. என் சிறு வயது நண் பன் ! நாங்கள் இருவரும் பள்ளியில் ஒன்றாக படித் தவர்கள்," என அறிமுகம் செய்து வைத்தான்.

சிறிது நேரம் ஏதோ யோசனை செய்த நத்தானி யேல், தன் தொப்பியைக் கழட்டி மரியாதை செய் தான்.

ஒல்லியான ஆள் தொடர்ந்தான் :

"ஆமாம். நாம் இருவரும் பள்ளியில் ஒன்றா கப் படித்தோம். உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு முறை, நீ பாடப்புத்தகத்தை சிகரெட்டால் எரித் துவிட்டாய். அதனால், எல்லோரும் உன்னை "ஹிரோஸ்டிரேடஸ்" என்று கேலி செய்தோமே. நான் மற்றவர்களைப் பற்றி கதைக்கட்டி விடுவேன்.

எனவே, என்னை “எஃபியால்டெஸ்” என்று கேலி செய்வார்கள். நாம் என்ன மாதிரியான பையன்க ளாக இருந்திருக்கிறோம் பார்த்தாயா? வெட்கப்ப டாதே நத்தா! இன்னும் கொஞ்சம் அருகில் வா! அது தான் சொன்னேனே. என் மனைவி, இதற்கு முன் இவள் பெயர் வான்சென்பாக் அதாவது லூத் தரன் பிரிவினர்,”

நத்தானியேல் சிறிது நேரம் யோசித்துவிட்டு தன் அப்பாவின் பின்னால் போய் மறைந்து கொண் டான்.

“சரி.. சரி.. அப்புறம் உன் வாழ்க்கை எப்ப டிப் போகிறது? அதைச் சொல்.” என நண்பனைப் பார்த்த பரவசத்துடன் கேட்டான் குண்டான ஆள். “இப்பொழுது வேலையில் இருக்கிறாயா? ஓய்வு பெற்றுவிட்டாயா?” என விசாரித்தான்.

“வேலையில்தான் இருக்கிறேன். 8ஆம் நிலை கிடைத்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. செயின் ஸ்டானிஸ்லாஸ் விருதும் கிடைத்துவிட் டது. சம்பளம் குறைவு தான். அதனால் என்ன? என் மனைவியின் இசை வகுப்புக்கள் மூலம் கொஞ்ச பணம் கிடைக்கிறது. நானும் என் பங்குக்கு, மரத் தாலான சிகரெட் பெட்டிகள் தயாரித்து விற்கிறேன். எல்லாம் முதல் தரமான சிகரெட் பெட்டிகள். ஒரு பெட்டி ஒரு ரூபளுக்கு விற்கிறேன். பத்து பெட் டிகளுக்கு மேல் வாங்கினால், நிச்சயம் தள்ளு படி உண்டு. எப்படியோ சமாளிக்கிறோம். உனக்கு தெரியுமா, நான் அரசின் நிர்வாகத்துறை ஒன்றில் வேலை செய்து வந்தேன். நிர்வாகம்தான் என்னை இங்கு மாற்றிவிட்டது. சரி, உன் விஷயம் எப்படி? நீ இந்நேரம் ஸ்டேட் கவுன்சிலராகி இருப்பாய் என நினைக்கிறேன். அப்படித்தானே?” என ஆவலுடன் கேட்டான்.

“இன்னும் கொஞ்சம் உயர்வாக நினைத்துப் பார்!” என்றான் குண்டான ஆள். “ஆம், நான் பிரிவி கவுன்சிலராகி வெகு நாளாகிறது. எனக்கு ஏற்கெ னவே இரண்டு விருதுகள் கிடைத்துவிட்டன” என் றான்.

இதைக் கேட்ட ஒல்லியான நபரின் முகம் திடீ ரென வெளிறிப் போனது. பிறகு கல்லாய் இறு கியது. அப்படியே இருந்த இடத்தில் அசையா மல் நின்றிருந்தான். பல் தெரிய சிரித்ததில் முகம் அஷ்ட கோணலானது. கூனிக்குறுகி வளைந்ததில், அவன் கையில் இருந்த பெட்டிகளும் கூட குறுகிச் சுருங்க ஆரம்பித்தன.

அவனுடைய மனைவியின் நீண்ட முகவாய் மேலும் நீண்டது. நத்தானியேல் விறைத்தபடி நேராக நின்று எல்லா பொத்தான்களையும் போட ஆரம்பித்தான்.

“நான் தங்களைச் சந்தித்து எனக்கு எவ் வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா ? என் இளமைக்கால நண்பன் ஒருவன் திடுதிப்பென்று இவ்வளவு பெரிய ஆளாக மாறி இருக்கிறான் என்று சொன்னால்... ஹி ! ஹி !...” என வளைந்தான் ஒல் லியான நபர்.

“போதும். போதுமப்பா!” ஏன் இப்படியெல் லாம் பேசுகிறாய்? நீயும் நானும் சிறிய வயதிலி ருந்தே பழகும் பழைய நண்பர்கள். நமக்குள் பத விக்கு எந்த இடமும் கிடையாது.” எனக் குண்டான நபர் கோபமகச் சொன்னான்.

“ஆனால் சார், உண்மையிலேயே...” என அசட்டுத்தனமாக சிரித்த ஒல்லியான நபர் மேலும் சுருங்கியது போல் ஆனான்.

தொடர்ந்தவன், ‘’தங்கள் மேலான கவனத் துக்கு... இவன் என் மகன் நத்தானியேல். இவள்

என் மனைவி லுயீஸ். ஒரு வகையில் பார்த்தால், லூத்தரன் பிரிவினர்...” என மீண்டும் ஒரு முறை அறிமுகம் செய்து வைத்தான்.

குண்டான நபர் எதையோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் அந்த ஒல்லியான நபரின் முகத்தினை ஆக்கிரமித்திருந்த அளவுக்கதிகமான பணிவும், குழைவும் பிரிவி கவுன்சிலருக்குக் குமட்டலை ஏற்படுத்தவே, எதையும் சொல்லாமல் தவிர்த்தான். நண்பனிடமிருந்து சற்று பின் வாங்கி, விடைபெறும் விதமாக குண்டான நபர் கையை நீட்டினான். அந்த கையிலிருந்து மூன்று விரல்களை மட்டும் பற்றிய ஒல்லியானவன், தன் மொத்த உடம்பையும் வளைத்து வணக்கம் தெரிவித்து அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

அவனுடைய மனைவியும் சிரித்தாள். நத்தானியேல் தன் கால்களைத் தேய்த்துவிட்டு தொப்பியைக் கழட்டினான். மூவருக்கும் அச்சம்பவம் இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

****

இக்கதை “ஒஸ்கோல்கி” என்னும் இதழில் 1883இல் வெளிவந்தது. 1886இல் செயின்ட் பீட்டர்ஸ்பெர்கில் வெளியான “மாட்லி கதைகள்” என்னும் தொகுப்பில் இக்கதை இடம்பெற்றிருந்தது.

9. ரகசியம் அம்பலமாகும்

பெயரிடப்படாதக் கடிதம் ஒன்று வரவே, யாருக்கும் தெரியாமல் பீட்டர் பொசுதீன், அந்த 'நா' என்று தொடங்கும் சிறிய நகரத்தை நோக்கி மூன்று உள்ளூர்க் குதிரைகளை வைத்துப் பூட்டிய வண்டியில் மாற்றுச்சாலை வழியாக விரைந்துக்கொண்டிருந்தான்.

முகத்தைத் தன் கோட்டின் காலரில் மறைத்துக்கொண்டு, "நான் பதுங்கியிருக்கிறேன் யாருக்கும் தெரியாமல் புகையினைப் போல் மறைந்துவிட்டேன்" எனத் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மோசமான திட்டங்களைத் தீட்டிவிட்டு அவற்றின் சுவடு தெரியாமல் புத்திசாலித்தனமாக மறைத்துவிட்டோம் என அந்த கீழ்த்தரமானவர்கள் தங்களுக்குள் இந்நேரம் மெச்சிக் கொண்டிருப்பார்கள். ஹா, ஹா, ஹா! தங்கள் வெற்றியின் உச்சத்தில் திளைத்துக்கொண்டிருக்கும் போது, போய் "லியாப்கின், தியாங்கின் "எல்லோரையும் கொண்டுவா" என்ற குரல் கேட்டவுடன் அவர்களுக்கு எத்தகைய திகிலும் ஆச்சரியமும் உண்டாகும் என்பதை ஊகிக்கமுடிகிறது. அந்த நேரம் என்ன ஒரு களேபரம் ஏற்படும் தெரியுமா ஹா! ஹா !

இப்படிப் பலவாறாகத் தனக்குள் நினைத்துச் சோர்ந்துபோன பொசுதீன், வண்டியோட்டியிடம் பேச்சு கொடுத்தான். பேரும் புகழும் அடைய வேண்டும் என்னும் தாகமுடைய அவன், தன்னைப் பற்றி முதலில் விசாரித்தான்.

"பொசுதீன் யார் என்று உனக்குத் தெரியுமா?"

“எப்படி எனக்கு தெரியாமல் போகும்? அவன் யார் என்று எங்களுக்கு தெரியும்” என்று சிரித்தபடி வண்டியோட்டி சொன்னான்.

“ஏன் சிரிக்கிறாய்?”

“எனக்குச்சிரிப்பாய் வருகிறது. சாதாரண மாக் இங்கிருக்கும் கடைநிலை ஊழியனுக்குக் கூட தெரியும்போது, பொசுதீனைத் தெரியாமல் இருக்க முடியுமா என்று யோசித்துப் பார்த்தேன். எல்லோருக்கும் தெரிவதற்குத் தானே அவன் இங்கு இருக்கிறான்.

“நல்லது. அவனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? அவன் நல்லவனா?”

கொட்டாவி விட்டபடியே, ‘’நல்லவன் தான். நல்ல மனிதன். வேலையில் சிறந்தவன். இங்கு வந்து இரண்டு ஆண்டுகள் கூட முடியவில்லை. அதற்குள் பல வேலைகளை முடித்திருக்கிறான்’’.

“அப்படி என்ன தான் செய்திருக்கிறான்?”

“எவ்வளவோ நல்லது செய்திருக்கிறான். அவன் நன்றாக இருக்க வேண்டும். ரயில்பா தையை இங்கே கொண்டு வந்திருக்கிறான். கொக் ரின்கோவை இந்த நாட்டைவிட்டே வெளியே துரத்தியனுப்பினான். கொக்ரின்கோ மிகவும் மோசமானவன். அவன் ஒரு ராஸ்கல் நரி. இவ னுக்கு முன் இருந்தவர்கள் எல்லோரும் அவன் வலையில் விழுந்து சிக்கிவிட்டார்கள். ஆனால் பொசுதீன் வந்த பின் கொக்ரின்கோ இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டான். ஆமாம், சார். பொசுதீனுக்கு யாரும் லஞ்சம் தர முடியாது. முடியவே முடியாது. நூறு, ஆயிரம் என எவ்வளவு ரூபிள்கள் கொடுத்தாலும் மனதறிய எந்த பாவத் தையும் அவனைச் செய்ய வைக்க முடியாது. நடக் கவே நடக்காது.”

“நல்லவேளை, ஏதோ இந்த வகையிலா வது நம்மைப் புரிந்து வைத்திருக்கிறானே” என பொசுதீன் உற்சாகமடைந்தான். ”அற்புதம்” என் றான்.

“அவன் நல்ல பண்பாடுள்ள மனிதன். ஒரு முறை நம் ஆட்கள் சிலர் ஏதோ குறைகளுடன் அவனைப் பார்க்கப் போயிருக்கிறார்கள். பெரிய மனிதர்களை நடத்துவதைப் போல், அவர்களை அவன் வரவேற்றிருக்கிறான். அவர்களிடம் சகஜ மாக கைகுலுக்கி, “உட்காருங்கள்” என்று சொல் லியிருக்கிறான். அவன் எல்லாவற்றிலும் வேகம். அமைதியாக நடக்கத் தெரியாது. எப்போதும் தாட் பூட். சாதாரணமாக நடப்பது என்பதெல் லாம் கிடையவே கிடையாது. எப்போதும் ஓடிக் கொண்டே இருப்பான். “என் வண்டி எங்கே?” என்று அவன் கூப்பிட்ட அடுத்த நொடியே எங்கள் ஆட்கள் ஓடி வர வேண்டும். அவர்கள் பதிலுக்கு குரல் கொடுக்கக் கூட நேரமிருக்காது. அதற்குள் இங்கு வந்து விடுவான். அவன் வந்தது தான் தெரி யும், எல்லா பிரச்சனைகளையும் தீர்த்து வைத்து விட்டான்”.

வண்டியோட்டி மேலும் தொடர்ந்தான் : ”இதற்கு முன் இருந்தவனைவிட, அவன் ஆயி ரம் மடங்கு நல்லவன். அந்த ஆளும் பார்க்கப் போனால், நல்லவன் தான், இருந்தாலும்... பழைய ஆள் பார்க்க அருமையாக, முக்கியமானவனாகத் தெரிவான். இந்த ஊரிலேயே அவனை விட சத்த மாக யாராலும் கத்த முடியாது. வண்டியில் பயணம் செய்யும் போது அவன் பேசுவது பத்து மைல் தூரத் துக்கு கேட்கும். ஆனால், வேலை என்று வந்துவிட் டால், இப்போது உள்ளவன் ஆயிரம் மடங்கு புத்தி கூர்மையானவன். பழைய ஆளைவிட இருப்பவனி டம் உள்ள மூளை நூறு மடங்கு பெரிது. எல்லா

வகையிலும் இவன் அருமையானவன். ஆனால் இவனிடம் ஒரே ஒரு குறை தான். இவன் ஒரு குடி காரன்".

"பாழாய் போனவன் !" என்று மன துக்குள் முணுமுணுத்துக்கொண்டான் பொசுதீன். "உனக்கு எப்படித் தெரியும், நான்...இல்லை அவன் குடிகாரன் என்று எப்படித் தெரியும் ?" என்று கேட் டான்.

"ஓ, அதுவா? அவன் குடித்ததை நான் என் கண்ணால் பார்த்ததில்லை என்பது உண் மைதான். ஆனால், உண்மையில்லாத எதை யும் நான் சொல்ல மாட்டேன். மக்கள் என்னி டம் சொல்லி இருக்கிறார்கள். அவர்களும் அவன் குடித்ததைப் பார்த்ததில்லை தான். ஆனால், அப் படித்தான் பேசிக் கொள்கிறார்கள். பொது இடத் திலோ, யாரையாவது சந்திக்கப்போகும் போதோ, பெரிய கொண்டாட்டங்களில் கலந்து கொள் ளும் போதோ குடிக்க மாட்டான். வீட்டில்தான் வெளுத்து வாங்குவான். காலையில் எழுந்திருப் பான். கண்களைக் கசக்கிக் கொண்டதும், அவ னுக்கு வரும் முதல் நினைவு வோட்கா தான். அவ னுடைய பணியாள் ஒரு கிளாஸ் கொண்டு வந்து கொடுப்பான். உடனடியாக இன்னும் ஒரு கிளாஸ் கேட்பான். இப்படியே நாள் முழுவதும் ஊத்திக் குடித்துக் கொண்டே இருப்பான். மேலும் ஒரு வேடிக்கையான விஷயத்தை சொல்லட்டுமா, எவ் வளவு குடித்தாலும் தள்ளாட மாட்டான். தன்னை எப்படிக் கவனித்துக் கொள்வது என்று அவனுக் குத் தெரியும். ஆனால் இதற்கு முன்பிருந்த இருந்த எங்கள் கொக்ரிகன்கோவ் குடித்தான் என்றால் மக்கள் மட்டுமல்ல, நாய்கள் கூட ஊளையிடும். ஆனால் பொசுதீன் அப்படி இல்லை. அவனது மூக் குக்கூட சிவக்காது. தன் அலுவலக அறையைச்

சாத்திக்கொண்டு தூங்கிப்போவான். அவனுடைய மேசையில் டியூபுடன் கூடிய பெட்டி ஒன்றை ஏற் பாடு செய்துள்ளான். எதற்காக வைத்துள்ளான் என யாருக்கும் தெரியாது. அப்பெட்டி முழுவதும் வோட்காவைக் கொண்டு நிரப்பியிருப்பான். கீழே குனிந்து அந்த டியூபிலிருந்து உறிஞ்ச வேண்டிய துதான். போதையேறிவிடும். வெளியே வண்டியில் போகும் போது, கையில் வைத்திருக்கும் சிறிய பெட்டியில் கூட வைத்திருப்பான்".

"இது எப்படி அவர்களுக்கு தெரிகிறது ?" என நினைத்த பொசுதீன் ஆச்சரியத்தில் திணறிப் போனான். "அடக்கடவுளே, இது கூட தெரிந்திருக் கிறது. என்ன கொடுமை!" என நினைத்தான்.

"பெண்கள் விஷயத்திலும் அவன் மோச மானவன், எனச் சிரித்தபடியே வண்டியோட்டி தலையை ஒருவிதமாக அசைத்தான். "அநியாயம்! ஆமாம். அவன் பத்து பெண்களை வைத்திருக்கி றான். இரண்டு பேர் அவன் வீட்டிலேயே வசிக்கின் றனர். ஒருத்தி பெயர் நஸ்தாசியா இவாநோவ்னா. வீட்டைப் பராமரிப்பது மாதிரியான வேலைகளுக்கு அவளை வைத்திருக்கிறான். அடுத்தவள்... சனி யன் பிடித்த அவள் பெயர் என்ன? ஆங்! ஆமாம், லியுத்மிலா செமியோநேவ்னா. பெயரளவில், அவ னுடைய தனிச்செயலாளர். இவர்களுக்கெல்லாம் தலைமையானவள் நஸ்தாசியாதான். அவளுக்குப் பெரும் செல்வாக்கு இருக்கிறது. பொசுதீனை விட அவளிடம் தான் மக்கள் அதிகமாகப் பயப்படுவார் கள். ஹா! ஹா! மூன்றாவது மூதேவி, கச்சால்னா வீதியில் வசிக்கிறாள், இது உண்மையிலேயே வெட்கக்கேடானது"

"அவர்களுடையப் பெயர்கள் கூட இவ னுக்குத் தெரிந்திருக்கிறது" என நினைத்த பெசுதீ னின் முகம் வெளுத்துப் போனது.

“இந்த விஷயம் யாருக்குத் தெரிந்திருக்கி றது என்பதை பார்க்கும் போது மிகவும் கேவல மாக இருக்கிறது. ஆமாம், நகரத்துக்கே இது வரை போகாத குடியானவன் ஒருவனுக்கு இந்த விஷயம் தெரியும். எவ்வளவு வெட்கக்கேடாகவும் அருவறுப் பாகவும் இருக்கிறது!”

“இதை எல்லாம் எப்படிக் கண்டுபிடித் தாய்?” என எரிச்சலுடன் கேட்டான் பொசுதீன்.

“மக்கள் என்னிடம் சொல்லி இருக்கிறார் கள். எதையும் என் கண்ணால் பார்க்கவில்லை. ஆனால் பார்த்தவர்கள் மூலம் தெரிந்து கொண் டேன், அதை கண்டுபிடிப்பது என்ன அவ்வ ளவு கடினமா? பணியாள் அல்லது வண்டியோட்டி வாயை யாராலும் மூட முடியாது. நஸ்தாசியாவே கூட தனக்கு வாய்த்திருக்கும் அதிர்ஷ்டத்தைப் பற்றி எல்லா இடத்திலேயும் போய் தம்பட்டமடித் துக் கொண்டிருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. மனி தக் கண்களிலிருந்து யாரும் தப்பி விடமுடியாது. மேலும் ஒரு விஷயம், இந்த பொசுதீன் இப்பொழு தெல்லாம் ஆய்வு செய்யப் போகும் போது, தனக் கென ஒரு பாணி வைத்திருக்கிறான். முன்பெல் லாம், எங்காவது போவது என அவன் முடிவெ டுத்தால், ஒரு மாதத்திற்கு முன்பாகவே அவனது பயணத்தை தெரிவிக்கும் பழக்கம் இருந்தது. அப் படிச் சொல்லிவிட்டு அங்கு போகும் போது, அந்த இடமே அதிரும்; குலுங்கும்; நடுங்கும். கடவுள் தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்! அவனுக்கு முன்னே சிலரும், பின்னால் சிலரும், இரண்டு பக் கமும் சிலரும் குதிரைகளில் அணிவகுத்துச் செல் வார்கள். இடம் வந்தடைந்தவுடன், எல்லோரையும் போல் அவனுக்கும் ஒரு குட்டித் தூக்கம் தேவைப் படும். பிறகு நன்றாகச் சாப்பிடுவான்; குடிப்பான். அதன் பிறகு வந்த அலுவலைக் கவனிக்கத்

தொடங்குவான். தாட்பூட் எனக் கத்திவிட்டு மீண் டும் ஒரு குட்டி தூக்கத்தில் ஆழ்ந்துவிடுவான். பிறகு வந்த வழியே வந்தது போலவே திரும்பி போய் விடுவான். ஆனால், இப்பொழுதெல்லாம் ஏதா வது அவனுடைய காதுக்கு எட்டினால், மின்னல் போல் அங்கு ரகசியமாக போய் இறங்க வேண் டும் என நினைக்கிறான். அப்படி போனால் தான் யாருக்கும் தெரியாது; யாரும் பார்க்க மாட்டார் கள் என்பது அவன் எண்ணம். வேடிக்கை தான்! வீட்டில் இருந்து அதிகாரிகள் யாரு பார்க்காதபடி வண்ணம் ரகசியமாக வெளியேறி ரயிலேறி விடு வான். அவர் போய்ச் சேர வேண்டிய புகைவண்டி நிலையத்தை அடைந்ததும், வாடகைக் குதிரை அல்லது உயர் வகுப்பு வாகனம் என எதை யும் பயன்படுத்தாமல் யாராவது விவசாயி ஒரு வனை வண்டி ஓட்ட அமர்த்திக் கொள்வான். பெண் போல் உடை அணிந்து கொண்டு யாரும் தன் குரலை அடையாளம் காணக்கூடாது என்பதற்காக கிழநாய் போல் வழியெங்கும் உருமிக்கொண்டுடே போவான். இதைப்பற்றி மக்கள் சொல்லும் போது கேட்க வேண்டும். சிரித்துச் சிரித்து வயிறு புண் ணாகி விடும். அந்த கழுதை அப்படி பயணம் செய் யும் போது யாருக்கும் தெரியாது என்று நினைத்துக் கொள்ளும். அறிவு உள்ள எவருக்கும் அவனை அடையாளம் தெரியும்".

"எப்படி அவனை அடையாளம் கண்டு கொள்கிறார்கள்?"

"அது மிகவும் சுலபம். அந்தக் காலத்தில் நம் கொக்ரின்கோவ் பயணம் செய்யும் போது, அவனது பலமான கைகளை வைத்துக் கண்டிபி டிப்போம். வண்டி ஓட்டும் உங்களை வாயில் அடித் தால், அவன் கொக்ரின்கோவ். ஆனால் முதன் முத லாகப் பார்த்த மாத்திரத்திலேயே பொசுதீன்தான்

என்று சொல்லிவிடலாம். சாதாரணமாக பயணம் செய்யும் ஒருவர் அடக்கமாக நடந்து கொள்வார். ஆனால் பொசுதீனுக்கு அடக்கம் என்றால் என் னவென்றே தெரியாது. அலுவல் இல்லத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டான் என வைத்துக்கொள் வோம். அவ்வளவு தான். உடனடியாக ஆரம்பித் துவிடுவான். கடும் வெயிலோ, குளிரோ எப்படி இருந்தாலும் சரி, வெடக்கோழிகள், பழங்கள், ஜாம் வகைகள் என எல்லாவற்றையும் வாங்கி வர ஆள் அனுப்புவான். இப்படித்தான் அவன் அலுவல் இல் லத்தில் இருப்பது தெரிந்து போகும். நல்ல குளிர் காலத்தில், யாராவது வெடக் கோழிகனையும், பழங்கனையும், கேட்டு வந்தால், அது பொசுதீன் என்று தெரிந்துக்கொள்ளலாம். யாராவது மிகவும் கவனமாக, "தம்பி" என அழைத்து, பிறகு முட்டாள் தனமாக எல்லாம் காரியங்களுக்கும் உங்களை விரட்டினால், அது நிச்சயம் பொசுதீன்தான் என நம்பலாம். மேலும், அவனிடம் மற்றவர்கள் போன்ற வாடை வராது. அடுத்ததாக, படுத்து உறங்குவதி லும் அவனுக்கு என ஒரு தனி பாணியைக் கடை பிடிப்பான். அலுவல் இல்லத்தில் தங்கி இருக்கும் போது, சோபாவில் படுத்துக்கொள்வான். தன் மீது வாசனை திரவியத்தை தெளித்துக் கொள்வான். தலையணையின் அருகில் மூன்று மெழுகுவத்தி களை வைக்கும்படி உத்தரவிடுவான். பிறகு படுத் தபடியே செய்தித்தாள்களை வாசித்துக் கொண்டி ருப்பான். மனிதனை விடுங்கள், பூனையை கேட் டால் அந்த ஆள் யார் என்று சொல்லிவிடும்".

"அது சரி தான்" என்று நினைத்த பொசு தீன், "ஏன் இது எனக்கு முன்பே தெரியவில்லை?" என யோசித்தான்.

வண்டியோட்டி தொடர்ந்தான்:

“தேவையானால், பழம், கோழி இவை எது வும் இல்லாமலேயேக் கூட அவனை அடையா ளம் காண முடியும். எல்லாமே டெலிகிராப் மூலம் தெரிந்துபோகும். அவனுடைய முகத்தை மூடிக் கொண்டு தன் விருப்பப்படி எப்படி வேண்டுமா னாலும் மறைந்து கொள்ளலாம். ஆனால், அவன் இங்கு வருகிறான் என்பது அவர்களுக்கு தெரியும். அவன் வருவான் என எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்.

வீட்டிலிருந்து பொசுதீன் கிளம்புவதற்கு வெகு நேரத்துக்கு முன்னதாகவே இங்கு அனைத் தும் அவனுக்குத் தயாராக இருக்க வேண்டும். இங்கு யாரையோ கையும் களவுமாக பிடித்து கைது செய்ய வருகிறானாம். அல்லது யாரையோ விடு தலை செய்ய வருகிறானாம். ஆனால், இங்கு எல் லோரும் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண் டிருக்கிறார்கள். ஆமாம் சார்! நீங்கள் என்னதான் யாரும் எதிர்பாராத விதமாக வந்தாலும், பார்த்தீர் களா, எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனர் எனப் பேசிக்கொள்கிறார்கள். இங்குமங்கும் சுற்றிப் பார்த் துவிட்டு கடைசியில் வந்த வழியே திரும்பிப் போய் விடுவான். ஆமாம், எல்லோரையும் புகழ்ந்துவிட்டு, சுற்றி வந்து எல்லோருடனும் கைகுலுக்கி, எங் களை தொந்தரவு செய்ததற்காக வருத்தம் தெரி விப்பான். அத்தனையும் உண்மை. உங்களுக்கு தெரியாதா சார்? ஹா! ஹா! இங்கிருக்கும் நாங் கள் எல்லோரும் மிகவும் புத்திகூர்மையானவர் கள். ஒருவர் விடாமல் எல்லோரும் விபரமானவர் கள். எத்தகைய எமகாதகர்கள் நாங்கள் என்பதை பார்ப்பதே உற்சாகமாக இருக்கும்.

உதாரணமாக, இன்றைக்கு நடந்ததையே எடுத்துக்கொள்ளுங்கள். யாருமில்லாத வாகனத் துடன் இன்று காலை நான் வந்து கொண்டிருந்த

போது, அந்த உணவு விடுதியின் காப்பாளரான யூதர், என்னை நோக்கி வேகமாக வந்தார். யூத முதலாளி எங்கே போகிறீர்கள்?" என கேட்டேன்.

கொஞ்சம் மதுவும் நொறுக்குத்தீனியும் 'நா' என்று தொடங்கும் அந்த நகருக்கு கொண்டு செல்கிறேன் என பதிலளித்தார். அங்கு பொசு தீன் வருவான் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சாமார்த்தியம் தானே? பொசுதீன் பாவம், இப்பொ ழுது தான் புறப்படத் தயாராகிக் கொண்டிருப்பான் ஒரு வேளை, யாரும் அடையாளம் காண முடி யாதபடி முகத்தை மறைத்துக் கொண்டிருக்கும் வேலையில் மும்முரமாயிருப்பான். அல்லது, தான் வருவது யாருக்கும் தெரியாது என நினைத்தவாறு பாதி வழியில் வந்து கொண்டிருப்பான். எனினும், மது, மீன், வெண்ணெய் என அவனுக்காக எல் லாம் தயாராக இருக்கின்றன. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இதோ, பிள்ளைகளே, இப்பொழுது உங்களை பிடிக்கப் போகிறேன்" என நினைத்துக்கொண்டு அவன் வாகனத்தில் வரு வான். ஆனால், அந்த பிள்ளைகளோ அவனைப் பெரிதாக பொருட்படுத்தவில்லை. வெகு நேரத் துக்கு முன்பே அவர்கள் எல்லாவற்றையும் மறைத் துவிட்டார்கள்.

"வண்டியை திருப்பு" என பொசுதீன் கோப மாக கத்தினான். முண்டமே! பேசாமல் வண்டியை திருப்பி புறப்பட்ட இடத்துக்கே ஓட்டு! என மீண்டும் கூச்சல் போட்டான்.

ஒன்றும் புரியாமல் விழித்தவன் வண்டியை திருப்பி வந்த வழியே ஓட்டத் தொடங்கினான்.

****

இக்கதை முதன்முதலில்
ஃபிராக்மென்ட்சம் என்னும் பத்திரிக்கையில்
டிசம்பர் 1885 இல் வெளியானது.

10. அசடு

ஒருநாள், என் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளும் யூலியா வசிலீவ்னாவை என் அலுவ லக அறைக்கு வரும்படி அழைத்தேன். எங்களுக் குள் கலந்து பேசி கணக்குத் தீர்க்க வேண்டியிருந் தது.

“வா. உட்கார் யூலியா. நமக்குள் இருக்கும் கணக்கை நேர் செய்து விடுவோம். உனக்கு நிச் சயம் பணம் தேவைப்படும். எனக்குத் தெரியும், பணம் கேட்க நீ நிறைய சம்பிரதாயம் வைத்திருப் பாய். எனவே, எப்போதும் உன் கூலியை நீயாகக் கேட்கமாட்டாய். சரி. போகட்டும். மாதம் முப்பது ரூபிள் என்பது நமக்குள் பேசி முடித்துக் கொண்ட சம்பளம்”.

“நாற்பது”.

“இல்லை .முப்பதுதான் .நான் எழுதிவைத்தி ருக்கிறேன். நான் எப்பொழுதுமே என் பிள்ளை களைக் கவனித்துக்கொள்பவர்களுக்கு முப்பது தான் கொடுப்பது வழக்கம். நீ இங்கு வந்து தங்கி இரண்டு மாதமாகிறது”.

“இரண்டு மாதம் ஐந்து நாள்”.

“சரியாக இரண்டு மாதம் .அப்படித்தான் நான் எழு திவைத்திருக்கிறேன். அப்படியானால், உனக்கு அறுபது ரூபிள்கள் சேர வேண்டியிருக்கிறது. அதில் ஒன்பது ஞாயிற்றுக்கிழமைகளைக் கழித்துவிடு. ஞாயிற்றுக்கிழமைகளில், கோல்யாவுக்கு நீ பாடம் சொல்லித்தருவதில்லை. அவளுடன் வெறுமனே நடைபயிற்சிக்கு மட்டுமே போய் வருவாய். பிறகு தேவாலயத்துக்கான மூன்று விடுமுறை நாட்கள்...”

யூலியா வசிலீவ்னாவின் முகம் சிவந்துவிட் டது. பதற்றத்தில் தான் அணிந்திருந்த உடையின் மடிப்புகளை இழுப்பதும் விடுவதுமாக இருந்தாள்.

ஆனால், ஒரு வார்த்தையும் அவள் வாயிலிருந்து வரவில்லை.

“மூன்று விடுமுறை நாட்கள். எனவே, பன்னிரண்டு ரூபிள்கள் கிடையாது. கோல்யாவுக்கு நான்கு நாட்கள் உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் பாடம் எதுவும் படிக்கவில்லை. வார்யாவை மட்டுமே நீ கவனித்துக் கொண்டாய். உனக்கு மூன்று நாட்கள் பல் வலி இருந்தது. அதனால், பகல் உணவு முடிந்ததும் என் மனைவி உன்னை அனுப்பிவிட்டாள். பன்னிரண்டும் ஏழும் பத்தொன்பது ஆகிறது. அப்படியென்றால், மீதி நாற்பத்து ஒன்று ரூபிள்கள். சரியா?”

யூலியா வசிலீவ்னாவின் இடது கண் சிவந்து கண்ணீர் ததும்பியது. முகவாய் நடுங்கியது. பதற்றத்தில் இருமல் வந்தது. மூக்கைச் சிந்தினாள். ஆனால், ஒரு வார்த்தையும் வாயிலிருந்து வெளியே வரவில்லை.

“புத்தாண்டு தினத்தன்று ஒரு டீ கப், சாசரை உடைத்துவிட்டாய். அதற்கு இரண்டு ரூபிள்கள் கழித்தாக வேண்டும். அந்த கப் இன்னும் அதிக மதிப்புடையது. அது எங்கள் குடும்ப பாரம்பரியப் பொருள். சரி, போனால் போகட்டும். அடுத்ததாக நீ பொறுப்பாகக் கவனிக்காமல் விட்டதால் கோல்யா மரத்தில் ஏறி தன் கோட்டைக் கிழித்துக்கொண்டான். பத்து ரூபிள்கள் தீர்ந்தது. அதேபோல், உன் அஜாக்கிரதையால் வார்யாவின் ஷூவை வேலைக்காரி திருடிவிட்டாள். எல்லாவற்றின் மீதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டியது உன் கடமை. கை நீட்டிச் சம்பளம் வாங்குகிறாய். எனவே, மேலும் ஐந்து ரூபிள்கள் கழிக்க வேண்டும். ஜனவரி 10 ஆம் தேதி, என்னிடமிருந்து பத்து ரூபிள்கள் கடனாக வாங்கினாய்”.

“இல்லையே” என்று யூலியா வசிலீவ்னா முணுமுணுத்தாள்.

“நான் எழுதி வைத்திருக்கிறேன்”.

“அப்படியானால் சரி....”

“நாற்பத்தி ஒன்றில் முப்பத்து ஏழு போக, மீதம் பதிநான்கு”.

வேலைக்காரப் பெண்ணின் இரண்டு கண்க ளிலும் கண்ணீர். மேலும், வியர்வை மூக்கின்மீது வழிந்தோடியது. பாவம் அப்பெண்.

“நான் ஒருமுறைதான் கடன் வாங்கினேன்” என நடுக்கமான குரலில் சொன்னாள். மேலும் அவள், “உங்கள் மனைவியிடமிருந்து மூன்று ரூபிள்கள் கடன் வாங்கினேன். அவ்வளவுதான். அதற்குமேல் எதுவும் வாங்கவில்லை”, என்றாள்.

“அப்படியா. அதை நான் குறித்து வைக்க வில்லையே”. பதிநான்கில் மூன்று போனால் பதி னொன்று. இதோ உன் பணம். மூன்று.... மூன்று.... மூன்று.... ஒன்று. இன்னும் ஒரு ஒன்று.... இவை எல் லாம் உனக்குத்தான்” என்று சொல்லி, பதினோரு ரூபிள்களை அவளிடம் கொடுத்தேன். அவற்றை எடுத்துக்கொண்டவள், தன் பாக்கட்டுக்குள் நடுங் கும் கைகளால் வைத்துக்கொண்டாள்.

“நன்றி” என மெல்லிய குரலில் சொன்னாள்.

துணுக்குற்று எழுந்த நான், அறையைச் சுற்றி வேகமாக நடக்க ஆரம்பித்தேன். எனக்குக் கடும் கோபம் ஏற்பட்டது.

“எதற்காக நன்றி சொல்கிறாய்?” என்று கேட் டேன்.

“பணத்துக்காக....”.

“ஆனால், நான் உன்னை ஏமாற்றி இருக்கி றேனே .உனக்குத் தெரியாமல் உன் பணத்தைத் திருடிவிட்டேன்! உன்னிடமிருந்து அபகரித்துவிட் டேன்! எதற்காக நன்றி சொல்கிறாய்?”

“நான் வேலை செய்த மற்ற இடங்களில் எனக்குப் பணம் எதுவும் கொடுக்கவில்லையே”.

“சம்பளம் எதுவும் தரவில்லையா? அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. சும்மா உன்னிடம் வேடிக்கையாக நடந்துகொண்டேன். உனக்கு ஒரு கடுமையான பாடம் சொல்லிக்கொடுத்தேன். உனக்குச் சேர வேண்டிய எண்பது ரூபிள்களையும் உனக்குத் தரப்போகிறேன். இதோ இந்த உறையில் தயாராக இருக்கிறது. ஆனால், எனக்கு ஒரு சந்தேகம். ஒரு பெண் எப்படி இவ்வளவு அசடாக இருக்க முடியும்? நீ ஏன் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை? ஏன் எதுவும் பேசவில்லை? கோபப்படாமல் இந்த உலகில் வாழ்ந்துவிடலாம் என்று நினைக்கிறாயா? இந்த அளவு அசடாக இருப்பது என்பது சாத்தியமா?

அவள் கூச்சத்தோடு சிரித்தபோது, “அது சாத்தியம்” என்பது முகத்தில் எழுதியிருந்தது.

நான் கற்றுத் தந்த இத்தகைய கடுமையான பாடத்துக்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டேன். எண்பது ரூபிள்களையும் அவளுக்குக் கொடுத்தபோது மிகவும் ஆச்சரியமடைந்தாள். மிகவும் அடக்கமாக நன்றி கூறிவிட்டு அவள் வெளியே செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த நான், “இந்த உலகில் அடக்கி ஆள்வது சுலபம்” என்று நினைத்துக் கொண்டேன்.

****

இக்கதை 1883 ஆம் ஆண்டு வெளியானது.

11. முதல் வகுப்பு பயணிகள்

முதல் வகுப்பில் பயணம் செய்யும் அந்தப் பெரிய மனிதர், தொடர்வண்டி நிலைய உணவகத் தில் சற்றுமுன்தான் இரவு உணவை முடித்திருந் தார். உள்ளே போயிருந்த ஒய்ன் சற்றே தலைக்கு ஏறுவதைப் போல் உணர்ந்தவர், வசதியான படுக் கையின் மீது படுத்து, கை, கால்களை நீட்டி நிம் மதியாக உறங்க ஆரம்பித்தார். ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கி ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஆகியிருக்காது. விழித்துக் கொண்டு, தன் எதிரில் அமர்ந்திருந்த பயணியைத் தோழமையோடு பார்த்து புன்னகையு டன் பேச்சு கொடுத்தார்.

"என் அப்பா இறந்து விட்டார். ஆனால் அவரு டைய ஆசிர்வாதம் எப்பொழுதும் இருக்கும். இரவு சாப்பாடு முடிந்ததும் யாராவது அடிமைப் பெண் தன் குதிகால்களை சொறிந்து விட வேண்டும். என அப்பா விரும்புவார். அவருடைய பழக்க வழக்கங் கள் எல்லாம் எனக்கும் உண்டு. ஆனால் ஒரே வித்தியாசம். இரவில் சாப்பிட்டு முடித்ததும் என் குதிகால்களுக்கு பதிலாக என் மூளையும் நாக்கும் ஊறல் எடுக்கும். எனவே வயிறு நிறைந்ததும் ஏதா வது வெறும் வாயை மெல்லும் பாவி நான்.

"உங்களிடம் அரட்டையடிக்கட்டுமா?"

"தாராளமாக" என்றார். எதிரில் அமர்ந்திருந்த வர்.

"நல்லதொரு சாப்பாட்டுக்கு பிறகு, ஏதாவது சிறு விஷயம் போதும். பெரிய பெரிய சிந்தனைகள் எல்லாம் என் மண்டையில் வந்து குவியத் தொடங் கும். உதாரணமாக, கொஞ்ச நேரத்துக்கு முன், உணவகத்தின் அருகில் இரண்டு இளைஞர்களை நாம் பார்த்தோமே. அவர்களில் ஒருவன் மற்றொரு

வனிடம் ‘‘நீ அதற்குள் பிரபலமாகிவிட்டாய், என்றும் நிறைய புகழ்வந்து சேரத் தொடங்கிவிட்டது என் றும் பேசிக்கொள்கிறார்களே. பாராட்டுகள்’’ என் றது கேட்டதா? நிச்சயமாக அவர்கள் நடிகர்களா கவோ அல்லது சாதாரணமான நிருபர்களாகவோ இருப்பார்கள். கிடக்கட்டும் விடுங்கள்!. இப்பொ ழுது எனக்கு இந்த விஷயத்தில் சுவாரஸ்யமாக தெரிவது, பிரபலம், புகழ் என்ற சொற்களுக்கு உண்மையில் என்ன அர்த்தம் என்று கண்டுபிடிக்க வேண்டியதுதான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? புஷ்கின்னைப் பொறுத்தவரை, ‘புகழ் என்பது கந் தல் ஆடையில் பளிச்சென்ற நிறத்தில் தெரியும். தையல் ஒட்டு. நாம் எல்லோரும் புஷ்கின் புரிந்து கொண்டபடியே அவரவர் தனிப்பட்ட முறையில் புரிந்து கொண்டோம். ஆனால், இதுவரை யாரும் தெளிவான, தர்க்க ரீதியான விளக்கத்தை அந்தச் சொல்லுக்கு அளிக்கவில்லை. அப்படி யாராவது விளக்கம் தந்தால் நான் அதற்கு எவ்வளவு வேண் டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.’’

‘‘அதைத் தெரிந்து கொள்வதில் அப்படி என்ன அவசியம் உங்களுக்கு?’’ என்று கேட்டார்.. எதிரில் இருந்தவர்.

சிறியதொரு யோசனைக்கு பின், இங்கே கவ னியுங்கள். நமக்கு மட்டும் புகழ் என்பது என்ன என்று தெரிந்து விட்டால் அதை அடையக் கூடிய வழிமுறைகளும் தெரிந்துவிடுமே.’’ என்றார். அந்த பெரிய மனிதர். மேலும் தொடர்ந்த அவர்,

‘‘உங்களிடம் சொல்வதற்கென்ன. இளைஞ னாய் இருந்தபோது, என்னால் முடிந்தவரை எப்ப டியாவது புகழை அடைய வேண்டும். என்று ஏங்கி னேன். சொல்லப்போனால், பிரபலமடைய வேண் டும் என்பது எனக்கு பெரிய மனக்கவலையாக இருந்தது. அதற்காக நான் படித்தேன், வேலை

செய்தேன். பல இரவுகள் விழித்திருந்தேன். உணவை மறந்தேன். கடைசியில் உடல்நிலை யைக் கெடுத்துக் கொண்டேன். இந்த இடத்தில், நான் ஒரு நடுநிலையான நீதிபதியாக சொல்ல முடியும் என்று நினைக்கிறேன். ஆம் புகழடையத் தேவையான அத்தனை விஷயங்களையும் நான் பெற்றிருந்தேன். முதலில், நான் ஒரு அனுபவம் வாய்ந்த பொறியலாளர். ரஷ்யாவில் ஏறக்குறைய இருபது அற்புதமான பாலங்களைக் கட்டியுள் ளேன். நீர் வழங்கும் திட்டத்தை மூன்று நகரங்க ளுக்கு நிறைவேற்றித் தந்துள்ளேன். ரஷ்யா, இங் கிலாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் பணியாற் றியுள்ளேன். இரண்டாவதாக, என் துறை சார்ந்த பல சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளேன். மூன்றாவதாக, சிறுவயது முதலே வேதியியல் மீது எனக்கு ஒரு கண். ஓய்வு நேரத்தில் இந்த அறி வியல் துறையில் நான் செய்த ஆராய்ச்சியில், பல் வேறு கரிம அமிலங்களை பிரித்தெடுக்கும் முறை கள் குறித்து கண்டுபிடித்திருக்கிறேன். எனவே, வெளிநாட்டில் உள்ள அனைத்து பாடப்புத்தகங்க ளிலும் என் பெயரை நீங்கள் காணலாம். இத்தனை காலமும் அரசுப்பணியில் நான் ஒரு அதிகாரியாக இருந்து வந்தேன். ஸ்டேட் கவுன்சிலர் அளவுக்கு பதவி உயர்வு பெற்றேன். என் மீது சிறு களங் கமும் சுமத்த முடியாது. என் தகுதிகள், பணிகள் ஆகியவற்றை பட்டியல் போட்டு உங்கள் பொறு மையைச் சோதிக்க மாட்டேன். நான் ஒன்று மட் டும் சொல்வேன். சில பிரபலங்களை விட நான் பல விஷயங்களை சாதித்துள்ளேன். இருந்தும் என்ன பயன்? ஏற்கனவே எனக்கு வயதாகி விட்டது. சாகத் தயாராகிக் கொண்டிருக்கிறேன். அதாவது, அதோ, ரயில் பாதை ஓரமாக ஓடிவருகிறதே அந்த கருப்பு நாயை எத்தனை பேருக்கு தெரியுமோ அத்தனை பேருக்கு தான் நான் தெரிகிறேன்.

“உங்களுக்கு எப்படி அது தெரியும்? ஒரு வேளை உங்களை நிறைய பேருக்கு தெரிந்திருக் கலாம்”

“உம். அப்படியா. இதோ இப்பொழுதே அதைச் சோதித்துப் பார்த்து விடலாம். சிரிக்குவ்நோவ் என்ற பெயரை எப்பொழுதாவது கேள்விப்பட்டி ருக்கிறீர்களா?”

எதிரில் இருந்தவரின் கண்கள் மேல் தளத்தை நோக்கி, ஒரு கணம் யோசித்தப்பின், சிரித்துக் கொண்டே, “இல்லை நான் கேள்விப் பட்ட தில்லை” என்று பதில் அளித்தார்.

அது என் பெயர் தான். பார்த்தீர்களா. படித்த நடுத்தர வயதுடைய நபரான நீங்கள் இதுவரை என் பெயரைக் கேள்விப் பட்டதில்லை. இதிலி ருந்து நான் கூறியது தெளிவாகிறது. பிரபலமாக நான் என்ன செய்திருக்க வேண்டுமோ அதனைச் செய்யவில்லை என்பது புரிகிறது. நான் சரியான வழியை பின்பற்றவில்லை. புகழை சர்வசாதாரண மாக அடைந்து விடலாம் என்ற அதீத நம்பிக்கை யோடு இருந்த எனக்குத் தோல்வியே கிட்டியது”

“அப்படி என்றால் எது தான் சரியான வழி?”

“யாருக்குத் தெரியும்? நீங்கள் திறமை, அறிவு, தனித்தன்மை, இப்படி சிலவற்றைக் சொல்லிக் கொண்டே போகலாம். இல்லவே இல்லை. என்னு டன் ஒப்பிடும்போது, பயனற்ற, மூளையற்ற, இன் னும் கேட்டால் மோசமான மனிதர்கள் பலர் என் கூடவே வாழ்ந்து பணியாற்றினார்கள். என்னைவிட ஆயிரம் மடங்கு குறைவான வேலையை அவர்கள் செய்தனர். அவர்கள் எதற்கும் அலட்டிக் கொள் ளவில்லை. அவர்களிடம் அசாதாரண திறமைகள் இல்லை. புகழுக்காக அவர்கள் பாடுபடவில்லை. இருந்தாலும் அவர்கள் இப்பொழுது இருக்கும்

நிலையைப் பாருங்கள். இன்னும் மக்கள் அவர் களது பெயர்கள் செய்தித்தாள்களில் வருகின்றன. பேச்சில் அடிப்படுகிறார்கள். உங்களுக்கு சலிப்பாக இல்லை என்றால் நான் அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன்.

"சில ஆண்டுகளுக்கு முன் அந்த 'ச' நக ரத்தில் ஒரு பாலம் கட்டிக் கொண்டிருந்தேன். அந்த சிறிய நகரத்தில் பணியாற்றுவது மிக வும் அலுப்பாக இருக்கும் என்பதை சொல்லியாக வேண்டும். அங்கு இருந்த பெண்கள், சீட்டுக் கட்டு இவை மட்டும் இல்லாமல் போயிருந்தால் எனக்கு பைத்தியமே பிடித்திருக்கும். போகட்டும். இப்பொழுது அது நடந்து முடிந்த கதை. சுருக் கமாக சொன்னால், உள்ளூர்ப் பாடகி ஒருத்தி யுடன் எனக்கு தொடர்பு இருந்தது. எல்லோரும் அவளைப் பார்த்து ஏன் பெரும் பரவசம் அடைந் தனர் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், என்னைப் பொருத்தவரை, எப்படிச் சொல்வது, அவளைப்போல் உலகில் உள்ள நூற்றுக்கணக் கான பெண்களைப் போல், அவள் அதீத திறமை ஏதும் பெற்றிராத சாதாரண, சராசரியான பெண். திடீரென நிதானம் தவறுகின்ற, பேராசை பிடித்த, மூளையில்லாத முட்டாள் பெண். இப்படி சொல் லிக்கொண்டே போகலாம். நிறைய சாப்பிடுவாள். நிறைய குடிப்பாள். மாலை ஐந்து மணி வரை தூங் குவாள். இதுதான் அவள் செய்த சாதனை என்று நினைக்கிறேன். அவள் ஒரு விலைமகள் என்று கருதப்பட்டாள். அதுதான் அவளுடைய தொழில். ஆனால் அவளைப் பற்றி அலங்காரமாக பேச விரும்பியவர்கள் அவளை நடிகை என்றும் பாடகி என்றும் குறிப்பிட்டனர். அந்த காலத்தில் நாட கங்களை நான் ஆராதித்து வந்தேன். அதனால் தான், அந்த ஏமாற்றுப்பேர்வழி 'நடிகை' என்ற பட் டத்தை தவறாக பயன்படுத்தியது, எனக்கு மிக

வும் கோபத்தை உண்டாக்கியது. அந்த வாயாடிப் பெண்ணுக்கு 'நடிகை' என்றோ, 'பாடகி' என்றோ அழைத்துக்கொள்ள எந்த உரிமையும் இல்லை. திறமை, உணர்வுகள் என எல்லாவற்றிலும் பற் றாக்குறையுடைய ஒரு ஜந்து அவள். பரிதாபத் துக்குரிய பெண் என்று கூட சொல்லலாம். என் கணிப்புப்படி, அவளுடைய "கலை" அந்த அளவு கவர்ச்சியாக இருப்பதற்குக் காரணம் எப்பொழுது ஒரு காலைக் குலுக்க வேண்டும் என்று அவ ளுக்கு தெரியும், என்பதோடு அவளுடைய ஒப் பனை அறைக்கு பெரிய மனிதர்களான ரசிகர்கள் வரும்போது அவளிடம் நாணம் இருக்காது. பொது வாக மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களையும் பலசு வைக் காட்சிகளையும் தேர்ந்தெடுப்பதை வழக்க மாக வைத்திருந்தாள். ஒரு இளைஞனைப் போல் அலங்கரித்துக் கொண்டு தன் உடல் அமைப்பை இறுக்கமான உடைகள் மூலம் காட்டக்கூடிய பகு திகளைத் தேர்ந்தெடுப்பாள். ஒரே வார்த்தையில் சொன்னால், "அருவருப்பு" சரி இப்பொழுது நான் சொல்வதை கவனமாக கேளுங்கள்.

நேற்றுதான் நடந்ததுபோல் அந்த புதியதாய் கட்டப்பட்ட பாலத்தின் திறப்பு... விழா அத்தனை நன்றாக எனக்கு நினைவிருக்கிறது. நன்றி தெரி விக்கும் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகியிருந்தது. அது தொடர்பாக உரைகள், தந்திகள், இதர விஷயங் கள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன. எங்கே என் இதயம், புகழினாலும் ஆர்வத்தினாலும் விம்மி வெடித்து விடுமோ என்ற பயத்தோடு என் படைப்பை அடிக்கடிச் சென்று பார்த்து வருவேன். எல்லாம் நடந்து முடிந்த கதை. எனவே, ஏன் இன்னும் தன்னடக்கத்தோடு குறிப்பிட வேண்டும். ஆமாம், அந்த பாலம் ஓர் அற்புதமான படைப்பு என்பதை சொல்லி விடுகிறேன். பாலத்தின் காட்சி கண்களுக்கு விருந்து! திறப்பு விழாவுக்கு ஒட்டு

மொத்த நகரமே திரண்டு வந்தது என்றால் அதில் ஆச்சர்யப்பட என்ன இருக்கிறது! சரி, இப்பொழுது மக்கள் அனைவரது பார்வையும் என் மீது தான் என்று நான் நினைத்து கொண்டிருந்தேன். எங் காவது ஒளிந்துக் கொள்ளலாமா என்று நினைத் தேன். நான் அதிகம் கவலைப்பட்டிருக்க வேண் டாம். அங்கிருந்த அதிகாரிகளைத் தவிர, வேறு யாரும் என்னை ஏறெடுத்துக்கூட பார்க்கவில்லை. கரையோரத்தில் குழுமியிருந்த மக்கள் அதைக் கட்டியவனைப் பற்றி சிறிதும் எண்ணிப்பார்க்கா மல் அர்த்தமின்றி அந்த பாலத்தையே வெறித் துப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த நொடி யிலிருந்து பெரும் அளவில் குவிந்திருந்த இந்த மதிப்புக்குறிய பொது மக்களை நான் வெறுக் கத் தொடங்கினேன். போகட்டும் அடுத்து என்ன நடந்தது என்று பாருங்கள். திடீரென கூட்டத்தில் ஒரு சலசலப்பு எல்லோரும் தங்களுக்குள் கிசுகிசு வென பேசிக்கொண்டனர். மக்கள் முகத்தில் சிறு புன்னகையுடன் முன் பகுதிக்கு செல்ல ஆரம்பித்த னர். என்னை அடையாளம் கண்டு கொண்டு விட் டார்கள் என்று எனக்குள் வேகமாக முடிவு செய் தேன். ஆர்வத்துடன் பார்த்தேன். நான் தொடர்பு வைத்திருந்த அந்த பாடகிதான் கூட்டத்தை விலக் கிக் கொண்டு வருகிறாள். அவளுக்கு பின்னால் சோம்பேறிகள் கூட்டம் ஒன்று வருகிறது. அவளைப் பார்க்க கருத்துகளை நீட்டிக்கொண்டு வரும் மக் களின் கூட்டம்தான் அது. நூற்றுக்கணக்கான மக் கள் முணுமுணுக்கும் சப்தம் கேட்டது. “அது யார் தெரிகிறதாபார், என்ன அழகு! இந்த இடத்தில் என்னையும் அடையாளம் கண்டு கொண்டார்கள். வெட்டியாகத் திரியும் இரண்டு பேர் உள்ளூர் நாடக ரசிகர்களாக இருக்க வேண்டும். என்னைப் பார்த் தார்கள். தங்களுக்குள் பார்வைகளைப் பறிமாறிய பின் என்னைக் காட்டி, “அவர் அவளுடைய காத

லர்” என்றார்கள். இது உங்களுக்கு பிடிக்குமா? அடுத்து, மழிக்கப்படாத நீண்ட முகத்துடன், பட்டுத் தொப்பி அணிந்த ஒரு மட்டமான நபர். என பின் னால் சிறிது நேரமாக நின்று கொண்டிருந்த அந்த ஆள் என் பக்கம் திரும்பி,

“அந்த கரைக்கு நடந்து போகிறாளே அந்தப் பெண் யார் என்று உங்களுக்கு தெரியுமா? அவள் தான் மிஸ்... அவளுடைய குரல் சகிக்காது. ஆனால் அதை அவள் அற்புதமாகக் கையாள்வாள்” என் றான்.

அந்த மட்டரகமான நபரைப் பார்த்து நான் ஒரு கேள்வி கேட்டேன்.

“சரி, இந்த பாலத்தைக் கட்டியது யார் தெரி யுமா?”

“உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் தெரியாது. ஏதோ ஒரு எஞ்சினியர்...”

“உங்கள் நகரில் உள்ள தேவாலயத்தைக் கட் டியது யார் என்றாவது தெரியுமா?”

“அதையும் என்னால் சொல்ல முடியாது!

பிறகு அந்த ஆளிடம், அந்த நகரின் சிறந்த ஆசிரியர், சிறந்த கட்டடக் கலைஞர் யார் என்றெல் லாம் கேட்டேன். நான் கேட்ட அத்தனை கேள்விக ளுக்கும் ‘தெரியாது’ ! என்றே அந்த மட்டமான நபர் பதில் அளித்தான்.

அதன் பின், அந்த நபரிடம்,

“அந்த பாடகியின் தற்போதைய காதலர் யார் என்று சொல்ல முடியுமா?” என்று கேட்டு வைத் தேன்.

“யாரோ எஞ்சினியராம். கிரிக்கிநோவ் என்று ஏதோ பெயர்” என்று பதில் வந்தது.

"பார்த்தீர்களா. இது உங்களுக்கு பிடிக்குமா. இத்தோடு கதை முடிவதில்லை. அந்த காலம் போல் மன்னர்களைப் போற்றிப் பாடும் அரசவைக் கவிஞர்களோ, புலவர்களோ இப்போது இல்லை. பெரும்பாலும் ஊடகங்களால் தான் பிரபலங்கள் உருவாக்கப்படுகின்றனர். எனவே அந்த நிகழ்ச்சி முடிந்த அடுத்த நாள் காலை, உள்ளூரில் வெளி வரும் 'ஹெரால்ட்' செய்தித்தாளை ஆவலோடு பிரித்து என்னைப்பற்றி என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தேன். அந்த நான்கு பக்கங்களை யும் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுத் தேடி னேன். வெற்றி! ஒரு வழியாக கண்டுபிடித்துவிட் டேன். இதுதான் அதில் வெளியாகி இருந்தது. "புதிய பாலத்தின் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று வெய்யிலோடு நல்ல வானிலை நிலவ, நன்றாக நடந்தேறியது. மேதகு ஆளுநரும் இதர அதிகாரி களும் கலந்துகொண்டனர். உள்ளூர் மக்கள் திர ளாக வந்து நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இறுதியில், "வசீகரமும் இளமையும் அழகும் கொண்டவரும், நம் பொதுமக்களால் பெரிதும் விரும்பப்படுபவரு மான நம் திறமை வாய்ந்த நடிகையான மிஸ் எக்ஸ். மேற்படியான நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் அங்கு வந்த நேரத்தில் பெரும்பரபரப்பு ஏற் பட்டது என்பது எதிர்பார்த்ததுதான். அந்த நட்சத் திரம் அணிந்திருந்த ஆடை..." இப்படி என்ன என் னவோ அடுக்கிக்கொண்டு போனார்கள். அதில் என்னைப்பற்றி ஒரு வார்த்தைக் கூட இல்லை. அவ்வளவு ஏன் அரை வார்த்தை கூட இல்லை. நான் அவ்வளவு முக்கியமானவனாக இல்லா மல் இருக்கலாம். ஆனால் நம்பினால் நம்புங்கள். வெளிப்படுத்த இயலாத கோபத்தினால் எனக்கு கண்களில் நீர் முட்டியது.

"சிறிய நகரங்கள் பேதமைகளுக்கு பேர் போனவை. இதைவிட வேறு எதையும் அங்கு எதிர்

பார்க்க முடியாது. அறிவு மையங்களான தலைநக ரங்களில்தான் புகழை நாம் தேட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அந்த நேரம் பார்த்து, செயின்ட் பீட்டர்ஸ்பெர்கில் நடைபெறவிருந்த போட்டி ஒன் றில் என் பணியைப் பதிந்து வைத்திருந்தேன். போட்டிக்கான நாளும் நெருங்கிக் கொண்டிருந் தது.

''எனவே இந்த சிறிய நகருக்கு முழுக்கு போட் டுவிட்டு செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்குக்கு புறப்பட் டேன். 'க' நகரில் இருந்து செயின்ட் பீட்டர்ஸ் பெர்க்கு செல்ல நீண்ட நேரம் பயணம் செய்தாக வேண்டும். பயண அலுப்பைச் சிறிது குறைக்க எனக்கென தனி பெட்டியை முன்பதிவு செய்த தோடு சந்தேகமென்ன, என் பாடகியையும் உடன் அழைத்து சென்றேன். வழி நெடுக நாங்கள் சாப் பிட்டோம். ஷம்பாஞ் அருந்தினோம். உற்சாகமாக பொழுதைக் கழித்தோம். அந்த அறிவு மையத்தை நெருங்கிக் கொண்டிருந்தோம். போட்டி நடந்த நாள் அன்று அங்கு போய் சேர்ந்த நான், என் வெற்றியை கொண்டாடும் திருப்தியைப் பெற்றேன். ஏனெனில் என்னுடைய பணிக்குத்தான் முதல் பரிசு கிடைத்தது. வெற்றி! அடுத்த நாள் அதிகா லையிலேயே வெளியே போய் எழுபது கோபெக் மதிப்புள்ள செய்தித்தாள்களை வாங்கினேன். வேகவேகமாக நான் தங்கியிருந்த விடுதிக்கு திரும்பி வந்து சோபாவில் உட்கார்ந்தேன். என் கை நடுக்கத்தை எல்லாம் பெருமுயற்சி செய்து கட்டுப் படுத்திக்கொண்டு செய்தித்தாள்களை அவசரமா கப் புரட்டிப்பார்த்தேன்.

முதல் செய்தித்தாளை நன்றாக துழாவிப் பார்த் தேன். ஒன்றுமில்லை. அடுத்ததையும் ஊன்றிப் பார்த்தேன். ஒரு வார்த்தை இல்லை. ஒரு வழியாக,

நான்காவது செய்தித்தாளில் நான் கண்ட செய்தி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''சிறிய நகரத்தில் வசிக்கும் பிரபல நடிகையான மிஸ் 'எக்ஸ்'..., 'க' நகரத்திலிருந்து எக்ஸ்பிரஸ் ரயிலில் நேற்று வந்து சேர்ந்தார். தெற்கத்திய பருவநிலை, அவருடைய அழகிய தோற்றம் மற்றும் மேடையில் தோன்றிய வசீகரம் ஆகியவற்றுக்கு சாதகமாக இருந்தது என்பதை குறிப்பிட்டு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்...'' அதில் கூறப்பட்டிருந்த மற்ற விஷயங்கள் எனக்கு நினைவில் இல்லை. இந்த செய்திக்குறிப்பின் கீழ் சுருக்கமான முறையில் வெளியாகியிருந்த வரியை வாசித்தேன். ''நேற்றைய போட்டியில், முதல் பரிசு பொறியியலாளர் இன்னாருக்கு அளிக்கப்பட்டது''. அவ்வளவுதான். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல், என் பெயரையும் கிரிக்கிநோவுக்கு பதிலாக கிர்கிநோவ் என்று தவறாக அச்சிட்டிருந்தார்கள். அறிவு மையத்தின் நிலையும் இதுதான். இத்துடன் விஷயம் முடிந்துவிடவில்லை. செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கிலிருந்து ஒரு மாதம் கழித்து நான் புறப்பட்டபோது, அத்தனை செய்தித்தாள்களும் தங்கள் 'ஈடு இணையற்ற, தெய்வீகமான, திறமைவாய்ந்த' நடிகை குறித்து சிலாகித்ததோடு, வெறுமனே மிஸ் மேற்படியார் என்று போடாமல், என் ஆசை நாயகியின் பெயர், குடும்பப்பெயர் அத்தனையும் கூற ஆரம்பித்துவிட்டார்கள்.

''இந்த சம்பவம் நடந்து சில ஆண்டுகள் கழித்து நான் மாஸ்கோவுக்குச் சென்றேன். கடந்து நூறு ஆண்டுகளாக செய்தித்தாள்களில் பெரும் விவாதப் பொருளாக இருக்கும் ஒரு விஷயம் குறித்து பேசவருமாறு தனிப்பட்ட முறையில் மேயரிடமிருந்து எனக்கு கடிதம் வந்தது. ஓய்வு நேரத்தில் அங்கிருந்த அருங்காட்சியகம் ஒன்றில் பொதுமக்

களுக்காக ஐந்து உரைகள் நிகழ்த்தினேன். அவற் றில் கிடைத்த தொகையை பொது சேவை நிதிக்கு அளிக்குமாறு கேட்டுக் கொண்டேன். அந்த நக ரில் மூன்று நாட்களில் ஒருவர் புகழ் அடைய இது போதுமானதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் அல்லவா? அதுதான் இல்லை. என்னைப்பற்றி எழுத மாஸ்கோவின் எந்த பத் திரிக்கைக்கும் ஒரு வார்த்தை கூட கிடைக்க வில்லை. அவர்கள் பலவற்றையும் எழுதினார்கள். தீ, ஒப்பேரா நாடகம், தூங்கும் மக்களவை உறுப் பினர்கள், போதையில் உள்ள வியாபாரிகள்- இப் படி இந்த பூமியில் உள்ள அனைத்து விஷயங்க ளைப் பற்றியும் எழுதினார்கள். ஆனால், என் திட் டம் குறித்தோ, என் உரைகள் குறித்தோ ஒரு வரி இல்லை! அட என் அருமை மாஸ்கோ மக்களே!

குதிரை பூட்டிய டிராம் வண்டியில் சென்று கொண்டிருக்கிறோம். அந்த வாகனம், பெண்கள், அதிகாரிகள், மாணவ, மாணவிகள் என பெரிய கப் பல் போல் நிறைந்து இருந்தது.

அந்த வாகனத்தில் உள்ள அனைவருக்கும் கேட்கும்படி சத்தமாக என் பக்கத்தில் இருந்த ஒரு வரிடம் பேசினேன்.

“இப்படி ஒரு விஷயம் குறித்து விவாதிப்பதற் காக மேயர் துய்மா ஒரு எஞ்சினியரை வரவழைத் திருக்கிறார் என்று பேசிக் கொள்கிறார்களே உங்க ளுக்கு அவர் பெயர் தெரியுமா?”

பக்கத்து நபர் தெரியாது என்று தலையை ஆட் டினான். மீதம் இருந்தப் பயணிகள் என்னைப் பார்த்த பார்வையிலேயே, ‘எனக்கு தெரியாது’ என்று எழுதி ஒட்டியிருந்தது.

“யாரோ ஒரு அறிஞர் அந்த அருங்காட்சிய கத்தில் தொடர் உரைகள் நிகழ்த்துவதாக பேசிக்

கொள்கிறார்கள். கேட்க சுவையான உரைகளாம்” என்று எப்படியாவது உரையாடலைத் தொடங்க லாம் என்ற முயற்சியில் விடாமல் பேசினேன்.

“யாரும் தலையைக் கூட அசைக்கவில்லை. அங்கிருந்த ஆண்களில் சிலர் மட்டும் என் உரை களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. பெண்களுக்கோ அப்படி ஒரு அருங் காட்சியகம் இருந்தது கூட தெரியவில்லை. அதற் காக கூட அவர்களை அவ்வளவு மோசமாக நான் நினைக்கவில்லை. அதன் பின்னர் ஒரு சம்பவத் தில் அவர்கள் காட்டிய ஆர்வம் தான் என்னை அப் படி எண்ண வைத்தது. பயணிகள் அனைவரும் எழுந்து ஜன்னல் அருகில் போய் கூடி நின்றனர். என்ன ஆயிற்று? ஏன் இந்த பரபரப்பு?

“பாருங்கள். அதோ பாருங்கள். கருப்பு முடியு டன் வண்டிக்குள் ஏறும் அந்த நபரைப் பாருங்கள். தெரிகிறதா? அவர்தான் கிங், பிரபல நடைப் போட் டியின் சாம்பியன்”

மாஸ்கோ மக்கள் மக்களை பெரிதும் ஆக்கி ரமித்திருந்த அந்த போட்டி குறித்து வாகனத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஆர்வத்தோடு பேசத் தொடங்கினார்கள்.

இப்படி பல சம்பவங்களை நான் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் போதுமான அளவு சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன். சரி, என் னைப் பற்றி நான் கொண்டிருந்த கணிப்பு தவறு என்றே வைத்துக் கொள்வோம். அதாவது, நான் வெறுமனே ஒரு தற்பெருமைக்காரனாகவோ கண் டுகொள்ள வேண்டிய தகுதியற்றவனாகவோ கூட இருக்கட்டும். என்னைப்போல் பல குறிப்பிடத்தக்க திறமைகளையும் வேலையில் முனைப்பையும் கொண்ட சக மனிதர்கள் பலருடையப் பெயர்களை என்னால் கூற முடியும். உதாரணத்திற்கு, நம் ரஷ்ய

கடல்வீரர்கள், வேதியியலாளர்கள், இயற்பியலாளர்கள், பொறியியலாளர்கள், விவசாயிகள் இவர்களை எண்ணிப்பாருங்கள். இவர்கள் எல்லாம் புகழ் பெற்றவர்களா இல்லையா? ரஷ்யாவின் ஓவியர்கள், சிற்பிகள், எழுத்தாளர்கள் எல்லோரையும் படித்த மக்களுக்கு தெரியுமா? இலக்கியத்தில் பழுத்த அனுபவம் உடைய ஒருவர், கடின உழைப்பும், திறமையும் கொண்ட அவர் முப்பத்து மூன்று ஆண்டுகளாக பல பதிப்பாளர்களின் வாயில்களில் சுற்றிக் கொண்டிருப்பவர். குறைந்தது இருபது முறையாவது மானநஷ்ட வழக்கு தொடரப்பட்டவர். இருப்பினும், அவர் நிலை எதுவும் மாறாமல் அதே இடத்தில் தான் இருக்கிறார். யாராவது ஒரு எழுத்தாளர் பெயரைச் சொல்லுங்கள் பார்க்கலாம். ஏதாவது கைகலப்பில் கொல்லப்படுவதற்கு முன்போ, பைத்தியமாக போவதற்கு முன்போ, நாடு கடத்தப்படுவதற்கு முன்போ, சீட்டாட்டத்தில் ஏமாற்றி மாட்டிக்கொள்வதற்கு முன்போ அவர் பிரபலமாகி இருக்கிறாரா என்று சொல்லுங்கள்”.

புகைத்துக் கொண்டிருந்த சுருட்டு கீழே விழும் அளவுக்கு அவர் கோபத்தின் உச்சியில் இருந்தார்.

“ஆமாம் சார். இதற்கு இணையாக நான் சில நூற்றுக்கணக்கான பெயர்களைச் சொல்கிறேன். எல்லோரும் குழுப்பாடகர்கள், கழைக்கூத்தாடிகள், கோமாளிகள் இவர்களது பெயர்கள் குழந்தைகளுக்கு கூடத் தெரியும். அங்குதான் பிரச்சனையே” என்று தொடர்ந்து கோபமாக பொரிந்து தள்ளினார்.

அப்போது கதவு திறந்தது. குளிர்ந்த காற்று வந்தது. கூடவே, சோகமான முகத்துடன் ஒருவர் உள்ளே நுழைந்தார். ஓவர் கோட், பட்டுத் தொப்பியுடன், நீலநிறக் கண்ணாடி அணிந்திருந்தார். அங்

கிருந்த இருக்கைகளைப் பார்த்தார். முகஞ்சுளித் துவிட்டு வந்தவழியே சென்றுவிட்டார்.

"அதோ போகிறானே, யார் என்று தெரிகிறதா? அவன் தான் தூலாவின் சீட்டாட்டத்தில் ஏமாற்று வதில் பேர் பெற்றவன். அந்த வங்கி சம்பவத்தி லும் தொடர்புடையவன்" என்று அந்த மூளையில் இருந்த ஒருவன் ரகசியமாக முணுமுணுத்தான்.

பார்த்தீர்களா? என்று சிரித்துவிட்டு, "துலாவின் சீட்டாட்ட ஏமாற்றுப் பேர்வழியைத் தெரிந்திருக் கிறது. ஆனால், இவனிடம் செமிராட்ஸ்கி என்ற கலைஞரைப் பற்றியோ, கவிஞர் சாய்கோஸ்கி குறித்தோ, தத்துவவியலாளர் சொலோவியேவ் யார் என்றோ கேட்டிருந்தால் 'தெரியாது!' என்று தான் தலையை ஆட்டுவான். வெறுத்துப் போகி றது!.." என்றார் கிரிக்கிநோவ்.

மூன்று நிமிடங்கள் மௌனமாக கழிந்தன.

அடக்கமாக செருமிக்கொண்டு, எதிரில் இருந் தவர்,

"சார், 'நான் ஒரு கேள்வி உங்களிடம் கேட்க லாமா? புஸ்கோவ் என்ற பெயரை கேள்விப் பட்டி ருக்கிறீர்களா?"

"யார்? புஸ்கோவ்? யோசித்துப் பார்க்கிறேன். புஷ்கோவ்....ம் இல்லை. புஷ்கோவ் என்று யாரை யும் எனக்கு தெரியாது".

"அது என் பெயர்தான்" என்று எதிரில் இருந் தவர் அடக்கத்தோடு கூறினார். மேலும் அவர், "அதாவது உங்களுக்கு இந்த பெயரைத் தெரியாது. இத்தனைக்கும் நான் ரஷ்யாவில் உள்ள ஒரு பல் கலைக் கழகத்தில் பேராசிரியராக முப்பத்து ஐந்து ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். அகாடமி

யின் உறுப்பினராகவும் இருக்கிறேன். நான் பல புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறேன்.

ஒருவரையொருவர் அர்த்தபுஷ்டியோடு பார்த்துக்கொண்ட பின், இருவரும் பலமாகச் சிரித்தனர்.

****

இக்கதை 1886 ஆம் ஆண்டு வெளியானது.

12. ராஜதந்திரி

கீழ்நிலை அதிகாரி ஒருவரின் மனைவியான அன்னா கிவோனா குவால்டினாவின் ஆவி அடங்கியது. குடும்பத்தினர் ஒன்று கூடினர். "இப்பொழுது நாம் என்ன செய்யலாம்?" என்று உறவினர்கள் யோசிக்கத் தொடங்கினர். "கணவனுக்குத் தகவல் தெரிவித்தாக வேண்டும். அவன் இவளோடு சேர்ந்து வாழாமல் இருக்கலாம். ஆனால் இறந்து போன இவள் மீது அவனுக்கு எப்பொழுதும் பிரியம் இருந்தது. அன்று ஒருநாள் அவன் இங்கு வந்து இவளைப் பார்த்தபோது, அருகில் சென்று மண்டியிட்டு, "அன்னா! தற்செயலாக விளைந்த மோகத்தால் நிகழ்ந்த தவறுக்காக என்னை எப்பொழுது மன்னிப்பாய்?" என்று அவன் புலம்பவில்லையா! இது சகஜம் என்பது தான் உங்களுக்கு தெரியாதா? அவனுக்குத் தகவல் சொல்லியாக வேண்டும்..." என்று முடிவெடுத்தனர்.

அங்கிருந்த அரிஸ்தார்க் இவானோவிச்சிடம், குடும்ப உறுப்பினர்களில் அழுதபடியே இருந்த அத்தை ஒரு கோரிக்கை வைத்தார். "அரிஸ்தார்க்கா! நீ மிக்கேயில் பெத்ரோவிச்சின் நண்பன். எங்களுக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும். அவன் வேலை பார்க்கும் ரயில்வே தலைமை அலுவலகத்திற்குச் சென்று இந்த துக்கச் செய்தியை அவனிடம் சொல்லிவிட்டு வா. செய்தியைப் பக்குவமாக வெளியிடு. தம்பி, திடீரென அவனுக்கு எதுவும் நேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள். அவன் மிகவும் உணர்ச்சி வசப்படக் கூடியவன். இந்தச் செய்தியை ஏற்றுக்கொள்ளும்படி அவனை முதலில் தயார் செய். அதன் பிறகு..."

தன் இராணுவத் தொப்பியை அணிந்து கொண்ட தளபதி அரிஸ்தார்க், ரயில்வே தலைமை அலுவலகத்திற்குப் புறப்பட்டுச் சென்றான். மனை

வியை இழந்த நபர், வரவு செலவுக் கணக் குகளைச் சரிபார்த்துக் கொண்டிப்பது தெரிந்தது. அவன் மேசை அருகில் அமர்ந்து, வியர்வையைத் துடைத்துக் கொண்டான். மெதுவாக அவனிடம் பேச ஆரம்பித்தான்.

"மிக்கேயில் பெட்ரோவிச்! கடவுளே! தெருக் கள் என்னமாய் புழுதியாக இருக்கின்றன! நீ எழுது... நிறுத்தாதே. எழுதிக் கொண்டிரு... உனக்கு நான் இடையூறாக இருக்க மாட்டேன். சும்மா கொஞ்சம் நேரம் இங்கு உட்கார்ந்து விட்டு போய் விடுவேன். இந்தப் பக்கமாகப் போக ஒரு வேலை இருந்தது. சரி, நம் மிக்கா இங்கு தானே வேலை பார்க்கிறான் என்ற நினைப்பு வரவே இப் படி வந்தேன்! சிறிது நேரம் உன்னைப் பார்த்து விட் டுப் போகலாம் என்று நினைத்தேன். அத்துடன், ஒரு சின்ன விஷயம்..." என்று இழுத்தார்.

"அரிஸ்தார்க், கொஞ்சம் அப்படி உட்கார். இன்னும் ஒரு கால் மணி நேரத்தில் வேலையை முடித்து விடுவேன். பிறகு நாம் பேசிக் கொண்டி ருக்கலாம்."

"நீ உன் எழுதும் வேலையைப் பார். ஏதோ இந்தப் பக்கமாக வரும்படி ஆகிவிட்டது. ஒருசில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு உடனே கிளம்பி விடுவேன்." என்றான்.

குவாட்டின் பேனாவை வைத்துவிட்டு, அவனு டைய நண்பன் பேசுவதைக் கவனிக்க ஆரம்பித் தான். தளபதி பிஸ்காரேவ் சட்டைக் காலரின் பின் பகுதியைச் சொறிந்துவிட்டுத் தொடர்ந்தான்.

"இங்கு உள்ளே ஒரே புழுக்கமாக இருக்கி றது. ஆனால், வெளியே உண்மையில் சொர்க் கம்தான். நல்ல வெய்யில். என்ன ஒரு இனிமை யான காற்று. பறவைகள்.. வசந்தகாலம்... அதாவது

அந்த நெடுஞ்சாலை வழியாக நடக்கும்போது அவ் வளவு ரம்மியமாக இருக்கிறது தெரியுமா! நான் சுதந்திரமானவன். மனைவியை இழந்தவன். நான் நினைத்த இடத்துக்குப் போகலாம். விரும்பினால், மதுக் கூடத்துக்குள் போகலாம். நினைத்தால், குதிரை வண்டியில் ஏறி குறுக்கும் நெடுக்குமா கச் சவாரி செய்யலாம். யாரும் என்னைக் கேட்க முடியாது. வீட்டுக்கு வந்தால் யாரும் என்னைக் கேட்க முடியாது. வீட்டுக்கு வந்தால் யாரும் என் னைக் திட்ட மாட்டார்கள். இங்கே பார். இப்படி யான பிரம்மசாரி நிலையை விட சிறந்த வாழ்க்கை கிடையாது. நீ எது வேண்டுமானாலும் செய்ய லாம். உனக்கு முழு சுதந்திரம்! நீ சுவாசிப்பதோடு மட்டுமல்ல சுவாசிப்பதையும் உணரமுடியும்! இப் பொழுது நான் வீட்டுக்குப் போகிறேன். அங்கு யாரும் யாரும் என்னை எங்கே போனாய் என்று கேட்க முடியாது. எனக்கு நானே முதலாளி. குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை, அது குற்றத் தண் டனையை விட மோசமானது. அலங்காரங்கள், தடபுடல்கள், கிசுகிசுக்கள், அலறல்கள் எனப்பல விஷயங்கள். எப்பொழுதும் விருந்தினர்கள் வந்த வண்ணம் இருப்பார்கள். ஒன்றன்பின் ஒன்றாகக் குழந்தைகள் இந்த உலகிற்குள் தவழ்ந்து வந்து கொண்டே இருக்கும். செலவினங்கள் போதும். ஆளைவிடு!”

“இதோ இன்னும் கொஞ்சம் நேரத்தில் முடித் துவிடுவேன். பிறகு...” என்று பேனாவை எடுத்தான் குவால்டின்.

“ஆகட்டும், ஆகட்டும் உன் மனைவி ஒரு உண்மையான பேயாக மாறாமல் போனது இருக் கட்டும். ஆனால், அவளே ஒரு பெட்டிக்கோட் அணிந்த சைத்தானாக இருந்திருந்தால்? அவள் அப்படிப்பட்டவளாக இருந்தால், இடைவிடாது

தொல்லை கொடுப்பவளாக இருந்தால் என்ன ஆகியிருக்கும்? யாராக இருந்தாலும் அழாமல் இருக்க முடியாது. உன்னையே எடுத்துக் கொள், நீ தனி ஆளாக இருந்தபோது நீ ஒரு மனிதப் பிறவியைப் போல் இருந்தாய். உன் மனைவியுடன் திருமணம் ஆனபோது, நீ உடைந்துபோய் சோகத் துக்கு இரையானாய். இந்த ஊரே பார்க்க உனக்கு அவமானத்தை ஏற்படுத்தினாள். உன்னை வீட் டைவிட்டு வெளியே துரத்தினாள். இதில் என்ன புண்ணியம்? இப்படிப் பட்ட மனைவிக்கு யாரும் வருத்தப்பட மாட்டார்கள்." என்று கூறி முடித்தான்.

குவால்டின் சிரித்துக்கொண்டே, "இல்லை எங்களுக்குள் ஏற்பட்ட பிரிவுக்கு நான்தான் கார ணம்." என்றான்.

"பொறு, அப்படி எல்லாம் பேசாதே! எனக்கு அவளைப் பற்றித் தெரியும். அருவருப்பானவள், தன்னிச்சையாகச் செயல்படுபவள், தந்திரமான வள்! அவளிடமிருந்து வெளிவரும் ஒவ்வொரு வார்த்தையும் தேள் கொடுக்கின் விஷம் போன் றது. அவள் பார்வையோ கத்திக்குத்துக்குச் சமம். வார்த்தையில் அடங்காத அளவுக்கு இறந்து போனவளிடம் அவ்வளவு கெட்ட எண்ணம் இருக் கிறது." என்றான்.

"இறந்து போனவளா? என்ன சொல்ல வரு கிறாய்?" கண்களை அகல விரித்துக் கேட்டான் குவால்டின்.

"இறந்து போனவள் என்றா சொன்னேன்?" என்று சட்டென்று பேசுவதை நிறுத்தியதோடு வெட்கத்தில் தலை குனிந்தான். உடனே சுதாரித் துக் கொண்டு, "நான் அப்படி எதையும் சொல் லவில்லை. உண்மையிலேயே கடவுள் சாட்சியாக, அதற்குள் உன்முகம் வெளிறிவிட்டது! ஹி! ஹி! உனக்கு என்னவெல்லாமோ காதில் விழுகிறது!"

“நீ அன்னா இவோனா வீட்டுக்கு இன்று போய் இருந்தாயா?”

“ஆமாம். இன்று காலை அங்கு போனேன். அவள் படுத்துக்கிடந்தாள். அருகில் இருந்த வேலைக்காரிகளை அதட்டிக் கொண்டிருந்தாள். முதலில் அவர்கள் பரிமாறியது சரியில்லையாம். அடுத்து வேறு ஒரு விஷயம். தாங்கிக் கொள்ள முடியாத தொல்லைகளைத் தரும் பெண். எந்த விஷயத்திற்காக அவளை நீ விரும்புகிறாய் என்று எனக்குப் புரியவில்லை. கடவுள் தான் அவளைப் பார்த்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு சோக மான ஆளப்பா நீ. உனக்கு சுதந்திரம் தரும்படி கடவுள் அவளுக்கு அருள் புரியட்டும். நீ வாழ்க்கை யில் கொஞ்சமாவது சுதந்திரமாகவும் உற்சாகமாக வும் இருப்பாய். நீ வேறு யாரையாவது திருமணம் செய்து கொள்ளலாம். சரி, சரி நான் நிறுத்திக் கொள்கிறேன். கோபப்படாதே! நான் ஒன்றும் அப் படிச் சொல்லவில்லை. அந்தக்கால மனிதர்கள் போல் இது என்னுடைய பார்வை. ஆனால், நீ உன் னுடைய பாதையிலேயே போ. உனக்கு விருப்பம் என்றால் அவள் மீது நேசம் வை. வேண்டாமென் றால் விட்டுவிடு. அதாவது, உன் இஷ்டம் என்று சொல்கிறேன். அவள் உன்னுடன் வாழவில்லை. உன்னைத் தெரிந்து கொள்ளவும் அவள் விரும் பவில்லை. இப்படிப்பட்டவள் என்ன மாதிரியான மனைவி அவள்? அருவருப்பும் நோயும், உற்சாக மும் கொண்டவள். அவள் குறித்து வருத்தமடைய எதுவும் இல்லை. அவள் அப்படியே...”

நீ பக்குவமாகப் பேசக்கூடிய ஆள், அரிஸ் தார்க்! என்று பெருமூச்சுவிட்ட குவால்டின், “நேசம் என்பது முடி இல்லை. போகிற போக்கில் அதை பிடுங்கி எறிந்து விட்டுப் போக.” என்றான்.

“அவளை நேசிக்க ஏதோ ஒரு விஷயம் இருப் பது போல் அல்லவா பேசுகிறாய்! அருவருப்பைத் தவிர அவளிடமிருந்து நீ எதையும் இதுவரை பெற்றதில்லை. வயதான என்னை மன்னித்துவிடு. ஆனால் எனக்கு அவளைப் பிடிக்கவில்லை. அவ ளைப் பார்க்கவே என்னால் முடியாது. அவள் இருக்கும் குடியிருப்பைக் கடந்து செல்லும் போது அவளைப் பார்க்காமல் இருப்பதற்காக என் கண் களை மூடிக் கொள்வேன். கடவுள் அவளுக்குத் துணையிருக்கட்டும். அவள் சாந்தியடையட்டும்.. ஆனால், எனக்கு அவளைப் பிடிக்காது. பாவி தான்!”

“இங்கே பார் அரிஸ்தார்கா, உன்னை அறியா மல் வாய் தவறி இரண்டாவது முறையாகச் சொல் லிவிட்டாய். அப்படியானால் அவள் இறந்து விட் டாளா?” என்ற குவால்டின்னின் முகம் வெளிறிப் போனது.

“யார், யார் இறந்து போனது? யாரும் இறக்க வில்லை. இறந்து போனவளை எனக்குப் பிடிக் காது அவ்வளவுதான். அதாவது, இறந்து போன வள் இல்லை, ஆனால் அவளுடைய.. உன் அனுஷ்கா...” என்று தடுமாறினான்.

“அதாவது, அவள் இறந்து விட்டாளா? அரிஸ் தார்க் என்னை சித்திரவதை செய்யாதே! நீ எல்லா வற்றையும் போட்டுக் குழப்புகிறாய்!.. பிரம்மச்சரிய வாழ்க்கையைச் சிலாகித்துப் பேசுகிறாய்... அவள் இறந்து விட்டாள். அப்படித்தானே?”

“அவள் ஏன் சாக வேண்டும்?” என்று கேட்ட அரிஸ்தார்க் தொண்டையைச் செருமிக் கொண் டான். “நீ மிகவும் வேகமாகப் புரிந்து கொண்டு விடுகிறாய். ஆனால், அவள் இறந்ததாகவே இருந் தாலும், நாம் எல்லோரும் இறக்கப் போகிறவர் கள் தாம். ஒருவேளை, அவள் இறக்க வேண்டிய

தேவை இருக்கலாம். நீயும் இறப்பாய். நானும் அப் படித்தான்.”

குவால்டின்னின் கண்கள் சிவந்துபோய் கண் ணீர் சுரந்தது.

“எத்தனை மணிக்கு?” என்று சட்டெனக்கேட் டான்.

“எந்த மணியும் இல்லை. இப்பொழுது நீ பிதற் றுகிறாய். அவள் இறக்க வில்லையே! அவள் இறந் ததாக யார் உனக்குச் சொன்னது?

“அரிஸ்தார்கா, உன்னைக் கெஞ்சிக் கேட்கி றேன். என் மனதை நோகடிக்கக் கூடாது என்று பார்க்காதே!”

“உன்னிடம் பேசமுடியாது. நீ ஏதோ சின் னக் குழந்தைபோல் இருக்கிறாய். அவள் இறந் துவிட்டாள் என்று நான் உனக்கு சொன்னேனா? நான் அப்படிச் சொன்னேனா? எதற்காக இப்படி விசும்புகிறாய்? போய் அவளை ஆராதனை செய். அவள் உயிருடன் நலமாக இருக்கிறாள். அவளை நான் பார்க்கப்போனபோது அத்தையுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். மேலும், இறுதிச்சடங் குகளைப் பாதிரியார் மாவேய் கவனித்துக் கொண் டிருந்தார். அந்த வீடே அதிரும்படி அவள் சத்தமா கக் கத்திக் கொண்டிருந்தாள்.”

என்ன இறுதிச்சடங்கு? ஏன் நடக்க வேண் டும்?”

“இறுதிச்சடங்கா..? சரியாகச் சொன்னால் அது இல்லை. பார்க்கப்போனால்.. சாதாரண பிரார்த் தனை என்று தான் சொல்ல வேண்டும். அதாவது.. இறுதிச் சடங்கெல்லாம் ஒன்றும் இல்லை... வந்து... ஏதோ.... அங்கு எதுவுமே நடக்கவில்லை.

இப்படி எதைஎதையோ கூறிய அரிஸ்தார்கா எழுந்து நின்று சன்னல்பக்கம் திரும்பி இரும ஆரம் பித்தான். பிறகு, ''எனக்கு இருமல் இருக்கிறது. எங் கிருந்து எனக்கு இந்த ஜலதோஷம் பிடித்தது என்று தெரியவில்லை,'' என்றான்.

குவால்டின்னும் எழுந்து கொண்டான். அவன் மேசை அருகில் குறுக்கும் நெருக்குமாக வேகமா கப் பதற்றத்துடன் நடக்க ஆரம்பித்தான்.

நடுங்கும் கைகளுடன் தன் தாடியை வேகமாக இழுத்தபடியே, ''நீ எதையோ என்னிடம் மறைக் கிறாய். இப்பொழுது எனக்கு புரிகிறது... எல்லாம் புரிகிறது. இந்த பூசி மெழுகும் சாதுர்யமெல்லாம் எதற்கு என்று தெரியவில்லை. நேரடியாக அதைச் சொன்னால் என்ன? அவள் இறந்துவிட்டாள் இல் லையா?''

''ஹூம்... நான் அதை எப்படி உனக்குச் சொல் வேன்?

தோள்களைக் குலுக்கிக்கொண்ட அரிஸ் தார்க், ''அவள் இறந்து விட்டாள் என்ற அளவுக் குச் சொல்ல முடியாது. அதாவது... பார்த்தாயா! அதற்குள் அழுகிறாயே! எப்படியும் நாம் எல்லோ ரும் இறக்கத்தான் போகிறோம். இறக்கக்கூடிய வள் அவள் ஒருத்தி மட்டும் இல்லை. கடைசியில் நாம் எல்லோருமே வேறு ஒரு உலகத்துக்குத்தான் போகப் போகிறோம். எல்லோரும் பார்க்கும்படி ஏன் அழுகிறாய்? அவள் நினைவைப் போற்ற இதைவி டச் சிறப்பாக வேறு ஏதாவது செய்யலாம். நீ சிலுவை போட்டு கொள்ள வேண்டும்.'' என்றான்.

சிறிது நேரம் அரிஸ்தார்க்கை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த குவால்டின்னின் முகம் மிகவும் வெளிறிப்போனது. பின் வெறிபிடித்தது போல் அழுதபடியே மயங்கி சாய்வு இருக்கையில்

விழுந்தான். சுற்றியிருந்த மேசைகளில் வேலை பார்த்துக் கொண்டிருந்த சக ஊழியர்கள் துள்ளி எழுந்து அவனுக்கு உதவ ஓடி வந்தனர். தன் பின் தலையைச் சொறிந்துகொண்ட அரிஸ்தார்க் சிடு சிடுப்புடன் பேசினான்.

"கடவுள் சத்தியமாக, எல்லாம் சரியான தொந் தரவு பிடித்தவர்கள் என்று சொல்வேன். அதோ பாருங்கள் அவன் விசும்புவதை. சரி உங்களைக் கேட்கிறேன். எதற்காக அவன் விசும்புகிறான்? குவால்டின்னை உலுக்கிப் பார்த்தான். "மிஷா. உனக்கு ஒன்றும் இல்லையே? மிஷா! அவள் இன் னும் இறக்கவில்லை தெரியுமா! அவள் இறந்து விட்டதாய் யார் உனக்குச் சொன்னது? இன் னும் நம்பிக்கை இருக்கிறது என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். மிஷா! ஏய் மிஷா! அவள் இறக்க வில்லை என்று நான் தான் சொல்கிறேனே.

நாம் இரண்டு பேரும் ஒன்றாகப்போய் அவ ளைப் பார்ப்போமா? இப்பொழுது புறப்பட்டால், இறுதிச்சடங்குகளுக்குள் நாம் போய் சேர்ந்து விட லாம். நான் என்ன சொல்கிறேன்? இல்லை இறு திச் சடங்கு இல்லை. இரவு விருந்துக்கு.... மிஷா! அவள் இன்னும் உயிருடன் தான் இருக்கிறாள் என்று நான் உனக்கு உத்தரவாதம் தருகிறேன். இல்லையென்றால் என்னைக் கடவுள் கொல்லட் டும்! என் கண்கள் வெளியே பிதுங்கி வரட்டும்! என்னை நீ இன்னும் நம்பவில்லையா? அப்படி யென்றால், நாம் இருவரும் போய் அவளைப் பார்ப் போம். அப்படி அவள்... என்னை என்னவேண்டு மானாலும் சொல்லித் திட்டு, எப்படி அவன் இந்த முடிவுக்கு வந்தான்? எனக்குப் புரியவில்லையே. இறந்தவள் வீட்டுக்கு நானே போய் இருந்தேன். அதாவது.. இறந்தவள் வீடு இல்லை... அட..ச்சே"

கைகளை வேகமாக ஆட்டியபின் எச்சில் துப் பிவிட்டு, தலைமை அலுவலகத்தில் இருந்து வெளியேறிய தளபதி, இறந்த பெண்மணியின் குடி யிருப்புக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்த சோபா ஒன்றில் போய் விழுந்தவன், தன் முடியை பிடித்துக் கொண்டு விரக்தியாகப் பேசினான்.

“நீங்களே அவனிடம் போங்கள். இந்த தக வலைப் பெற நீங்களே யாராவது அவனைத் தயார் செய்யுங்கள். என்னை விட்டு விடுங்கள். என்னால் முடியாது! அவனிடம் நான் இரண்டே இரண்டு வார்த்தைகள் தான் சொன்னேன். சும்மா ஒரு குறிப்புதான் கொடுத்தேன். இப்பொழுது அவ னுக்கு ஏற்பட்ட நிலையைப் பாருங்கள். அவன் மயக்கமாகி சாகக் கிடக்கிறான்! இனி ஒருமுறை நான் போக மாட்டேன்! கோடி கோடியாய் கொட்டி கொடுத்தாலும் முடியாது! நீங்களே போய்ச் கொள் ளுங்கள்”.

****

இக்கதை 1885 ஆம் ஆண்டு
பீட்டர் பர்க்கஸ்கயா கெஸட்டாவில்
முதன்முதலில் வெளியானது.

***